வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu வார மலர் ඊළනාඩු

Email : news@eelanadu.lk மலர் : 03 02.01.2022 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 28 பக்கங்கள் : 20






08

இந்தியாவின் அயலவராகவும் நண்பராகவும் இலங்கைத் தீவு தொடருமா?



09

சமமற்ற நீதியுடன் ஒரு சமர்!



10

நீர் பயன்பாட்டின் சிக்கலை சொல்லுகிற 'டே ஸீரோ'



13

2021 உதைபந்து உலகம்!

### தமிழ், மலையக, முஸ்லிம் கட்சிகள்:

# ஒருமித்த நிலைப்பாட்டை எட்டுவதற்கு புதிய நகல்!

### நேற்று கூடிய கூட்டத்தில் தீர்மானம்

கொழும்பு, ஜனவரி 02

வடக்கு - கிழக்கு தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் ஆகிய தமிழ் பேசும் தரப்புக்களின் ஒருமித்த நிலைப்பாட்டை - பொதுவான அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் பொது ஆவணத்தைத் தயாரிக்கும் முயற்சியில் புதிய நகல் ஒன்று நேற்றைய கூட்டத்தில் இறுதி செய்யப்பட்டுள்ளது. தமிழ்பேசும் கட்சிகளின் தலைவர்களின் பரிசீலனைக்கு அது வழங்கப்பட்ட பின்னர் தீர்மானம் எடுக்கப்படும்.

19

## கிளிநொச்சியில் நேற்றிரவு இளைஞர் குத்திக்கொலை!

கிளிநொச்சி, ஜன. 02

கிளிநொச்சி - பரந்தன் பகுதியில் கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்ட ஒருவர் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றுள்ளது. இதில், 28 வயதான கார்த்தி என அழைக்கப்படும் நபரே கொலையானார்.

உயிரிழந்தவரின் உடலம் கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம்

19

### டான் தொலைக்காட்சி வழங்கும்

## 'சாதனை தமிழர்' விருது பெற்றார் தொழில் முயற்சியாளர் சாய்ராணி



யாழ்ப்பாணம், ஜன. 02

டான் தொலைக்காட்சி வருடாந்தம் வழங்கும் சாதனை தமிழர் விருது முல் லைத்தீவு - புதுக்குடியிருப்பை சேர்ந்த சுயதொழில் முயற்சியாளர் கி. சாய்

19

## உயிர்த்த ஞாயிறு தாக்குதல்: பிரதான சூத்திரதாரி யார்?

### இராதாகிருஷ்ணன் எம். பி. கேள்வி

கொழும்பு, ஜன. 02

"உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சூத்திரதாரி இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. யார் அந்தப் பிரதான சூத்திரதாரி? இந்தத் தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன்னமும் நீதி நிவாரணம் கிடைக்கவில்லை."

- இவ்வாறு

19

## கசூரினா கடலில் குளித்த மாணவன் மூழ்கி மரணம்!



யாழ்ப்பாணம், ஜன. 02

நண்பர்களுடன் காரைநகர் கசூரினா கடலில் குளித்த மாணவன் அலை அடித்துச் சென்றதில் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

கோண்டாவில் - தில்லையம்பதியை சேர்ந்த யாழ். இந்துக் கல்லூரியில் உயர்

19

## நாட்டில் 12 வீதமானவர்கள் ஒமைக்ரோனால் பாதிப்பு!

கொழும்பு, ஜன. 02

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தினால் ஒமைக்ரோன் பிறழ்வு தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள தரவுகளின் அடிப்படையில், நாட்டில் நூற்றுக்கு 12 வீதமானோருக்கு ஒமைக்ரோன் தொற்று ஏற்பட்டுள்ளது என்று எதிர்வு கூற முடி

19

# டிப்பர் - மோட்டார் சைக்கிள் விபத்து; முல்லைத்தீவில் 2 இளைஞர்கள் பலி!



### இளைஞர் ஒருவர் படுகாயம்

முல்லைத்தீவு, ஜன. 02

டிப்பர் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிய விபத்தில் இரு இளைஞர்கள் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

முல்லைத்தீவு - கேப்பாபிலவு பகுதியில் நேற்று மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

19



## நல்லூர் ஆலயத்திற்குள் செல்ல நேற்றுமுதல் புதிய நடைமுறை!

யாழ்ப்பாணம், ஜன. 02

பாரம்பரியங்களை பாதுகாக்கும் வகையில் நல்லூர் ஆலயத்தில் புதிய நடைமுறையை நேற்று முதல் ஆலய நிர்வாக அறிமுகப்படுத்தியுள்ளார்.

அரைக்காற் சட்டை அணிந்து வரும் ஆண்கள்,

19

## 41 ஒமைக்ரோன் தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் அடையாளம்

### சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 02

நாட்டில் நேற்றுமுன் தினம் அடையாளம் காணப்பட்ட, 41 ஒமைக்ரோன் தொற்றாளர்களுடன் தொடர்பிலிருந்தவர்கள் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும்

19

## பாடசாலைகள் நாளை ஆரம்பம்

கொழும்பு, ஜன. 02

அரச மற்றும் அரசாங்கத்தால் அனுமதிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள் அனைத்தும் நாளை திங்கட்கிழமை மீள ஆரம்பமாகவுள்ளன.

2021 ஆம் ஆண்

19

# இப்படியும் நடக்கிறது...!

ஈழநாடுவின் தாய்வீடான டான் குழுமத்தின் முதல் தொலைக்காட்சியான டான் ரீ. வி. நேற்றுமுன்தினம் தனது இருபத்தியோராவது பிறந்ததினத்தைக் கொண்டாடியிருந்தது.

அது பற்றிய சில தகவல்கள் இந்த ஊர்க்குருவிக்கும் தெரியும் என்பதால் அதனை இங்கே தரலாம் என்று நினைக்கிறேன்.

டான் ரீ. வி. கடந்த சில வருடங்களாக ஒவ்வொரு புத்தாண்டையும் வரவேற்கும் வகையில் சிறப்பு நிகழ்ச்சியை நடத்தி வருகின்றது.

உலகில் எல்லா நாடுகளிலுமே புத்தாண்டு பிறக்கின்றபோது அந்தந்த நாடுகள் தத்தமது நாட்டின் முக்கிய அடையாளமாக விளங்குகின்ற இடத்தில் வாணவேடிக்கைகளுடன் புத்தாண்டை வரவேற்கும் நிகழ்ச்சியை செய்வதுண்டு. உதாரணமாக பிரான்ஸ் நாடு ஈபிள் ரவரில் புத்தாண்டு பிறக்கின்ற நேரத்தில் வாண வேடிக்கையால் கண்கவர் நிகழ்ச்சியை நடத்தும்.

அதுபோல எல்லா நாடுகளுமே செய்வதுண்டு. இவை அந்தந்த நாடுகளால் செய்யப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தின் அடையாளமாக இருக்கும் மணிக்கூட்டுக்கோபுரத்தை வர்ண விளக்குகளால் அலங்கரிக்கும் டான் ரீ. வி, அங்கு புத்தாண்டு பிறக்கின்றபோது நடத்தும் வாண வேடிக்கை யாழ்ப்பாண மக்களுக்கு அரிய விருந்தாக வருடப் பிறப்பில் கிடைத்து வருகின்றது.

கடந்த ஆண்டு கொரோனா உச்சத்திலிருந்தபோதும் மக்களின் பங்களிப்பு இன்றி அதனை நடத்தி, தொலைக்காட்சி மூலம் மக்கள் கண்டுகளிக்க வழிசெய்தனர். வழக்கமாக நடக்கும் இசை நிகழ்ச்சி அவர்களின் நாவற்குழியிலுள்ள பிரமாண்ட ஸ்ரூடியோவில் நடந்தது. வருடாவருடம் அவர்கள் வழங்கும் சாதனைத் தமிழர் விருது வழங்கும் நிகழ்வும் அந்த ஸ்ரூடியோவிலேயே நடந்து முடிந்தது. கடந்த ஆண்டைப்போல நாவற்குழி ஸ்ரூடியோவிலேயே இந்த ஆண்டும் கொண்டாட ஏற்பாடுகள் நடந்தன.

இவ்வருட நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகள் நடக்கின்றபோது, டான் குழுமத் தலைவர் குகநாதன் பிரான்ஸில் இருந்தார். யாழ்ப்பாண அலுவலகத்தில் இருக்கும் பிரதம செயல்பாட்டு அலுவலர் செல்வச்சந்திரன், பிரான்ஸில் இருந்த அவருக்கு, இந்த ஆண்டு டான் ரீ.விக்கு கீ பேத்டே அல்லவா? அதனை கொண்டாடவேண்டாமா என்று கேட்டு குறுந்தகவல் அனுப்பினார்.

அதற்கென்ன புத்தாண்டு வரவேற்பு நிகழ்ச்சியுடன் அதனையும் சேர்த்து செய்யுங்கள் என்று பதில் அனுப்ப, ஏற்பாடுகள் நடந்தன.

இசை நிகழ்ச்சிகளை நடத்த பொலிஸ்மா அதிபர் திடீரென்று அனுமதி வழங்க, உடனேயே முற்றவெளியில் பிரமாண்ட மேடை அமைக்கப்பட்டு நிகழ்ச்சிக்கு மூன்று தினங்களுக்கு முன்னரே ஏற்பாடுகள் தொடங்கின. மேடைகள், பார்வையாளர்களுக்கான கொட்டகைகள் அமைத்து முடிந்ததும், இயற்கையின் திருவிளையாடல் தொடங்கியது. யாழ்ப்பாணத்தில் திடீரென்று மழைகொட்டத் தொடங்க முற்றவெளியில் விழாவை நடத்தமுடியுமா என்ற நிலை.

இரவு ஒன்பது மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமாக இருந்தது. ஆனால், ஆறு மணியிலிருந்து மழை தொடர்ச்சியாகப் பெய்து கொண்டிருக்க, நிகழ்ச்சியை ஒத்திவைக்கலாமா என்று டான் அலுவலர்கள் யோசிக்கத் தொடங்கினர்.

வழக்கமாக ஆண்டுதோறும் நடக்கின்ற இந்த வைபவத்துடன், டான் ஊழியர்களின் வருடாந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சியும் தனிப்பட்ட ஒரு நிகழ்ச்சியாக நடப்பதுண்டு. அன்றைய தினமே மாலை ஆறு மணிமுதல் அந்த நிகழச்சி நடக்கும். ஒன்பது மணிக்கு அனைவரும் முற்றவெளி சென்று (கடந்த ஆண்டு நாவற்குழி) இசை நிகழ்ச்சியை நடத்துவார்கள்.

நேற்றுமுன்தினம் கடும் மழை பெய்துகொண்டிருக்க அந்த ஊழியர் ஒன்றுகூடல் யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நடந்தது.

நிகழ்ச்சி ஆரம்பித்த சில நிமிடங்களில் அங்கு வந்துசேர்ந்த டான் குழுமத் தலைவர் குகநாதன், ஊழியர்கள் அனைவரையும் எழுந்து நின்று, 'நமது நிகழச்சி சிறப்பாக நடந்து முடிய இந்த மழை இடம்விட்டுத்தரவேண்டும் என்று, உங்கள் உங்கள் இஷ்ட தெய்வங்களை வேண்டுங்கள். ஒரு நிமிடம் அதற்காக பிரார்த்திப்போம்' என்றார்.

எல்லோரும் எழுந்து நின்றனர். தத்தமது இஷ்ட தெய்வங்களை வேண்டினர் என்று நம்பலாம். இந்த ஊர்க்குருவியும் அவர்களில் ஒருவர். வேண்டுதல் செய்தார்.

முற்றவெளிக்கு நிகழ்ச்சிக்கு போவதற்காக வெளியே வந்தபோது வானம் வெளித்திருந்தது. வெளியே வந்த செந்தமிழ் சொல்லருவி லலீசன், "எனது காதுகளில் சொன்னார், நானும் உண்மையாகவே கும்பிட்டேன், மழை நின்றுவிட்டது", என்று.

அவர்களின் கூட்டு வேண்டுதல் நடக்காமல் இருந்திருந்தாலும் மழை விட்டிருக்கலாம். அதுவேறு சங்கதி. ஆனால், அங்கிருந்தவர்களுக்கு அப்படியொரு நம்பிக்கை ஏற்பட்டிருக்கும் என்று நினைக்கிறேன். அவர்களுக்கு ஏற்பட்டதோ என்னவோ இந்த ஊர்க்குருவிக்கு ஏற்பட்டது. லலீசனுக்கும் தான்.

நாம் எல்லோரும் ஒற்றுமையாக நமது தேவைகளுக்காக உண்மையாக இறைவனிடம் இதுவரை வேண்டுதல் விடுக்கவில்லையோ என்ற கேள்வியும் கூடவே வந்தது.!

**- ஊர்க்குருவி.**

## திவ்வியராஜனின் நூல் அறிமுக நிகழ்வு

*யாழ்ப்பாணம், ஜன.02*

மக்கள் கலைஞர், முற்போக்கு எழுத்தாளர், ஊடக வியலாளர் வைரமுத்து திவ்வியராஜனின் 'இன்னும் கொஞ்ச நேரம் இருந்தால்தான் என்ன...' - ஓர் இதயத்தின் கதை - நூல் அறிமுக நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

ஈழத்தின் புகழ்பூத்த கலை இலக்கிய சமூக அரசியல் செயல்பாட்டாளர்கள் பங்குபற்றி நூல் தொடர்பான அறிமுக உரைகளை ஆற்றவுள்ளனர். சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைவாக இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தேசிய கலை இலக்கியப் பேரவையினர் அழைத்துநிற்கின்றனர்.

## வளம்மிகு மண்டூர் நூல் அரங்கேற்றம்

*மட்டக்களப்பு, ஜன. 02,*

கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் வெளியீடான முதுநிலை ஊடகவியலாளர் இ.பாக்கியராசாவின் வளம்மிகு மண்டூர் நூல் அரங்கேற்றம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லடியிலுள்ள கிழக்குப் பல்கலைக்கழக, சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் பேராசிரியர் ப. சந்திரசேகரம் அரங்கில் பேராசிரியர் செ. யோகராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்நிகழ்வில் மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் பொது முகாமையாளர் ஸ்ரீமத் சுவாமி தக்ஷ் ஜானந்தா ஆன்மீக அதி தியாக கலந்து சிறப்பிக்க கிழக் குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய நிபுணர் வே. விே கானந்தராசா பிரதம விருந்தினராகவும் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் செல்வி. இ. இராகுல நாயகி சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பிப்பர்.

மங்கள விளக்கேற்றல், இறை வணக்கம், அக வணக்கம் ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியையும் சிட்னி - அவுஸ்திரேலியா சுருதி லயா அக்கடமி தாபகரும் ஆசிரியையுமான திருமதி. மாலதி சிவசீலனின் தமிழ் வாழ்த்து மேற்படி சுவாமியின் ஆசியுரை மட்டக்களப்பு காந்தி சேவா சங்க பொதுச் செயலாளர் கதிர் பாரதிதாசனின் வரவேற்புரை, கிழக்கு ஊடக வியலாளர் ஒன்றியத் தலைவர் இ. தேவ அதிரனின் வெளியீட்டுரை, கிழக்குப் பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் அருட்பணி அ.அ. நவரெத்தினம் அடிகளின் ஆய்வுரை என்பன இடம்பெறும்.

ஸ்ரீமத் சுவாமி தக்ஷஜானந்தா நூலின் முதற் பிரதியை அவுஸ்திரேலியா வைத்திய கலாநிதி தி. சிவசீலனுக்கு வழங்கி நூலை அரங்கேற்றி வைப்பார். மருத்துவர் தி. சிவசீலனின் கருத்துரை, பிரதமவிருந்தினர் உரை, சிறப்பு விருந்தினர் உரை களை அடுத்து நூலாசிரியரின் பதிலுரை மற்றும் நன்றி நவிலலுடன் வளம்மிகு மண்டூர் நூலின் அரங்கேற்றம் நிறைவு பெறும்.

கல்வி tv CHANNEL-1

## 02.02.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

## 02.02.2021 ஞாயிற்றுக்கிழமை

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
02.01.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 18

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## ஒரு புதிய இணக்கப்பாட்டுக்கான தேவை

தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சிகள், மலையக மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சிகள் மற்றும் முஸ்லிம் மக்களை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான கட்சிகள் அனைத்தும் ஒரு பொதுப்புள்ளியில் சந்திப்பது தொடர்பில் பலசுற்று கலந்துரையாடல்கள் இடம்பெற்றிருக்கின்றன. விடயங்களில் பெருமளவு இணக்கப்பாடு காணப்பட்ட போதிலும், இன்னும் பொது ஆவணம் முழுமையடையவில்லை. (இந்த தலைப்பு எழுதப்படும் வரையில் இதுதான் நிலைமை). கலந்துரையாடல்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த ஆவணத்தில் என்ன இருக்கின்றது - என்ன இருக்க வேண்டும் என்பதற்கப்பால், மூன்று தசாப்தங்களுக்கு பின்னர் இவ்வாறானதொரு முயற்சி இடம்பெற்றிருக்கின்றது என்பதுதான் முக்கியமானது.

பல்வேறு முரண்பாடுகள் இருந்தபோதிலும் கூட, 1985 - திம்பு பேச்சில் அனைத்து விடுதலை இயக்கங்களும், அப்போதிருந்த பிரதான கட்சியான தமிழர் விடுதலை கூட்டணியும் ஒரு பொது இணக்கப்பாட்டிற்கு வந்திருந்தன. அந்த இணக்கப்பாட்டின் அடிப்படையில்தான் அனைவரும் ஓர் அணியாக இலங்கை அரசாங்கத்தை எதிர்கொண்டிருந்தனர். அதன் பின்னர் இன்று வரையில் ஒரு பொது இணக்கப்பாடு தொடர்பில் தமிழ் கட்சிகளுக்கு இடையில் உரையாடல்கள் இடம்பெற்றிருக்கவில்லை. பல முயற்சிகள் இடம்பெற்ற போதிலும்கூட, அவை எவையும் வெற்றியளிக்கவில்லை.

ஆனால், இப்போது அவ்வாறானதொரு சூழல் கனிந்திருக்கின்றது. இந்த வரலாற்று முயற்சிக்கான பிள்ளையார் சுழியை கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும் டி. பி. எல். எவ். (புளொட்) தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும் மேற்கொண்டிருந்தனர். இதனை ரெலோ ஒருங்கிணைக்கின்றது. முஸ்லிம் காங்கிரஸும், தமிழர் முற்போக்கு கூட்டணியும் இதில் இணைந்திருப்பது அரசியல் பெறுமதிமிக்கது.

1985 திம்பு பேச்சு பிராந்திய சக்தியான இந்திய பேரரசின் மேற்பார்வையில் இடம்பெற்றது. இப்போது மேற்கொள்ளப்படும் புதிய முயற்சி, மீண்டும் இந்தியாவை நோக்கி ஒரு கோரிக்கையை முன்வைப்பதை இலக்காகக் கொண்டிருக்கின்றது. திம்பு பேச்சின் விளைவாக வந்ததுதான், இந்திய - இலங்கை ஒப்பந்தமும் மாகாண சபை முறைமையுமாகும். அந்த மாகாண சபை முயற்சிக்கு ஓர் ஆபத்து நேரலாமோ - என்னும் சந்தேகங்கள் பரவலாக எழுந்திருக்கும் நிலையில்தான், இவ்வாறானதொரு முயற்சி அதிக கவனத்தைப் பெற்றிருக்கின்றது.

ஈழத் தமிழ் மக்களின் அரசியல் பிரச்னைகளுக்கும் முஸ்லிம் சமூகத்தின் மற்றும் மலையக மக்களின் பிரச்னைகளுக்கும் இடையில் சில அடிப்படையான வேறுபாடுகள் உண்டு. ஈழத் தமிழ் மக்கள் தனிநாட்டுக்கான போராட்டத்தை எதிர்கொண்டு, அதன் விளைவுகளை சுமந்திருக்கும் மக்கள் கூட்டம். எனவே, எமது மக்களின் பிரச்னைகளுக்கும் ஏனைய மக்களின் பிரச்னைகளுக்கும் இடையில் சில அடிப்படையான வேறுபாடுகள் இருப்பது இயல்புதான். ஆனால், ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் தமிழ் பேசும் மக்கள் கூட்டம் என்னும் அடிப்படையில், ஒரு பொது இணக்கப்பாட்டிற்கு வரவேண்டியது அனைவருக்குமான தேவையாகும்.

அனைவரின் பாதுகாப்புக்கும் இந்த இணக்கப்பாடு அவசியமாகும். இந்த அடிப்படையில்தான் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் முயற்சியை உற்றுநோக்க வேண்டும். வேறுபட்ட மக்களின் கட்சிகள் பங்குகொள்ளும்போது, ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வருவதில் சில இடர்கள் ஏற்படுவது இயல்பான ஒன்றுதான். அடிப்படையான அரசியல் விடயங்கள் பாதிக்கப்படாத வகையில், சில விட்டுக்கொடுப்புக்களை அனைவருமே செய்ய வேண்டும். அப்போதுதான் அனைவரும் எதிர்பார்க்கும் இணக்கப்பாடு ஏற்படும்.

1985 திம்பு பேச்சின்போது ஏன் அனைத்து தமிழ் அமைப்புகளும் இணக்கப்பாட்டுக்கு வரவேண்டியேற்பட்டது? அன்றைய சூழலில் தமிழ் ஆயுத இயக்கங்களுக்கிடையில் முரண்பாடுகள் இருந்தபோதிலும்கூட, அன்றிருந்த பிரதான நான்கு விடுதலை இயக்கங்கள் ஈழ தேசிய விடுதலை முன்னணி என்னும் பொதுவான பெயரில்தான் பங்குகொண்டிருந்தனர். ஏன்? - ஏனெனில், ஒரு வல்லரசின் மேற்பார்வையில் இடம்பெறும் பேச்சின்போது தனித்து செல்வதை விடவும் சேர்ந்திருக்கும் போதுதான், அது பலமானது. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு. இன்றைய சூழலிலும் அடம்பன் கொடிகள் திரளவேண்டிய வரலாற்று தேவையுண்டு. இப்போது ஏற்பட்டிருக்கும் அரசில் திரட்சியை எக்காரணத்திற்காகவும் குலைத்துவிடக்கூடாது. கூட்டமைப்பின் பங்காளிகள் இதில் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும்.

# அரசியலமைப்பின் மொழி உரிமை நடைமுறைப்படுத்தப்படுகின்றதா?

**த.மனோகரன்**




*1987ஆம் ஆண்டின் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் அரசியலமைப்பின் 13ஆவது திருத்தத்தினூடாக தமிழ் மொழிக்கு காத்திரமான உரிமை வழங்கப்பட்டது. இதை எவராலும் மறுக்கவும் முடியாது, மறைக்கவும் முடியாது.*

*குறித்த திருத்தத்தின்படி நாடு முழுவதற் குமான தேசிய மொழிகளாகத் தமிழும், சிங்களமும் இருக்கும் என்று கூறப்பட்டுள் ளது. அதன் மூலம் தமிழ் மக்களும், சிங்கள மக்களும் இந்நாட்டின் தேசிய இனத்தவர்கள் என்ற அங்கீகாரமும் பெறுகின்றனர்.*

*அதேபோல் இந்நாட்டின் அரச கரும மொழிகளாகச் சிங்களமும், தமிழும் இருக்குமென்றும், ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்குமென்றும் கூறப்பட்டுள்ளது. அதில் வடக்கு, கிழக்கு மாகாணங்களின் முதன்மை நிர்வாக மொழி அதாவது அரச கரும மொழி தமிழாக இருக்குமென்றும், ஏனைய மாகாணங்களில் சிங்களம் இருக்கும் என்றும் கூறப்பட்டுள்ளது.*

*இருப்பினும் நாட்டில் எப்பகுதியிலுமுள்ள ஒரு குடிமகனுக்கு தான் விரும்பும் எந்த மொழியிலும், எந்தவோர் அரச அலுவலகத்துடனும் தொடர்பு கொண்டு தனது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.*

*அரசாங்க வெளியீடுகள், படிவங்கள், சுற்று நிருபங்கள், அறிக்கைகள் உட்பட அனைத்தும் மூன்று மொழிகளிலும் வெளியிடப்பட வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. 13ஆம் திருத்தத்தில் கூறப்பட்டுள்ள மொழியுரிமைக்கு மேலதிகமாக 16ஆம் திருத்தத்தின் மூலம் மொழியுரிமைக்கு வலுவூட்டப்பட்டுள்ளது.*

*இவ்வாறுள்ள நிலையில் நடைமுறையிலுள்ள அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள தமிழ்மொழி உரிமையைப் பயன்படுத்தாது, அக்கறை செலுத்தாது இந்த நாட்டின் மக்கள் தமது அடிப்படை உரிமைகளான மொழியுரிமை, காணியுரிமை, கல்வியுரிமை, தொழில் உரிமை, பாதுகாப்பு உரிமை உட்பட பல வாழ்வுரிமைகளைப் பூரணமாக அடையாத நிலையிலேயே உள்ளனர். இவற்றை உரிய முறையில் தெளிவாகப் புரிந்து கொள்ளாத நிலையில் தமிழ் மக்களின் உரிமை தொடர்பில் கருத்துரைப்பது பொறுத்தமற்றது. ஏற்புடையதுமல்ல. அதிகாரப் பரவலாக்கல் வழங்கப்படுவதாலோ அல்லது பிரிவினையின் மூலமோ தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் நிலைநாட்டப்படும் என்ற எதிர்பார்ப்பு சாத்தியமாகும் என நம்பிக்கொண்டிருப்பதை விட இன்று நடைமுறையில் நாம் பெற்று உறுதிப்படுத்திக்கொள்ளக்கூடிய உரிமைகள் எவையென்பது பற்றி சிந்திப்பது பொருத்தமானதும், பொறுப்டையதுமாகும்.*

*சுதந்திரம் பெற்ற கடந்த எழுபத்து மூன்று ஆண்டுகளில் இலங்கையில் தமிழர்கள் இழந்த உரிமைகளே அதிகம். குடியுரிமை, வாக்குரிமை பறிப்பு, தமிழ் மொழியுரிமை பறிப்பு, அரசகரும மொழி அறிவின்மையால் தமிழ் அரச அலுவலர்களின் தொழிலுரிமைப் பறிப்பு, இனவெறிப் பயங்கரவாதச் செயற்பாடுகள் மூலம் காலத்திற்கு காலம் தமிழரின் காணி, சொத்துக்கள் பறிப்பு, தரப்படுத்தல் உட்பட பல திட்டங்கள் மூலம் கல்வியுரிமைப் பறிப்பு, இனவாத நோக்கச் செயல்பாடுகளால் பாதுகாப்பு உரிமைப் பறிப்பு என பல்வேறு பறிப்புகளால் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக அடிப்படை உரிமைகள் பலவற்றை இழந்துள்ளனர்.*


*இவற்றில் 1956ஆம் ஆண்டு பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட அரசகரும மொழிச் சட்டத்தின் மூலம் தமிழ் மொழி உரிமை பறிக்கப்பட்டது. இது இந்நாட்டின் இன முறுகலுக்கு ஒரு காரணியாகவும் அமைந்நதது.*

*புதிய அரசியலமைப்பு வேண்டும், அதிகாரப்பரவல் வேண்டுமென்று கூச்சலிடுவதால் என்ன பயன் கிட்டும்? மொழியே மனிதனின் மூச்சு என்பர். எமது தாய் மொழியைக் காப்பாற்ற நடைமுறைப்படுத்த ஏற்றவை ஆற்றப்பட்டால் அதன் மூலம் எமது ஏனைய அடிப்படை உரிமைகள் பலவற்றை மீட்டெடுத்து உறுதி செய்ய முடியும்.*

*13ஆம் திருத்தமானது இலங்கை அரசாங்கத்தின் விருப்பத்துடனோ, இலங்கைத் தமிழரின் அகிம்சை போராட்டத்தின் மூலமோ, ஆயுதப் போராட்டத்தின் மூலமோ பெறப்பட்டதல்ல. குறித்த ஏதுவாலேயே தன்மீது திணிக்கப்பட்ட திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்தவதில் அரசாங்கம் தயக்கம் காட்டுகின்றது என அனுமானிக்கலாம். ஆனால், தமிழர் தரப்பு 13ஆவது திருத்தத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற நன்மைகளை அடையப் பின்னிற்பது அல்லது குறித்த அரசியலமைப்பு திருத்தத்தை விமர்சிப்பது எவ்வாறு தமிழர் நலனுக்கு ஏற்புடையதாகும்.*

*காலத்தை பயிர்செய் என்பது போல இந்நாட்டின் அரசியலமைப்பில் தமிழ் மொழிக்கான உரிமை அதுவும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் கிடைத்த உரிமையை உறுதிப்படுத்த வேண்டும். அதற்காகப் பாடுபட வேண்டும். கிடைத்த இந்த அரிய சந்தர்ப்பம் இதுவரை பயன்படுத்தப்படவில்லை. இனியும் அந்த தவறைச் செய்யாமல் நாம் அவதானமாகச் செயல்பட வேண்டும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’





# இந்தவார ராசிபலன் 02.01.2022 – 08.01.2022

ஜனவரி. 02 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம் - மார்கழி - 18
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 4.30 - 6.00
திதி : அமாவாசை

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

மற்றவர் மத்தியில் உங்களின் புகழ் கூடும். வாழ்வில் புதிய பாதை புலப்படும். மகிழ்ச்சியான தகவல் கிடைக்கும். குடும்பத்தில் இனிய சம்பவம் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தோன்றும். மகன் அல்லது மகளுக்கு நல்ல செய்தி கிடைக்கும். மனதுக்கு பிடித்தவர்களுடன் பொழுதைக் கழிப்பீர்கள். முயற்சியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். உறவினருடன் வருத்தம் நீங்கி நெருக்கம் ஏற்படும். வீடு, நிலம் சம்பந்தமான முதலீடுகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நம்பியவர்களால் ஏமாற்றம் ஏற்பட வாய்ப்புண்டு.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

பணியாளர்களுக்கு பணிச்சுமை குறையும். புதிய பொறுப்புகள் கிடைக்கப் பெற்று நல்ல முன்னேற்றம் அடைவீர்கள். குடும்பத்தினர், நண்பர்களுடன் குதூகலமாகப் பொழுது போகும். பணி அல்லது தொழில் பற்றிய முயற்சியில் தடை நீங்கும். குடும்பததில் பிரச்னைகள் குறையும். எந்த சூழ்நிலையிலும் தைரியத்தை விட்டு விட வேண்டாம். கொடுக்கல், வாங்கலில் அவசர முடிவு எடுக்க வேண்டும். புதிய தொழில் செய்யும் எண்ணம் சிலருக்கு உண்டாகலாம். பணியாளர்கள் வெற்றி வாகை சூடும் வாரம் இது.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

பணிச்சுமை அதிகரிக்கும். சம்பந்தமில்லாத இடத்தில் திடீர் கோபம் உண்டாகாமல் கட்டுப்படுத்திக் கொள்வது நல்லது. பணவரவு சீராக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சிக்கு குறைவிருக்காது. மனச்சஞ்சலம் குறையும். உறவுகள் வருகை குறையும். வயிறு சம்பந்தமான சிரமம் வந்து சரியாகும். குடும்பத்தாருடன் பழகி மகிழ்வீர்கள். வீண் அலைச்சல் குறையும்.வருமானம் பெருகும். சகோதரர்களுக்கு உதவுவீர்கள். சாகசங்கள் செய்ய நினைக்க வேண்டாம். வீண்சச்சரவுகளைத் தவிர்ப்பது நல்லது. சிலருக்கு திடீர் அதிர்ஷ்டம் வரக் கூடும்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

உடல்நலனில் அக்கறை தேவை. குடும்பத்தில் குதூகலம் உண்டு. சேமிப்பு அதிகரிக்கும் .செலவுகள் மிதமாக இருப்பதால் நிம்மதி பிறக்கும். பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். மனதில் புதுத்தெம்பும், உற்சாகமும் கூடும். புதிய பொறுப்பை நிறைவேற்றுவீர்கள். சிலருக்குத் திருமணம் அல்லது குழந்தைப்பேறு காரணமாக உள்ளம் மகிழும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். வாகனத்தில் செல்லும் போது எச்சரிக்கை தேவை. வாகன வசதி முன்பைவிடக் குறையும். மனைவி , கணவர் மூலம் நன்மை அடைவீர்கள்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

கடந்த கால முயற்சி ஒன்று பலன் தர ஆரம்பிக்கும். உழைப்பால் லாபம் கிடைக்கும். புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும். கொண்டாட்டங்களால் மகிழ்ச்சி பொங்கும். பணவரவு அதிகரிப்பதால் மகிழ்ச்சி ஏற்படும். தேவையற்ற செலவுகளைத் தவிர்க்கப் பாருங்கள். சிலருக்கு முன்பிருந்த ஆரோக்கியக் குறைபாடு நீங்கும். வழக்குகளில் முன்னேற்றம் ஏற்படும். நீங்கள் செய்யும் சேவைகள் மக்களின் பாராட்டைப் பெறும். எதிர்பாலின நட்பின் மூலமாக ஆதாயம் கிடைக்கும். சிலர் வெற்றியின் மகிழ்ச்சியை அனுபவிப்பர்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

மனதில் தெளிவு ஏற்பட்டு அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். பொன்னான நேரத்தை வீணடிக்காமல் ஆக்கப்பூர்வமாகச் செலவிடுவது நல்லது. எதிர்பாலினத்தினரால் உற்சாகம் பெறுவீர்கள். அரசுப்பணியாளர்கள் அர்பணிப்பு உணர்வுடன் சேவை செய்வீர்கள். நன்மைகள் நடைபெறும். புதிய தொழிலைத் துவங்கும் எண்ணம் இப்போது வேண்டாம். உயர்பதவிகள் கிடைப்பதற்கான அறிகுறிகள் தோன்றும். ஆரோக்கியம் சீராகும். வாகனம் வாங்கும் முயற்சியில் சிறுதடைகள் இருக்கலாம்,

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

முன்னேற்றத்தின் மீது நாட்டம் கூடி நன்கு உழைப்பீர்கள். பணவரவு அதிகரிக்கும். நல்ல காரணங்களுக்காகச் செலவு செய்வீர்கள். நேர்மை, கடின உழைப்பால் முன்னேற்றம் காண்பீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பம் அகலும். தந்தையால் அனுகூலம் உண்டு. பணியிடத்தில் போதுமான ஆதரவு கிடைக்கும். உறவினர் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியமாகும். உடன்பிறப்புகளின் ஆதரவால் மகிழ்ச்சி பெருகும். கடந்த கால பிரச்னைகள் தீரும். பணவரவு திருப்தி தரும். மற்றவர்களுக்கு உதவி செய்து மகிழ்வீர்கள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

சனி, செவ்வாய், சந்திரன், புதன் நற்பலனைத் தருவர். பிள்ளையார் வழிபாடு வளம் தரும். கவலைகள் மறையும். குழந்தைகளின் திறமை கண்டு மனதில் மகிழ்ச்சி ஏற்படும். இல்லத்தில் நிம்மதி நிலைக்கும். நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மை உண்டாகும். கடுமையாக உழைத்து வெற்றி பெறுவீர்கள். மனைவி அல்லது கணவர் மூலமாக முன்னேற்றத்துக்கான ஆலோசனைகள் கிடைக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை உண்டாகும். முயற்சி வெற்றி பெறும். பிள்ளைகளால் கூடுதல் நன்மையும் மகிழ்ச்சியும் உண்டு.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

சந்திரன், ராகு, கேது தாராள நற்பலன் வழங்குவர். குருவாயூரப்பன் வழிபாடு நலம் தரும். சுபவிஷயங்களில் இருந்த தடை, தாமதம் நீங்கும். அரசு வகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களின் ஆதரவால் மனம் மகிழ்வீர்கள். திறமை மிக்க செயல்பாடுகளால் வெற்றியும், பாராட்டும் கிடைக்கும். அரசுப் பணிபுரிபவர்களுக்கு அனுகூலமான வாரம். உயர் அதிகாரிகளின் ஆதரவு உண்டு. பிள்ளைகளால் பெருமை ஏற்படும். பெண்களுக்கு நற்செய்தி கிடைக்கும். கடந்த கால சிரமங்களை மனதில் அசைபோட்டு மகிழ்வீர்கள்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

புதிய வகையில் திறமையை வெளிப்படுத்தி மற்றவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள். வாக்குவாதங்களைத் தவிர்ப்பது நல்லது. அவ்வப்போது மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம். எதிரிகளின் தொல்லை முடிவுக்கு வரும். பணியிடத்தில் – வியாபாரத்தில் நல்லவர்களின் ஆதரவு இருக்கும். எதிலும் நிதானமான முன்னேற்றம் இருக்கும். புதிய முதலீட்டால் லாபம் கூடும்.வீண்செலவுகள் குறையும். நண்பரின் செயலால் நன்மை காண்பீர்கள். புதிய முயற்சிகளில் லாபம் இல்லாவிட்டாலும் எதிர்கால வளர்ச்சிக்கு வழி உண்டாகும்.

## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். பெரிய மனிதர்களின் சந்திப்பு அனுகூலமாக இருக்கும். பணவரவு கிடைப்பதில் தாமதம் ஏற்படும். குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும். சிலருக்கு வயிறு சம்பந்தப்பட்ட உபாதைகள் ஏற்பட வாய்ப்புண்டு. உணவு, தூய்மை விஷயத்தில் எச்சரிக்கையாக இருப்பது நல்லது, எதிர்பார்த்த பெரிய தொகை வந்து சேரும் எதிர்பார்ப்பு ஓரளவு நிறைவேறும். பெற்றோரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். பணியாளர்கள் தங்களின் உழைப்பால் நன்மை அடைவார்கள்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

பொறாமைக்கு ஆளாக வேண்டாம். புதிய முயற்சியில் முன்னேற்றம் காண்பீர்கள். சுபவிஷயம் கனிய ஆரம்பிக்கும். இளைஞர்களுக்குப் பொற்காலம் ஆரம்பமாகும். வீடு, வாகனங்கள் வாங்கி விற்பதில் லாபம் கிடைக்கும். கோயில் தரிசனத்தால் மனதில் நிம்மதி ஏற்படும். தொழிலில் எதிர்பார்த்த பணவரவு கிடைப்பது சந்தேகமே. பக்திமயமாகப் பொழுது கழியும். பணியிடத் தொல்லை தீரும். சமூக சேவை செய்யும் பாக்கியம் ஏற்படும். அண்டை வீட்டாரை அனுசரித்து நன்மை காண்பீர்கள்

# ஏக்கப் பகிர்வு

பகிர்வு - 10

கனக்கிறது எனத் தெரிந்தும்...
உலர விட மனமின்றி..
நனைத்தே சுமக்கின்றோம்
சில ஈர நினைவுகளை...

என்ற வரிகளைச் சண்முகவடிவின் முகநூலில் கண்டேன். வாழ்விடம் வேறாகிலும் அனுபவம் ஒன்றே. அவசர யுகத்தைக் கடந்து பயணிக்கும் இந்தத் தலைமுறைக்கு இந்தப் புலம்பல் வேடிக்கையாகத் தோன்றலாம். ஆனால் நாம் உயிர்ப்போடு வாழ்ந்தோம் என்றதை நினைவூட்டுகின்ற வரிகளில் வலியும் உண்டு அதேசமயம் வலிமையும் உண்டு. பழைய அனுபவப் பகிர்வுதான்... ஆனால், இப்போதும் அதே உணர்வுடன்தான் நாம்... என மனம் ஏங்குகிறது.

இடர்காலத்தே பயணங்களைத் தவிர்க்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. முக்கியமாக சமூக இடைவெளியைப் பேணுமாறு அறிவுறுத்துகின்றனர். அதனால் பேருந்து போன்ற சன நெரிசலுடன் செல்லுகின்ற பொதுப் போக்குவரத்துப் பயணத்தைத் தவிர்க்க வேண்டியிருக்கிறது. ஆனால் முடியவில்லை. மனதுக்கியைவானதாக இல்லாத போதும் என் போன்றவர்களுக்குப் பயணிக்க வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை.

இருந்தும் பேருந்துப் பயணங்கள்தான் எம்மைப் பல வழிகளில் இற்றைப் படுத்துவதாகச் சொல்லலாம். அதனைப் பல சந்தர்பங்களில் நான் உணர்ந்திருக்கிறேன். நான் மட்டுமல்ல பலரது அனுபவமும் அஃதே. எதிர்பாராத பல சந்திப்புகள், விடுபட்ட நட்புகள், பேருந்துக்காகக் காத்திருந்தபோது நாம் சந்தித்த மனிதர்கள். அதனால் ஏற்பட்ட நட்பும் உறவும் அனுபவமும் என பலவற்றைச் சொல்லலாம். இதைவிட உளவியல் ரீதியாக ஏற்பட்ட மாற்றங்களும் அவை தந்த மன மாற்றங்களும் என இற்றைப்படுத்தல் பற்றிய பட்டியல் நீளுகின்றது.

தொலை தூரப் பயணங்கிலேயேதான் அதிக நேரம் ஒரு மாற்றுச் சூழ்நிலைக்குள் வாழ நேரிடுகிறது. அதனால்தான் என்னவோ குறுகிய தூரப் பயணங்களிலும் விட தொலை தூரப் பயணங்களிலேயே மேற் சொன்ன விடயங்கள் அதிகம் நடைபெற்றிருக்கின்றன. அங்கேயேதான் ஆன்மிக சிந்தினைகள் அதிகம் உதயமாகின்றன. பலர் பலவித சகிப்புகளைத் தாங்கிப் பயணிக்க நேரிடுவதும் அதற்குரிய ஒரு காரணமாக இருக்கலாம்.

தொலை தூரப் பயணத்தின்போதுதான் பேருந்து பல வழித்தடங்களுக் கூடாகப் பயணிக்கிறது. அந்தப் பயணமே அதிக கிராமங்களையும் நகரங்களையும் இணைப்பதாகவும் இருக்கிறது. பலவிதமான மனிதர்களை ஏற்றி இறக்குகின்ற பணிகளை அதிகம் பேருந்து முன்னெடுக்கிறது. குறிப்பாக சமூக ஏற்றத் தாழ்வுகளைக் களைவதாகப் பொதுப்போக்குவரத்துச் சேவைகள் காணப்பட்டாலும் வகுப்புகள் எதுவும் இல்லாது காணப்படுவது பேருந்தில் மட்டுமே. தொடர் வண்டிச் சேவைகளும்

இது போன்ற பணிகளை முன்னெடுத்தாலும் பேருந்து என்பது ஒரு தனிரகம்.

வடக்கைக் காட்டிலும் தென்னிலங்கைப் பயணங்களிலேயே அதிக உயிர்ப்புள்ள கிராமங்களையும் நகரங்களையும் கடக்க வேண்டியவாறு வழித்தடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மக்கள் வாழ்வியலோடு அமைந்த சிறு சிறு அளவிலான வியாபாரக் கடைகள். சுய வேலை வாய்ப்புக்காக ஏற்படுத்தப்பட்ட பல உணவுச் சாலைகள் எனப் பலவற்றை அங்கு காணலாம். அங்கேயே நாம் வாழ்ந்தவாறு பயணிக்கக் கூடிய சூழ்நிலை காணப்படுகிறது.

நான் சிறுவனாக இருந்தபோது ஒரு முறை கதிர்காம யாத்திரையிலே பங்குபற்றியிருந்தேன். அப்போது வடக்கில் இருந்து பேருந்துகள் தெற்குக்குச் செல்வதில்லை. இங்கிருந்து தொடர் வண்டி மூலமாகச் சென்று பின்னர் பஸ்வண்டியில் பயணிக்க வேண்டும். சில காலத்துக்குப் பின் ஏற்பட்ட சூழல் மாற்றத்தினால் வடக்கில் இருந்து கதிர்காமத்துக்கு நேரடிப் பேருந்துப் பயணம் சாத்தியமாயிற்று. பல உயிர்ப்புகளைக் கடந்து ஒரு நீண்ட பயணத்தை அதிலேயே அனுபவித்து இருக்கிறோம்.அதிலே அறவிடப்படும் கட்டணத்தைவிட பிறவற்றில் அதிக செலவுகள் ஏற்பட வாய்ப்பிருப்பதில்லை. மிக மலிவான பயணமாகவும் இருக்கும்.

தற்போது ஏற்பட்டுள்ள அபிவிருத்தி என்ற விடயத்தில் பலவற்றை நாம் இழந்துவிடுகிறோம். அதி வேகமாகச் செயற்பட வேண்டும் என்ற வகையில் பல வசதி வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. எல்லாவற்றிலும் விரைவுச் சேவைகள் வந்துவிட்டன. அனைத்திலும் விரைவு என்ற விடயம் அதிமுக்கியமாகக் கருதப்படுகிறது. அவற்றுள் ஒன்று அதிவேக நெடுஞ்சாலைகள் என்ற விடயம். இத்தகைய நெடுஞ்சாலைகளிலேயேதான் அதிவேகமாகப் பயணிக்க வண்டிகள் அனுமதிக்கப்படுகின்றன. கண்களைக் கட்டிக் கொண்டு சென்று இறக்குவதைப் போன்ற விடயங்களை நெடுஞ்சாலைகள் மிகவும் அருமையாக நிறைவேற்றுகின்றன.

விரைவு நெடுஞ்சாலைகளில் அனுபவித்துப் பயணிக்கின்றதென்ற ஒரு விடயம் இல்லாது போகின்றது. வேகம் விவேகத்தை இல்லாது செய்துவிடுகிறது என்று சுருக்கமாகச் சொல்லலாம். அது தொடர்பான ஒரு முகநூல் பதிவைக் கண்டேன். அது இந்திய தேசத்து அனுபவமாக இருந்தாலும் அதிவேக நெடுஞ்சாலை என்ற விடயமும் அது தொடர்பான உணர்வும் எல்லோருக்கும் பொதுவானது. "புதிதாய்ப் போடப் பட்டிருக்கும் தேசிய நெடுஞ்சாலைகளில் சர்...சர்ரெனப் பயணம் செய்து.. "கோயமுத்தூரிலே இருந்து, ஈரோட்டுக்கு ஒண்டே கால் அல்லது ஒண்டரை மணி நேரத்திலே போய்விடுகிறோம்" எனச் சொல்லிக் கொள்ளலாம்.. ஆனால், போகின்ற வழியிலே கருமத்தம்பட்டி, அவினாசி.. பெருமாநல்லூர்... விஜயமங்கலம் என பல ஊர்களைக் காணாமல்.... மனதுக்குக் கஷ்டமாக இருக்கிறது.

அப்படி ஊருக்குள்ளே புகுந்து போய்க் கொடிருந்த காலத்தில்... பிரயாணம் என்பது உயிர்ப்போடு இருந்த மாதிரியான ஒரு உணர்வு... ம்... ம்.. ஆனால், இப்போது...?? மரங்கள் சூழ்ந்த பாதைகளைக் காணோம்.., மக்கள் நிறைந்த ஊர்களைக் காணோம்.. அரலிச் செடிகளும் அரவமாய் நீளும் கருமைமிக்க சாலைகளுமாய்..... விரைவுச் சாலைகளில் பயணித்தல் என்பது இயந்திரத்தனமாய் ஆகிப் போன உணர்வு. அத்தனை வேகமாய்ப் பயணித்து எங்கே போய்க்கொண்டிருக்கிருக்கிறோம் என்றுதான் புரியவில்லை..

- கணபதி சர்வானந்தா




2022 ஆம் ஆண்டை வரவேற்கும் முகமாக வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு தீபங்கள் ஏற்றப்பட்டவேளை....! (படங்கள் - ஐ. சிவசாந்தன்)

# சீரற்ற காலநிலையால் யாழில் 37 பேர் பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 02

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத் தில் 14 குடும்பங்களை சேர்ந்த 37 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மாவட்ட அனர்த்த முகா மைத்துவப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ரி. என். சூரியராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சீரற்ற காலநிலை காரணமாக யாழ்ப்பாண மாவட்டத் தில் 14 குடும்பங்களை சேர்ந்த 37 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் சீரற்ற காலநிலையால் 5 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்தன.

சேத விபரங்கள் தொடர்பில் குறித்த பிரதேச செயலகத்தினூடாக விவரங்கள் சேகரிக்கப்பட்டு கொழும்பு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் அனுப்பி வைக்கப்பட உள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# புதிய சுகாதார வழிகாட்டல் நேற்று வெளியிடப்பட்டது!

கொழும்பு, ஜன. 02

நேற்று முதல் எதிர்வரும் 31 ஆம் திகதி வரை நடைமுறைக்கு வரும் வகையிலான புதிய சுகாதார வழிகாட்டல் வெளியிடப்பட்டுள்ளது.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்த்தனவால் இது வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி ஐந்தாம் வகுப்புக்கு மேல் 50 சதவீத மாணவ கொள்ளளவுடன் மேலதிக வகுப்புக்களை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டில், நாட்டில் முடக்க நிலையை அமுலாக்காமல் இருப்பதற்கும், வழமைபோல இயல்பு வாழ்க்கையைப் பேணுவதற்கும், அனைத்துப் பிரஜைகளும் சுகாதார வழிகாட்டல்களை கடுமையாக பின்பற்ற வேண்டும் என சுகாதார அமைச்சு வலியுறுத்தியுள்ளது. (ஐ)

# பஸில் ராஜபக்ஷ பிரதமரானால் கூட்டணிக்குள் பிளவு ஏற்படும்!

## அமைச்சர் வாசுதேவ எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 02

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை இவ்வருடம் முதல் முறையாக செயல்படுத்த எதிர்பார்த்துள்ளோம். நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்கவுள்ளார் என வெளியாகியுள்ள செய்தி அடிப்படை அற்றதாகும். அவ்வாறு நிகழ்ந்தால் அது கூட்டணிக்குள் பாரிய பிளவை ஏற்படுத்தும் என நீர்வழங்கல் துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கம் கடந்த 2 வருடகாலமாக நாட்டு மக்களின் சுகாதார பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளது.

கோவிட்-19 வைரஸ் தாக்கத்தை கட்டுப்படுத்த அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களும் கோவிட் தாக்கத்துடன் நிறைவடைந்தன.

நாட்டு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை கொவிட் தாக்க சவாலுக்கு மத்தியில் நிறைவேற்றியுள்ளோம். இந்த வருடம் முதல் வாக்குறுதிகள் அனைத்தையும் பூரணப்படுத்த எதிர்பார்த்துள்ளோம்.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்கவுள்ளார் என வெளியாகியுள்ள செய்தி பொய்யானது. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நலமாக வுள்ளார். அவர் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவதற்கு அவசியமில்லை.

நாட்டு மக்கள் அவர் மீது நம்பிக்கை வைத்தே 2019ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தினார்கள்.

நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ பிரதமராக பதவியேற்றால் அது கூட்டணிக்குள் பாரிய பிளவை ஏற்படுத்தும். யுகதனவி மின்நிலைய ஒப்பந்தம் தொடர்பில் அவருக்கும் பங்காளி கட்சி உறுப்பினர்களுக்கும் இடையில் சுமுகமான தன்மை கிடையாது.

சிறீலங்கா சுதந்திர பொது ஜன பெரமுன கூட்டணியில் அங்கம் வகிக்கும் பங்காளி கட்சிகளுக்கும், பிரதான ஆளும் கட்சிக்கும் இடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடுகளுக்கு இக்காலப்பகுதியிலாவது தீர்வு பெற்றுக் கொள்ள எதிர்பார்த்துள்ளோம் - என்றார். (ஐ)

# வேலணையூர் சுரேஷ் எழுதிய இரு கவிதை நூல்கள் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 02

கவிஞர் வேலணையூர் சுரேஷ் எழுதிய இரண்டு நூல்களின் வெளியீடு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் உள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

மானிடப் பேரிடல் (கொரோனா காலப் பதிவுகள்), குறும்புப்பா - 100 ஆகிய நூல்களே வெளியிடப்பட்டன.

படைப்பாளர்கள், ஊடகவியலாளர்கள் உட்பட்டவர்கள் பங்குகொண்டு நிகழ்வை சிறப்பித்தனர். மூத்த படைப்பாளரும் மிகச் சிறந்த எழுத்தாளருமான நா. யோகேந்திரநாதனால் இரு நூல்களையும் வெளியிட கலாசார உத்தியோகத்தர் மற்றும் கிராம அலுவலர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

இந்த நிகழ்விற்கு ஊடகவியலாளர் இளங்கீரன் தலைமை தாங்கினார்.

அறிமுக நிகழ்வு எதிர்வரும் 9ஆம் திகதி சரஸ்வதி மண்டபத்தில் சிறப்புற நடைபெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ)





# குழந்தைகளைக்கூட பட்டினிச் சாவுக்கு தள்ளுகின்றது நாட்டின் அரசாங்கம்

## சிறீதரன் எம். பி. சாடல்



கிளிநொச்சி, ஜன. 02

“சின்னக் குழந்தைகளைக் கூட பட்டினி போட்டு சாகடிக்கும் ஒரு நிலையை இந்த அரசாங்கம் உருவாக்க முயற்சித்துக் கொண்டு இருக்கிறது.

குடிக்கும் பால்மாவைக்கூட பெற முடியாதளவிற்கு பொருளாதாரம் அதலபாதாளத்திற்கு போயிருக்கிறது.”, என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பூநகரி பிரதேச சபையின் புதிய தவிசாளர் சிறீரஞ்சன் வரவேற்கும் நிகழ்வு பூநகரி பிரதேச சபையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சிறுகுழந்தைகளைக்கூட பட்டினி போட்டு சாகடிக்கும் ஒரு நிலையை இந்த அரசாங்கம் உருவாக்க முயற்சித்துக் கொண்டு இருக்கிறது.

குடிக்கும் பால்மாவைக்கூட பெற முடியாதளவிற்கு பொருளாதாரம் அதலபாதாளத்திற்கு போயிருக்கிறது. சொந்த மக்களையே - சொந்த மக்களின் குழந்தைகளையே கொல்கின்ற சூழலுக்கு இந்த அரசாங்கத்தின் நிலை மாறி இருக்கிறது.

இந்த சூழ்நிலையில் சிற்றுண்டிகள் உரிமையாளர் சங்கம் அறிவித்திருக்கிறது பால்தேநீர், தேநீர் கடைகளில் கேட்க வேண்டாம் என்று இலங்கையில் தேநீர்கூட குடிக்க முடியாத அளவிற்கு நிலை மாறி இருக்கிறது.

இந்த அரசாங்கம் பிரதேச சபைகளின் உடைய அதிகாரங்களை மீளப்பறிக்கின்ற முயற்சியில் இந்த அரசாங்கம் ஈடுபட்டு கொண்டு இருக்கிறது பொதுச் சுகாதார பரிசோதகர்கள் பிரதேச சபைகளுக்கு ஊடாகவே பணிகளை ஆற்றி வந்தார்கள். இப்போது அவர்களை சுகாதார அமைச்சோடு இணைத்திருக்கிறார்கள் அதே போன்று உள்ளூராட்சி சபைகளின் பொதுச் சுகாதார செயல்பாடுகளையும் மத்திய சுகாதார அமைச்சிற்கு கீழ் கொண்டு வருவதற்கு முயல்கிறார்கள்.

சுகாதார அமைச்சுக்கு கீழே பொதுச் சுகாதாரபணிகளை உள்வாங்கினால் பிரதேச சபைகளினுடைய சுகாதார நடவடிக்கைகள் செயற்பாடுகள் அவர்களின் மக்களுக்கான பணிகளை செய்ய முடியாத நிலை உருவாகும்.

ஒரு குறுநில அடிப்படையில் பிரதேச சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை பறிப்பதற்கு இந்த அரசாங்கம் முயற்சிப்பது ஒரு துர்ப்பாக்கியம் ஆகும்.

இந்த அரசாங்கத்தின் போக்குகள் இராணுவ ரீதியாகவும் முழு இராணுவ சிந்தனையோடும் நடைபெறுகின்ற காரணத்தினால் மக்களுக்கான பணிகள் அற்று ஒரு வெற்று அரசாங்கமாக இராசி இல்லாத அல்லது மக்களால் விரும்பப்படாத ஒரு தலைவனாக இந்த நாட்டினுடைய ஜனாதிபதி மாறியிருக்கிறார்.

மக்களால் விரக்தியடைந்திருக்கின்ற இந்த அரசாங்கம் தன்னுடைய செயல்பாடுகளை மாற்றிக் கொள்ள வேண்டும். மக்களின் விருப்பங்களின் அடிப்படையில் மக்களின் எண எண்ணங்களின் அடிப்படையில் செயல்படவேண்டும் - என்றார். (ஐ)

# ரூ. 1,500 கோடி போதைப்பொருள் கடற்படையால் கைப்பற்றப்பட்டன

கொழும்பு, ஜன. 02

**கடற்படையினரால் கடந்த ஆண்டு மட்டும் ஆயிரத்து 500 கோடி ரூபாய்க்கும் அதிக பெறுமதியான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன என்று கடற்படை ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.**

எதிர்கால சந்ததியினரை போதைப்பொருள் அச்சுறுத் தலிலிருந்து மீட்பதற்காக அர சாங்கத்தின் கொள்கையை நிறைவேற்றும் வகையில் கடற் படையினரால், கடந்த ஆண்டு முழுவதும் இலங்கை கடற் பரப்புக்களில் முன்னெடுக்கப் பட்ட சுற்றிவளைப்புக்களில் ஆயிரத்து 586 கோடி ரூபாய்க் கும் அதிக பெறுமதியுடைய பெருமளவான போதைப் பொருட்கள் கைப்பற்றப்பட் டுள்ளன.

கடல்வழியாக இடம்பெறு கின்ற போதைப்பொருள் கடத்தல் உள்ளிட்ட ஏனைய அனைத்து சட்ட விரோத செயல்பாடுகளையும் ஒழிப்ப தற்காக கடற்படையினரால் இலங்கை கடல் மற்றும் கரை யோர பிரதேசங்களிலும் மாத்திரமின்றி ஏனைய புல னாய்வு துறையினருடன் இணைந்து சர்வதேச கடற் பரப்பிலும் கண்காணிப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகிறன. இந்த நடவடிக்கைகளின் அடிப் படையிலேயே இவ்வாறு பெருந் தொகையான போதைப் பொருட் கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதற்கமைய இலங்கை மற்றும் சர்வதேச கடற்பரப்புக் களில் 74 சந்தர்ப்பங்களில் முன் னெடுக்கப்பட்ட கண்காணிப் புக்களின் போது 1268 கிலோ கிராமுக்கும் அதிக ஹெரோ யினுடன் 119 உள்நாட்டு சந்தேகநபர்களும் , 22 வெளி நாட்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோன்று 151 சந்தர்ப் பங்களில் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்புக்களில் 7,095 கிலோ கிராமுக்கும் அதிக கேரள கஞ்சாவுடன் 186 உள் நாட்டு சந்தேகநபர்களும் , 7 வெளிநாட்டு சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் 73 சந்தர்ப்பங்களில் முன்னெடுக்கப்பட்ட கண் காணிப்புக்களில் கிரிஸ்டல் மெதம்பிடமைன் (Crystal Methamphetamine) எனப்படும் 158 கிலோ கிராமிற்கும் அதிக ஐஸ் போதைப்பொருடன் 98 சந்தேகநபர்கள் கைது செய்யப் பட்டுள்ளனர். 16 சந்தர்ப்பங் களில் முன்னெடுக்கப்பட்ட கண்காணிப்புக்களில் 69 கிலோ கிராமுக்கும் அதிக உள்நாட்டு கஞ்சாவுடன் 27 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், 8 சந்தர்ப்பங்களில் முன்னெடுக்கப்பட்ட கண் காணிப்புக்களில் 88 கிலோ கிராமிற்கும் அதிக ஹசீஸ் போதைப்பொருளுடன் 9 உள் நாட்டு சந்தேகநபர்கள் கடந்த ஆண்டு கைது செய்யப்பட்டுள் ளனர் என்றும் தெரிவிக்கப் பட் டது. (ஐ)



# 2022 புதுவருட தினமான நேற்று மாமாங்கத்தில் விசேட பூஜை!

மட்டக்களப்பு, ஜன. 02

2022 புதுவருடப்பிறப்பு தினமான நேற்று அதிகாலை முதல் இந்து ஆலயங்களில் விசேட வழிபாடுகள் இடம் பெற்றன. கிழக்கிலங்கையின் வரலாற்று சிறப்புமிக்க மட்டக் களப்பு அமிர்தகழி ஸ்ரீமா மாங்கேஸ்வரர் ஆலயத்தில் புதுவருட பூஜை சிறப்பாக நடைபெற்றது.

ஆலயத்தின் பிரதமகுரு சிவஸ்ரீ ஆதிசௌந்தரராஜ குருக் களின் தலைமையில் புதுவருட பிறப்பு சிறப்பு பூஜை நேற்று நடத்தப்பட்டது.

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக சுகாதார நடை முறைகளைப் பேணியவாறு சமூக இடைவெளியை பேணிய வாறு வழிபாடுகள் முன்னெ டுக்கப்பட்டன.

நேற்று அதிகாலை விசேட அபிஷேக ஆராதனைகள் நடை பெற்று மாமாங்கேஸ்வரருக்கு அலங்கார தீபாராதனை நடை பெற்று புதுவருட சிறப்பு பூஜை சிறப்பாக நடைபெற்றது.

கொரோனா அச்சுறுத்தல் நீங்கவும் அதனால் பீடிக்கப் பட்டவர்கள் சுகம்பெற்று வழ மைக்கு திரும்பவும் அரசாங் கம், நாட்டு மக்கள் மகிழ்ச்சி யுடன் வாழ ஆசிவேண்டி பிரார்த்தனை முன்னெடுக்கப் பட்டது. இதன்போது ஆலயத் தால் புதிய ஆண்டைக் குறிக் கும் வகையிலான பஞ்சாங்க நாட்காட்டியும் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ஐ)

# யானைகளால் பயிர்கள் அழிவு; கட்டுப்படுத்துமாறு கோரிக்கை

மட்டக்களப்பு, டிசெ. 02

மட்டக்களப்பு - மண்முனை மேற்கு வவுணதீவு பிரதேச செய லாளர் பிரிவுக்குட்பட்ட உன் னிச்சைப் பகுதியில் உள்ள தோட்டமொன்று காட்டு யானைகளால் முற்றாக அழிக் கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் உன் னிச்சை இராஜதுரை நகரில் உள்ள தோட்டமொன்றில் சுமார் ஏழு ஏக்கர் நிலப்பரப்பில் வேளாண்மை, சோளம், கச்சான் போன்ற பயிர்கள் முற்றாக காட்டு யானைகளால் அழிக் கப்பட்டன.

யானைகளால் தமக்கு சுமார் 12 இலட்சம் ரூபாய்க்கு மேல் இழப்பு ஏற்பட்டுள்ளதாக தோட்ட உரிமையாளர் தெரி வித்தார்.

குறித்த பகுதியில் நீண்ட காலமாக மக்கள் குடியிருப்பு களை யானைகள் சேதப்படுத்தி வரும் நிலையில் யானையின் தாக்குதல்களினால் பெருமள வான பொருளாதார இழப்புகள் ஏற்பட்டு வருகின்றன என்றும், யானைகள் ஏற்படுத்தும் இழப் புக்களை கட்டுப்படுத்துமா றும் அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ - 6)

# தெரிவான பயனாளிகளுக்கு வளர்ப்பு ஆடுகள் வழங்கல்!

மட்டக்களப்பு, ஜன. 02

மட்டக்களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவு களில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஆடுகள் வழங்கி வைக்கப்பட்டன.

பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி , வீட்டு விலங்கு வளர்ப்பு மற்றும் சிறு பொரு ளாதார பயிர்செய்கையை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் பின்னடைவான கிராமப்புற மக்களின் வாழ்வா தாரத்தை மேம்படுத்துவதற் கான கிராமிய வீட்டு ஆடு வளர்ப்பு திட்டம் ஊடாக இந்த ஆடுகள் வழங்கப்பட்டன.

அந்தவகையில் மட்டக் களப்பு மாவட்டத்தின் மட்டக் களப்பு மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவுக்கு உட் பட்ட கிராம சேவையாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட 36 பயனாளிகளுக்கு இரண்டு ஆடுகள் வீதம் நேற்று வழங்கி வைக்கப்பட்டன.

பின்தங்கிய கிராமிய அபி விருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறுபொருளா தார பயிர்செய்கை மேம் பாட்டு இராஜாங்க அமைச்சின் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக் கீட்டில் பயனாளிகளுக்கான ஆடுகள் வழங்கி வைக்கப் பட்டன.

மட்டக்களப்பு மண்முனை வடக்கு திட்டமிடல் பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச செய லாளர் வி. வாசுதேவன் தலை மையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதிதிட்டமிடல் பணிப்பாளர் எ.சுதர்சன், மாநகர சபை உறுப் பினர் அசோக் மற்றும் திட்ட மிடல் பிரிவு உத்தியோகத்தர் கள் கலந்துகொண்டனர். (ஐ- 6)



# காயத்துடன் உயிருக்கு போராடும் யானைக் குட்டி!

முல்லைத்தீவு, ஜன. 02

முல்லைத்தீவு குமுழமுனை மேற்கு கரடிப்பூவல் பகுதியில் நேற்று முன்தினம் உடல்நிலை பாதிக்கப்பட்ட யானைக் குட்டி ஒன்று விவசாய நிலத்தில் வீழ்ந்துள்ளது. உயிருக்கு ஆபத் தான நிலையில், நடக்கமுடி யாத நிலையில் நிலத்தில் வீழ்ந்த நிலையில் அந்த யானைக் குட்டி காணப்படுகின்றது.

சுமார் மூன்றரை வயது டைய அந்த யானைக் குட்டி வாயில் காயத்துடன் உள்ள நிலையில் உணவு உட்கொள்ள முடியாத நிலையில் அந்த யானைக் குட்டி விளைநிலத்தில் வீழ்ந்து கிடந்தது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத் துக்கு கிராம மக்கள் தகவல் அளித்தனர். இதையடுத்து நேற்று முன்தினம் அந்தப் பகு திக்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்களத்தின் கால்நடை மருத்துவர் டி.கிரிதரன் தலை மையிலான மருத்துவ குழுவி னர் யானை குட்டிக்கு சிகிச்சை யளித்தனர்.

யானையின் உடல் நிலை யைக் கருத்தில் கொண்டு சிகிச்சை மேற்கொண்டுள் ளார் கள், இருந்தும் யானைக் குட்டி எழுந்து நடக்கமுடியாத நிலை யில் காணப்படுகின்றது என்று அறிய வருகின்றது. (ஐ)

# 2022 புதுவருடத்தை வரவேற்று மட்டக்களப்பில் சிறப்பு பூஜை!

மட்டக்களப்பு, ஜன. 02

புத்தாண்டை வரவேற்று மட்டக்களப்பில் நேற்று சிறப்பு பூஜை வழிபாடுகள் நடைபெற் றன.

மலர்ந்துள்ள 2022 புதிய வருடத்தில் நாட்டில் சாந்தி, சமாதானம் இன ஐக்கியத்திற் கும், கொரோனா தொற்று நோயில் இருந்து மக்கள் நலம் பெற ஆசி வேண்டி மட்டக் களப்பு ஜெயந்திபுரம் பௌத்த மத்தியஸ்த நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீகண் திருஷ்டி பிள்ளையார் ஆல யத்தில் இடம்பெற்றது.

ஆலய குரு சிவஸ்ரீ ராஜ பவித்திர குருக்களினால் நடத் தப்பட்ட விசேட புதிய வருட சிறப்பு பூஜை வழிபாட்டில், சுகாதார நடைமுறையின் கீழ் பொது மக்கள் கலந்துகொண்ட னர். அத்துடன், பூஜை வழி பாட்டில் ஜெயந்திபுரம் பௌத்த மத்தியஸ்த நிலைய விகாராதிபதியும் கலந்து கொண்டு ஆசியை வழங்கி இருந்தார். (ஐ)

# மட்டக்களப்பு சீயோன் ஆலயத்தில் 3 ஆண்டின்பின் புதுவருட ஆராதனை



மட்டக்களப்பு, ஜன. 02

ஈஸ்டர் தாக்குதலுக்கு உள்ளான மட்டக்களப்பு சீயோன் தேவாலயத்தில் மூன்று வருடங்களின் பின்னர் நேற்று முன்தினம் நள்ளிரவு புதுவருட ஆராதனை இடம்பெற்றது.


சீயோன் தேவாலயத்தின் பிரதம போதகர் றொசான் மகேசன் தலைமையில் உணர்வு பூர்வமாக இடம்பெற்றது. சீயோன் தேவாலய போதகர் றொசான் மகேசன் அரசாங்கத் திற்கும் பொதுமக்களுக்கும் நல்லாசி வேண்டி விசேட ஆரா தனையை முன்னெடுத்தார்.

நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இவ்வழிபாடு களுக்காக விசேட பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப் பட்டு பொது மக்கள் சமூக இடைவெளிகளை பின்பற்றி சீயோன் தேவாலய கிறிஸ்மஸ் ஆராதனை வழிபாடுகள் கலந்து கொண்டனர்.

வழிபாடுகளின் இறுதியில் போதகர்களும் அடியார்களும் கிறிஸ்மஸ் வாழ்த்துக்களை பரிமாறிக் கொண்டனர். (ஐ)




# சமூக - அரசியல் ரீதியாக தமிழர்களுடன் இணைந்து செயல்படுவதில் இஸ்லாமியர்கள் தயங்கவேண்டாம்!



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

புத்தாண்டு வாழ்த்துகள். எத்தனையோ ஆண்டுகளாக நம்மை உதாசீனப்படுத்திய விதி, இந்த ஆண்டாவது நம்மைத் தழுவி, நித்திய மல்லிபோல், மணக்கும் மாலை யாகுமோ, நம்புவோம். எதிர்காலத்திற்கு எல்லாவற்றுக் கும் மேல் வலுவான மூலப்பொருள், நம்பிக்கைதான். வருக வருக, 2022.

புத்தாண்டுச் சவால்களையும், சிறப்புகளையும், எதிர்பார்ப்புகளையும், ஜோதிடத்தின் கணிப்புகளையும் பற்றி இச்சமயம் விரிவாகப் பேசும் பத்திரிகைகள், கடந்த ஆண்டின் சிறப்புகளையும், நாம் அடைந்த வெற்றிகளையும், தவறவிட்ட பிழைளையும் பற்றியும் பேசக்கூடும். நாமும் அவை பற்றி சிறிது சிந்திக்கலாமா?

கொரோனா-கோவிட் இழப்புகள், உலக பொருளாதாரத்தின் சரிவு, இலங்கையில் விலைவாசிகள் உச்சம், நாட்டின் சீனக் கடன் பொறி, ஜெனிவாவில் நம் நியாயத்தைத் தேடும் முயற்சிகள், குவாடின் பார்வையில் இலங்கையும் ஈழத் தமிழர்களும், சீனத் தூதர் நடத்திய நல்லை கந்தன் வழிபாடுகள், ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்க படைகள் வாபஸ், இதுபோல் பல விஷயங்கள் நம் மனதின் முதல் பக்க செய்திகளாக நிற்கின்றன. சில காலத்திற்கு அவற்றில் சில நிகழ்வுகள் நம் நித்திரையை பாதிக்கும் கெட்ட கனவுகளாகத் தொடரக்கூடும். வரும் ஆண்டின் வெள்ளம் அவற்றை அடித்துக்கொண்டுபோய், வாழ்க்கையெனும் கடலில் புதைக்கும்வரை இவையெல்லாம் நீடிக்கும், இவை இப்படி நம்மை விரட்டிக்கொண்டுதான் இருக்கும். இருக்கட்டும், பரவாயில்லை. இது பிறப்பிலிருந்தே பழகிப்போன விஷயம்தான் அல்லவா?

அடுத்து, புத்தாண்டு எதிர்பார்ப்புகளைப் பற்றிப் பேசுவோமா? நம்மிடையே இப்பொழுது என்ன நடந்துகொண்டு இருக்கிறது? நமது அரசியல் தலைவர்கள் சிலர் மரியாதைக்குரிய சம்பந்தர் அவர்க ளின் நாற்காலிக்காக சண்டையிட்டுக்கொள்கிறார்கள். எல்லாருமே மிகச்சிறந்த தலைவர்கள், அதில் சந்தேக மேயில்லை. ஆனால், இதில் ஒரு பிரச்னை உள்ளது, அது நமக்கெல்லாம் நன்றாகவே தெரிந்த ஒரு கசப்பான தத்துவம். நான் ஒரு மிகச்சிறந்த மனிதன், மாமனிதன், மஹா மேதை என்று நினைப்பதிலும், அதை மேளதா ளங்களுடன் பிரகடனப்படுத்துவதிலும் ஒன்றும் தவறில்லை. ஆனால், நீ ஒரு முட்டாள் என்று சொன் னால் அது மிகப்பெரிய தவறு. இல்லையில்லை, குற்றம். இப்பொழுது இதுதான் நடந்துகொண்டு இருக்கிறது. இது ஒன்றும் புதிதல்ல. தமிழனுக்குத் தமிழன்தான் எதிரியாக பல்லாண்டு இருந்திருக்கிறான். அதை மற்றவர்கள் அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டிருந்தார்கள். இனிமேலும் இது தொடரவேண் டுமா என்று நம் மக்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

TELO தலைவர் செல்வம் அடைக்கலநாதன் என்னிடம் சமீபத்தில் பேசும்போது, இந்தத் தலைமைப்

> **‘நான் மஹா மேதை’ என்று நினைப்பதிலும், மேளதாளங்களுடன் பிரகடனப்படுத்துவதிலும் ஒன்றும் தவறில்லை. ஆனால், ‘நீ ஒரு முட்டாள்’ என்று சொல்வது மிகப்பெரிய குற்றம்!**

பிரச்னைக்கு ஒரு நல்ல தீர்வைச் சொன்னார் : “நாம் கூட்டுத் தலைமையைத்தான் ஏற்போம்” என்றார்.PLOTE தலைவர் சித்தார்த்தனும் மற்ற பல மூத்த தலைவர்களும் இதை ஆமோதிக்கிறார்கள் என்றார், விரும்புகிறார்கள் என்றார். சமுதாயம் இதுபோல் தமக்கு ஒரு கூட்டு தலைமையை உருவாக்கிக்கொள்ளலாமே? பூசல்கள் ஒரளவுக்குக் குறையும் அல்லவா?

சென்றவாரம் நாம் உரையாடியபோது, தமிழ்ப் பிரச்னையைத் தீர்க்க இந்தியாவின் உதவியைக்கோரி கொழும்பில் உள்ள இந்திய தூதரிடம் தமிழ் அரசியல் தலைவர்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு கூட்டு அறிக் கையை தரக்கூடும் என்று கூறினேன். இந்தியாவின்மூலம் அமெரிக்கா, பிரிட்டன், குவாட் மற்றும் பிற மேலை நாடுகளின் ஈடுபாட்டையும் அவர்கள் நாடுகிறார்கள் என்றும் கூறினேன்.

1987இல் உருவாக்கப்பட்ட இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டிருந்த அரசியலமைப்பின் 13ஆவது சட்டத் திருத்தம் ஒரு நல்ல தொடக்கமாக இருக்கும் என்றும், அதுவே இறுதியாகிவிடாமல் 13++ என்ற இலக்கை நோக்கி அது நகரவேண்டும் என்றும் கூறியிருந்தேன். தமிழ்பேசும் மக்களுக்கான முழு அமைதி, அரசியல் உரிமைகள், கல்வி, தொழில் மற்றும் வேலைவாய்ப்பில் சம உரிமை, நில உரிமை, காவல் துறை உரிமைகள் ஆகியவை இறுதி இலக்காக இருக்கவேண்டும். தனது சொந்த மண்ணில் இந்தியா பல நெருக்கடிகளை சந்தித்து வருவதாலும், இது போலவே பிற நாடுகளும் நினைக்கலாம் என்பதாலும், ஓர் ஒன்றிய அமைப்பை உருவாக்குவது கடினமாக இருக்கும் என்றும் கூறினேன்.

ஆனால், இப்போது, சுவையான சிலோன் தேநீரைப் பருகியபடி வெள்ளிக்கிழமை மாலைப்பொழுதில் இக் கட்டுரையை எழுதிக்கொண்டிருக்கும்போது, இந்திய தூதரிடம் இன்னும் அந்த வரைவு தரப்படவில்லை என்றும், சில பிரச்னைகள் எழும்பியதன் காரணமாக இழுபறி நீடிக்கிறது என்றும், ஓரிரு நாட்களில் ஒப்பந்தம் முடிவாகலாம் என்றும் கூறப்பட்டது.

இஸ்லாமிய கட்சிகளைச் சேர்ந்த நமது நண்பர்கள் சிலர், சந்தேகங்களை எழுப்பியுள்ளார்கள் என்று கூறப்படுகிறது. இவையெல்லாம் எந்த அளவுக்கு உண்மை என்பது எனக்குத் தெரியாது. ஞாயிற்றுக்கிழ மையன்று காலை இந்தக் கட்டுரை உங்கள் கைகளில் தவழும்போது, ஒரு தீர்வு உதயமாகலாம் என்றும் நம்புகிறேன். நம்பிக்கை கொள்ள எனக்கும் உரிமை இருக்கிறது அல்லவா?

நமது இஸ்லாமிய தலைவர்கள், தமிழ்பேசும் இலங்கை மக்களுக்கும் பிரதிநிதிகளாக இருக்கிறார்கள். இலங்கை என்னும் இந்த அழகிய தீவில் நீண்டகால அமைதியும் முன்னேற்றமும் ஏற்படவேண்டும் என்று ஆசையுடன் சில விஷயங்களை முன்வைக்கிறேன். இஸ்லாமியத் தலைவர்கள் அவற்றை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்கவேண்டும் என்றும் பணிவுடன் கேட்டுக்கொள்கி

## இருபத்தைந்து இந்திய மொழிகளில் ‘மெனிகே மஹே...’ - அன்பிலும் மகிழ்ச்சியிலும் ஒன்றிணைவோமா?

றேன். ஆளும் திறன் உள்ள ஒரு தலைவர், தனது சமூகத்திலிருந்தோ அல்லது அதிகார அமைப்பில் உள்ள பிறரிடமிருந்தோ வரும் போட்டியால், தாம் தூக்கி வீசப்படுவோம் என்று அஞ்சத் தேவையில்லை. தமிழ் பேசும் மக்களிடையே உள்ள கூட்டமைப்பு விரிவாக்கப் பட்டு, எதிர்காலத்தில் வரக்கூடிய எல்லா பேச்சுவார்த்தைகளின்போதும் ஒரு வலுவான அமைப்பாகத் தன்னை உருவாக்கிக்கொள்ளவேண்டும். தமிழ் பேசுபவர்களுக்குக் கூட்டுத் தலைமை வேண்டும் என்பதுபற்றிப் பேசினோம், நமது இஸ்லாமிய நண்பர்களும் அதில் ஓர் அங்கமாக இருக்கலாமே?

ஒற்றுமைக்கான எனது வேண்டுகோளில் இரண்டாவது அம்சம் இதுதான்: சமூக-அரசியல் ரீதியாகத் தமிழர்களுடன் இணைந்து செயல்படுவதில் இஸ்லாமியர்கள் தயங்கவேண்டாம், ஏனென்றால், இப்போது விடுதலைப்புலிகள் இல்லை. 1990இல் வடக்குப் பகுதியிலிருந்து பிரபாகரனால் வெளியேற்றப் பட்டதையும், காத்தான்குடி மசூதி படுகொலைகள் ஆகிய கொடுமையான சம்பவங்களின் கண்ணீரையும் நமது இஸ்லாமிய சகோதர சகோதரிகள் துடைத்து விட்டு, புது வெளிச்சத்தை நோக்கும் நேரம் வந்துவிட் டது. இந்த கொடூர நிகழ்வுகளைப் பற்றி ‘பிபிசி’க்கு சம்பந்தர் அளித்த பேட்டி என் நினைவுக்கு வருகிறது. “மசூதிப் படுகொலைகளுக்கு விடுதலைப்புலிகள் மன்னிப்பு கோரவில்லை என்பதை நினைத்து வருந்து கிறேன். அது ஒரு தவறு. ஆனால் 20 ஆண்டுகளுக்கு முன்பு நடந்த இந்த சம்பவத்துக்காக நமது இஸ்லாமிய சகோதரர்களிடம் மன்னிப்புக் கேட்பதில் எங்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. விடுதலைப்புலிகளின் எல்லா செயல்பாடுகளுக்கும் காரண காரியங்கள் கிடையாது, சில செயல்கள் காரணமற்றவையாக இருந்தன, மசூதிப் படுகொலையும் அதற்கு ஓர் உதாரணம்” என்று, அப் பேட்டியில் சம்பந்தர் கூறியிருந்தார். விடுதலைப்புலிகள் காலத்தில் நடந்த இந்த துயரமான சம்பவங்களை மன்னித்துவிடுமாறும், இதற்கு மன்னிப்புக்கோர சம்பந்தர் 20 ஆண்டுகள் எடுத்துக்கொண்டதையும் மன்னித்துவிடுமாறும் நமது இஸ்லாமிய சகோதர சகோதரிகளை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ் ஆன்மாவை விடுதலைப்புலிகளின் துப்பாக்கி கட்டுக் குள் வைத்திருந்த காலத்தில், சம்பந்தரால் எதிர்க்குரல் எழுப்ப முடியவில்லை என்பதை நமது இஸ்லாமிய சகோதர சகோதரிகள் புரிந்து கொள்வார்கள் என்று நம்புகி றேன். இப்போது நிலைமை மாறிவிட்டது, நாம் கைகோக்க வேண்டிய கட்டாயம் வந்திருக்கிறது. சிங்களத் தீவிரவாதிகளும் புத்த பிக்குகளும் தம்மை கிழக்குப் பிராந்தியத்தில் தாக்கியதையும், அதற்கு கொழும்பு அரசு உடந்தையாக இருந்ததையும் நம்முடைய இஸ்லா மிய நண்பர்கள் மறந்துவிட முடியாது.

சீனத்தின் கடன் பொறிமூலம் வரப்போகும் நிரந்தர அடிமைத்தளையிலிருந்து நாம் தப்பிக்க வேண்டுமா னால், விவேகமும் பரந்த மனப்பான்மையும் உள்ள சிங்களர்களும் நம்மோடு கைகோக்க வேண்டிய தேவையும் உள்ளது என்று நினைக்கிறேன்.

முன்பே நான் இதைக் கூறியிருந்தாலும், 2022இன் தொடக்கத்தில் மீண்டும் ஒருமுறை நினைவுபடுத்துகி றேன். சீனத்தின் கடன்பொறியில் மாட்டிக்கொண்டு, உலகமெங்கும் உள்ள நாடுகள் பட்ட துயரங்களை, ஆண்டாண்டு காலம் அவர்கள் அனுபவித்த பிரச்னை களைப் பற்றி, விரிவாகப் படியுங்கள்.

இலங்கைக்கு உதவ முன்வருவதற்கும், தமிழ் மக்களுக்கு உதவுவதற்கும் இந்தியாவுக்கும் க்வாடுக்கும் பல சுயநலக் காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவற்றை உங்களுக்கு சாதகமாகவும், உங்கள் சந்ததியின் நலனுக்காகவும் பயன்படுத்திக்கொள்ளுங்கள். அரசியல மைப்புச்சட்டம், மனித உரிமைகள் ஆகியவற்றை மதிக்கும் இந்த நாடுகள் ஆதரவுக் கரம் நீட்டுகின்றன, சீனத்து யுவான் மீதான ஆசையை அகற்றிவிட்டு, இந்த நாடுகளின் கரங்களைப் பற்றிக்கொள்ளுங்கள். யுவான் ஆசை அதிகமாக எழலாம், அது பயனும் தரலாம். ஆனால், அது தற்காலிகமானது.

நமக்கான 2022 விருப்பப்பட்டியலில் ஒரு முக்கிய மான கனவைப் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நல்லவர்களான, நேர்மையுள்ளவர்களான நம் மக்கள், தங்களது சந்ததியினரைப் பற்றியும் அக்கறை உள்ளவர்க ளாக இருக்கிறார்கள் என்பதால் இது நடக்கும் என்றும் நினைக்கிறேன். இனம், மொழி, நாட்டிற்கு அப்பாற் பட்டு, சிவில் சமூகம் ஒன்றிணையவேண்டும். கல்விப் புல அறிஞர்கள், கலைஞர்கள், மருத்துவர்கள், வழக்கறி ஞர்கள், பத்திரிகையாளர்கள், எழுத்தாளர்கள், பலதுறை வல்லுநர்கள், ஆசிரியர்கள், பெண்கள் என எல்லா தளங்களிலிருந்தும் தன்னலமற்ற தலைவர்கள் வரவேண் டும். ஒரே இலக்கு: அனைவருக்குமான சமத்துவம் மற்றும் நீதி.

விடைபெறும் முன்னர், 2021இன் ஒரு ‘சுப்பர்’ நிகழ்வையும் நினைவிற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சிங்களப் பாடகி யோஹானி, ‘மெனிகே மஹே’ என்ற பாடல் மூலம் உலகப் புகழ்பெற்றார். இது ‘யூரியூபில்’ கிடைக்கிறது, கேட்காதவர்கள் அந்தப் பாடலைக் கேட்டு ரசியுங்கள். அதில் ஒரு வீடியோவில் 25 இந்திய மொழிகளில் அந்த சிங்களப் பாடல் பாடப்படுகிறது, தமிழ் மொழியிலும் யொஹானி பாடியிருக்கிறார். யொஹானிக்கு சமூக வலைத்தளங்களில் பல புகழாரங் கள் சூட்டப்பட்டன. இந்தியாவின் அயரோடி சந்தீப் யொஹானியைப் பற்றிப் பேசுகிறார், “எல்லா பாராட்டு களுக்கும் உரித்தானவர். 75, 100, 200 ஆண்டுகளாக துப்பாக்கியாலும் தடியாலும் அரசியலாலும் இந்த நாடுகளையும் மொழிகளையும் கலாசாரங்களையும் இணைக்க முடியவில்லை. ஆனால், இந்த அழகான இசை, நம் அனைவரையும் சேர்ந்து பாட வைத்துவிட் டது, இசை மற்றும் அன்பால் ஆன தளத்தில் இணைந்தி ருக்கிறோம். இலங்கைக்குப் பாராட்டுக்கள்” என்றார். நமது கசப்புகளைக் கைவிட்டு, இதைப்போலவே நாமும் உலகளாவிய முயற்சிகளால் அன்பையும் மகிழ்ச்சியையும் பகிர்ந்துகொண்டு ஒன்றிணைவோமா?

மீண்டும் சந்திப்போம். வணக்கம். ●

# இந்தியாவின் அயலவராகவும் நண்பராகவும் இலங்கைத் தீவு தொடருமா?

பேராசிரியர்
கே. ரீ. கணேசலிங்கம்



நாடுகளுக்கிடையிலான இராஜீக உறவில் அரசாங்கங்கள் மட்டுமன்றி தனிமனித நட்புகளும் உறவுகளும் நிறுவனங்களும் பங்களிப்புச் செய்யக் கூடியவையாக காணப்படுகின்றன. அந்த வகைக்குள்ளேயே இலங்கை தற்போதைய ஆட்சியாளரின் நெருக்கமான நண்பனாக இந்திய ஜனதா கட்சியின் தலைவரும் இந்திய அரசாங்கத்தில் அதிக செல்வாக்கு மிக்கவருமான சுப்பிரமணியம் சுவாமி காணப்படுகின்றார். இலங்கை - இந்திய நட்பை கட்டமைப்பதில் கனதியான நகர்வுகளை தென்னிலங்கைக்காக செய்யும் ஒருவராக விளங்குகிறார். 2015இல் அதிக பிரயத்தனங்களை எடுத்து தோற்றுப் போனாலும் அவரின் முயற்சி தற்போதைய ஆட்சியாளருக்கானதாகவே அமைந்திருந்தது. தென்னிலங்கை உள்நாட்டிலும் பிராந்திய சர்வதேச மட்டத்திலும் நெருக்கடியை சந்திக்கும் போதெல்லாம் அயலவராக கைகொடுக்கும் நண்பனாக சுவாமி விளங்குகின்றமையை அவதானிக்க முடிகிறது. இக்கட்டுரையும் இலங்கை - இந்திய உறவின் போக்கில் நிலவும் யதார்த்தமான சூழலை தேடுவதாக அமையவுள்ளது.

நெருங்கிய நண்பராகவும் அயலவராகவும் இந்தியா எப்போதும் இலங்கையுடன் இருக்கும் என இலங்கைக்கான இந்திய தூதரகம் ருவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளது. இம்மாத முற்பகுதியில் முன்னெடுக்கப்பட்ட கலந்துரையாடலுக்கு அமைய இலங்கைக்கு நீண்டகால மற்றும் மத்தியகால ஒத்துழைப்புகள் கிடைக்கவுள்ளனவென வருட இறுதி விருந்துபசாரத்தில் தூதுவர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார். நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் இந்திய விஜயத்தின்போது உணவு, சுகாதார - மருத்துவ பாதுகாப்பு, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் செலாவணி பாதுகாப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டதென இந்திய உயர்ஸ்தானிகரின் ருவிட்டர் தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேநேரம் இலங்கைக்கு இந்தியாவால் பத்து பில்லியன் டொலர் கடனை வழங்குவதன் மூலம் சீனாவுக்கு ஒரு சகா கிடைப்பதைத் தடுக்கலாம் என இந்திய ஜனதா கட்சியின் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தனது ருவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளார். அவர் அதில் மேலும் குறிப்பிடும் போது இந்து சமுத்திரத்தில் இந்தியா தனக்கு நீண்ட கால சகா ஒருவர் தேவையெனக் கருதினால் தற்போது ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு கடன் வழங்க வேண்டும் அல்லது சீனாவுக்கு இளைய சகா ஒருவர் கிடைப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். மோடி அரசாங்கம் பல வெளிவிவகாரக் கொள்கைளில் தோல்வியடைந்துள்ளது. இலங்கை இன்னொன்றாக இருக்க வேண்டாம் என தனது ருவிட்டரில் தெரிவித்துள்ளார்.

மேற்குறித்த இரு வாதங்களும் அதிக முக்கியத்துவத்தை இலங்கை- இந்திய உறவில் ஏற்படுத்தவுள்ளன. குறிப்பாக இலங்கையின் நிதி அமைச்சர் மீளவும் இந்தியாவுக்கு விஜயம் செய்யத் தயாராக உள்ள நிலையில் இந்தியா இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க முன்வந்துள்ளதை இந்தியத் தூதுவர் கோடிட்டுக் காட்டியுள்ளார். இது இலங்கை - இந்திய உறவை பலப்படுத்துவதுடன் சீனாவுக்கு எதிரான உபாயங்களை இந்திய - இலங்கை உறவின் மூலம் வகுக்க வேண்டிய பக்கங்களை சுப்பிரமணியம் சுவாமி தனது ருவிட்டர் தளத்தில் தெரியப்படுத்தியுள்ளமையையும் கவனத்தில் கொள்வது அவசியமானது. இவற்றை சற்று விரிவாக நோக்குவது தேவையாக உள்ளது.

முதலாவது தென்னிலங்கை சீனாவை நெருக்கமான நட்பு நாடாக முன்னிறுத்திக் கொண்டு தெளிவான ஓர் அரசியலை நிகழ்த்தி வருகிறது. அத்தகைய அரசியல் மூலமே இந்தியாவை கையாண்டுவருகிறது. இதனை சுப்பிரமணியம் சுவாமி வெளிப்படையாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடனான இந்திய - சீன உறவானது பத்து பில்லியன் கடனிலேயே தங்கியுள்ள நிலை ஏற்பட்டுவிட்டது. அதாவது கடன் கொடுத்தால் மட்டுமே இந்திய - இலங்கை நட்புறவு சாத்தியமாகும் அல்லாது விட்டால் சீனா பக்கம் சாய்வதைத் தடுக்க முடியாது எனக்கூறும் நிலை ஒரு பக்கம் அமைய மறுபக்கத்தில் அத்தகைய வார்த்தையை வெளிப்படுத்த இந்திய அரசியல் தலைவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்கள் முன்வருவதே வேடிக்கையானதாக உள்ளது. ஏற்கனவே இதேபகுதியில் பஸில் ராஜபக்ஷவின் இந்தியா நோக்கிய கோரிக்கை நிராகரிக்கப்பட்டால் தென்னிலங்கை சீனா பக்கம் போகும் என்பதற்கான ஆதாரங்களை வெளிப்படுதியிருந்தது. அதனையே சுப்பிரமணியம் சுவாமி தெரிவித்துள்ளார். அதாவது சுப்பிரமணியம் சுவாமிக்கு ஊடாக தென்னிலங்கை சரியான இராஜீக நகர்வை மேற்கொண்டுள்ளது. அடுத்துவரும் வாரங்களில் சீனா வெளியுறவு அமைச்சர் இலங்கை வருகைதரவுள்ள நிலையில் இத்தகைய செய்தி வெளியாகியுள்ளது.


இரண்டாவது இலங்கைக்கான இந்திய தூதுவரது செய்தி இலங்கை பக்கம் இந்தியா உள்ளது என்பதை கோடிகாட்டியுள்ளது. அதாவது இலங்கையின் நிதியமைச்சரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகள் நிறைவேற்ற இந்தியா தயாராக உள்ளது என்பதையே அவரது ருவிட்டர் பக்கம் தெரிவித்துள்ளது. இதன் மூலம் இந்தியா இலங்கையை கையாள முனைகிறது என்பது தெளிவாகவுள்ளது. இலங்கைத் தீவு புவிசார் அரசியல் ரீதியாக இந்தியாவின் நலன்களுக்குள் உட்பட்டதென்பதை கவனத்தில் கொண்டுள்ள வேண்டிய நிலையில் இந்தியாவின் நகர்வு அவசியமானது. சீன வெளியுறவு அமைச்சரின் வருகையின் முக்கியத்துவம் நிச்சயமாக இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளுக்கான உடன்பாடுகள் பலவற்றைக் கொண்டதாகவே அமையும். அதனை கையாளும் பொறுப்பு இந்தியத் தரப்புக்கே உரியது. இந்தியத் தரப்பு சீனாவின் நகர்வுக்கு முன்னர் செயல்பட வேண்டிய நிலைக்குள் உள்ளது. அதனை இந்திய தூதுவர் வெளிப்படுத்தியுள்ளதுடன் அவரது வார்த்தைகள் இராஜீக நோக்குடன் அமைந்துள்ளது.

மூன்றாவது இலங்கை ஆட்சியாளர்கள் இந்தியாவை கையாளுவது போல் சீனாவையும் இந்தியாவை முன்னிறுத்தி செயல்படுகிறார்கள் என்பதை அவதானிக்க முடிகிறது. குறிப்பாக இந்திய - சீன நலன்களுக்குள் அகப்பட்டுள்ள இலங்கைத் தீவை மாறிமாறி முன்னிறுத்திக் கொண்டு அந்த நாடுகளிடம் பொருளாதார உதவிகளையும் அரசியல் ரீதியான நலன்களையும் அடைந்து கொள்கின்றனர். இந்தியா பஸில் ராஜபக்ஷ முன்வைத்த கோரிக்கையை நிறைவு செய்ய முடியாத நிலை ஏற்படுமாயின் சீனாவிடம் அத்தகைய தேவைகளை நிறைவு செய்ய தயாராகியுள்ளது. அதனை அடையும் ஓர் உத்தியாகவே சீனாவின் வெளியுறவு அமைச்சரது விஜயம் அமையவுள்ளது. சீனாவிடம் அந்த நோக்கம் இல்லாது விட்டாலும் தென் இலங்கை அரசியல் சக்திகள் அதனை பயன்படுத்திக் கொள்வார்கள். அதற்கான ஆரம்ப புள்ளியையே சுப்பிரமணியம் சுவாமி வெளிப்படுத்தியுள்ளார்.

நான்காவது சுப்பிரமணியம் சுவாமி தனது ருவிட்டர் பக்கத்தில் பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கத்தின் வெளியுறவுக் கொள்கைகள் பல தோல்விகண்டுவிட்டதாகவும் அதனைப் போன்ற நிலை இலங்கைத் தீவிலும் ஏற்பட்டுவிடக் கூடாது என குறிப்பிட்டுள்ளார். ஆனால், மோடி அரசாங்கத்தின் பிராந்திய வெளியுறவுக் கொள்கை சீனாவின் அணுகுமுறையால் நெருக்கடியை சந்தித்துவருவது யதார்த்தமானதே. அதற்கு தனித்து மோடி அரசாங்கத்தை குறை கூறிவிட முடியாது. ஒரு நாட்டின் வெளியுறவு என்பது தொடரான செய்முறையாகும். அதனை உருவாக்கினால் மட்டும் போதாது. அதனைக் கடைப்பிடிக்கவும் செயல்வடிவம் கொடுக்கவும் தலைவர்கள் தேவை. சுப்பிரமணியம் சுவாமி போன்றவர்களுக்கும் அதில் பங்குண்டு. நரேந்திர மோடி அரசாங்கத்தின் பிராந்தியக் கொள்கையை விட சர்வதேச மட்டத்திலான வெளியுறவு ஆரோக்கியமானதாகவே அமைக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் வெளியுறவு தோற்றுப் போகுமாக அமைந்தால் பிராந்தியத்திலுள்ள அனைத்து நாடுகளுக்கும் பாதிப்பையே ஏற்படுத்தும். இலங்கைத் தீவு அதனை பலதடவை அனுபவித்துள்ளது. ஆனால், இந்தியத் தேசியத்தை நேசிக்கும் எவரும் சுவாமி போன்று முறையிடமாட்டார்கள். அதனை தமது செயல்பாடாக மேற்கொண்டு நகர்வுகளை வெற்றி கொள்ளவே முயல்வார்கள். இந்தியாவின் நலனுக்கு சேவையாற்றுவதை விட பிற தேசங்களுக்கு சேவை புரிவனவாகவே சுவாமியின் கருத்துக்கள் காணப்படுகிறன.

எனவே இலங்கை -இந்திய உறவானது இராஜீக உத்திகளுக்குள்ளால் நகர்த்தப்படுகிறது. பரஸ்பரம் இரு தரப்பும் அடுத்துவரும் வாய்ப்புக்களை நோக்கி செயல்பட்டுக் கொண்டுவருகின்றன. இந்தியா இலங்கையை தனது நலன்களுக்குள் இழுப்பதற்கும் இலங்கை இந்தியாவையும் - சீனாவையும் கையாளுவதற்கும் முயன்று கொண்டிருக்கின்றது. ஆனால், ஈழத்தமிழ் அரசியலோ ஒருமைப்பாட்டை எட்ட முடியாது இழுபறிப்படுகிறது. எத்திசையில் இயங்குவதென தெரியாது குழப்பத்திற்குள் அகப்பட்டுள்ளது. “இவற்றுக்கொல்லாம் அறிவு தேவையில்லை“ என்ற வாதமே மேலோங்கியுள்ளது.

நன்றி: அருவி




# சமமற்ற நீதியுடன் ஒரு சமர்!

## நிரபராதி எனத் தன்னை நிரூபிக்க போராடிய ராஜ் ராஜரட்ணத்தின் புத்தகம்: ஒரு பார்வை

ராஜி பாற்றர்சன்

சமமற்ற நீதி (Uneven Justice)! தலைப்பே வித்தியாசமாக இருக்கிறது அல்லவா? ஆமாம், அமெரிக்காவில் ஒரு தமிழர் நீதிக்காகப் போராடிய கதை, அந்தத் தலைப்பில் புத்தக வடிவில் வெளிவந்துள்ளது. 11 வருடங்கள் சிறைத் தண்டனை பெற்ற அந்த மனிதர், கிட்டத் தட்ட இரண்டு வருடங்கள் போராடி ஏழரை வருடங்கள் தண்டனை அனுபவித்து, தான் ஒரு நிரபராதி என நிரூபித்து விடுதலையான பின்னர் தனது மௌனத்தைக் கலைத்தார். தன் மீது சுமத்தப் பட்ட வழக்கு எவ்வாறு பின்னப்பட்டது, எவ்வாறு நடத்தப்பட்டது, சாட்சியங்கள் எப்படி தனக்கெதிராக உருவாக்கப் பட்டன என்பன போன்ற விடயங்களுடன் தான் பெற்ற அனுபவத்தையும் அப்படியே எழுத்தில் கொண்டுவந்திருக்கிறார் அந்த எழுத்தாளர்.

சரி, தன் பக்கம் இருக்கும் நியாயத்தை மட்டும்தான் பேசுகிறாரா அந்த எழுத்தாளர்? இல்லை. தனது சகாக்கள் உட்பட அனைவரும், குறிப்பாக பொருளாதார அல்லது நிதி துறையின் வல்லுநர்கள் இந்த புத்தகத்தை வாசித்து, நடந்த உண்மைகளை அறிந்துகொள்ள வேண்டும் என அவர் விரும்பினார் மேலும், சட்டவிரோதமாகத் தனது உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்பட்டு, அந்த நாட்டின் பிரஜையான தான் கண்காணிக்கப்பட்டதன் ஊடாகத் தனது அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாகவும் பதிவுசெய்ய விரும்பினார்.

2008-ல் அமெரிக்காவில் ஏற்பட்ட நிதி நெருக்கடிக்கு அல்லது பொருளாதார வீழ்ச்சிக்கு ஒரு பலிகடாவைத் தேடிய லட்சிய வழக்குரைஞர்களால் ஒரு பொறிக்குள் சிக்கவைக்கப்பட்டு, கண்ணியமான வாழ்வு சிதறடிக்கப்பட்டு, மன அழுத்தத்தை எதிர் நோக்கியதையும் அனைவரும் அறிய வேண்டும் என அவர் விரும்பினார். சில சீர்கேடான வழக்குரைஞர்கள் மற்றும் எஃப்.பி.ஐ அதிகாரிகள் குற்றவியல் நடத்தையிலிருந்து எப்படி தப்பிக்க அனுமதிக் கப்படுகிறார்கள் என்பது பற்றிய விழிப்புணர்வைப் பொதுமக்கள் மத்தியில் ஏற்படுத்த விரும்பினார். அதன் மூலம் ஒரு பொது விவாதத்தைத் தொடங்க எண்ணினார். அமெரிக்காவின் நீதி அமைப்பில் சமநிலைகள் இல்லை என்பதை ஆணித்தரமாக நிறுவ முயன்றார்.

சரி, யார் அந்த எழுத்தாளர்? அமெரிக்காவின் வரலாற்றில் தவிர்க்க முடியாத அளவிற்கு மிகச் சிறந்த நிதி மேலாளராகத் திகழ்ந்த ராஜ் ராஜரட்ணம் என அறியப்படும் ராஜகுமாரன் ராஜரட்ணம்தான் அந்த எழுத்தாளர். இலங்கையைப் பிறப்பிடமாகக் கொண்ட அவர், 11 வயதில் பிரிட்டனில் குடியேறினார். லண்டனில் அமைந்துள்ள டல்விச் கல்லூரியில் (Dulwich college) தனது கல்வியைத் தொடர்ந்த அவர், பட்டப்படிப்பைப் பொறியியல் துறையில், சஸ்ஸெக்ஸ் பல்கலைக்கழகத்தில் நிறைவுசெய்தார். 1983இல் தனது முதுகலைமானி பட்டப்படிப்பை அமெரிக்காவில் பென்சில்வேனியாவில் உள்ள வார்ட்டன் ஸ்கூல் ஆஃப் பிசினஸ் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் நிறைவு செய்து அங்கேயே ஒரு வங்கியில் கடன் வழங்கும் அதிகாரியாகத் தனது பணியை ஆரம்பித்தார்.

1985-ல் நீதம் அண்ட் கோ (Needham & CO) நிறுவனத்தில் இணைந்து தனது கடின உழைப்பாலும் அசாதாரணத் திறமையாலும் படிப்படியாக உயர்ந்து தனது 34ஆவது வயதில் அதன் தலைவராக உயர்ந்தார். 1992இல் நீதம் அண்ட் கோ கம்பெனியுடன் இணைந்து உருவாக்கப்பட்ட 'ஹெட்ஜ் நிதி' (Hedge Fund) ராஜ் ராஜரட்ணத்தால் வாங்கப் பட்டு காலியன் குழுமம் (Galleon Group) எனப் பெயரிடப்பட்டு நிர்வகிக்கப்பட்டது. ஒரு குறுகிய காலத்தில் மிக சிறப்பான வளர்ச்சியை அடைந்த அவரது நிறுவனம், உலகின் முதல் பத்து ஹெட்ஜ் நிதி நிறுவனங்களுக்குள் தனது பெயரையும் உள்வாங்கிக்கொண்டது. மிகச் சிறந்த பகுப்பாய்வாளர்களை இணைத்து, அமெரிக்காவின் சட்ட திட்டங்களை மிகச் சரியான முறையில் பின்பற்றி மிகப் பெரியளவில் வளர்ச்சியடைந்துகொண்டிருந்த காலியன் குழுமம் மற்றவர்களின் கண்களை உறுத்தியதில் ஆச்சரியம் இல்லைதானே?

'வால்ஸ்ட்ரீட் சுப்பர் ஸ்ரார்' என அழைக்கப்பட்ட ராஜ் ராஜரட்ணத்தை, 2009ஆம் ஆண்டு ஃபோர்ப்ஸ் (Forbes) இதழ், அமெரிக்காவின் 400 பணக்காரர்களில் ஒருவராகவும், உலகின் 559 ஆவது பணக்காரராகவும் மதிப்பிட்டது. அதே ஆண்டு ஒக்ரோபர் 16இல், சட்ட விரோதமான உள் வர்த்தக (insider trading) நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றம்சுமத்தி அவரைக் கைதுசெய்தது எவ்.பி.ஐ.



'வால்ஸ்ட்ரீட் சுப்பர் ஸ்ரார்' என அழைக்கப்பட்ட ராஜ் ராஜரட்ணத்தை, 2009ஆம் ஆண்டு ஃபோர்ப்ஸ் (Forbes) இதழ், அமெரிக்காவின் 400 பணக்காரர்களில் ஒருவராகவும், உலகின் 559 வது பணக்காரராகவும் மதிப்பிட்டது. அதே ஆண்டு ஒக்ரோபர் 16இல், சட்டவிரோதமான உள் வர்த்தக (insider trading) நடவடிக்கையில் ஈடுபட்டதாகக் குற்றம்சுமத்தி அவரைக் கைதுசெய்தது எஃப்.பி.ஐ.

அவருக்கு முன்னால் மூன்று தெரிவுகள் இருந்தன. சுமத்தப்பட்ட குற்றத்தை ஏற்றுக்கொண்டு குறைந்த அளவு தண்டனை பெறுதல், அரசாங்கத்தின் சாட்சியாக மாறி தண்டனையில் இருந்து தப்புதல், நிரபராதி என நிரூபிக்கப் போராடுதல். செய்யாத குற்றத்தை ஏற்றுக்கொண்டு தண்டனை அனுபவிக்க அவருக்கு உடன்பாடில்லை. நேர்மையான வழியில் தனது வாழ்வை அமைத்துக்கொண்ட அவருக்கு, அரசாங்கத்தின் கையாளாக மாறி இன்னொருவரை வஞ்சக வலைக்குள் சிக்கவைத்துவிட்டு தப்பிக்கவும் மனமில்லை.

எனவே, அவருக்கு முன்னால் இருந்த தெரிவு தன்னை நிரபராதி என நிரூபிக்கப் போராடுவதுதான். ஆனால், அந்தப் பயணத்தில் பல மில்லியன் டொலர்கள் செலவு ஏற்படும் என்றும், பல சவால்களுக்கு முகம் கொடுக்க நேரிடும் என்பதும் அவருக்குத் தெரிந்திருந்தது. அமெரிக்காவின் நீதித் துறையில் மிக நம்பிக்கை கொண்ட அவர் நீதிக்காகப் போராடத் துணிந்தார். அதற்காக என்ன விலை கொடுக்கவும் தயாரானார்.

அந்த நீதிக்கான பாதையில் அவர் கண்டறிந்த விடயங்கள் பற்றியும், அவர் சந்தித்த பல விதமான மனிதர்கள் பற்றியும் அமெரிக்க நீதி துறை எவ்வாறு செயற்படுகின்றது என்பது போன்ற பல விடயங்களை இந்தப் புத்தகத்தில் மிகத் தெளிவாகக் கூறியிருக்கிறார். எந்த மிரட்டல்களுக்கும் அடிபணியாத அவர், அவரது சட்டத்தரணிகளுடன் இணைந்து தனக்கெதிராக புனையப் பட்ட ஒவ்வொரு குற்றச்சாட்டுகள் தொடர்பில் ஆராய்ந்து பல ஆதாரங்களை வழங்கியபோதும் அவற்றில் பல புறக்கணிக்கப்பட்டதையும் தமது பக்க சாட்சியங்களில் ஐந்து பேரை மட்டுமே உள்வாங்கிக்கொண்டதாகக் குறிப்பிட்ட அவர், நடுவர்கள் 12 பேரில் (Jury) ஒருவரும் துறை சார்ந்த அறிவு பெற்றிருக்கவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

நிதி மேலாண்மை மற்றும் முதலீடு தொடர்பான அறிவு இல்லாதவர்களுக்கு எவ்வாறு அதன் சட்ட முறைகள் நுணுக்கங்கள் பற்றி தெரியும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். அந்த நடுவர் குழுவினரால் குற்றவாளி எனத் தீர்க்கப்பட்டு 11 வருடங்கள் சிறைத் தண்டனை வழங்கப்பட்டதுடன் 150 மில்லியன் டொலர்கள் அபராதமாக விதிக்கப்பட்டதாகக் குறிப்பிடும் ராஜரட்ணம், இந்த முழு நூலையும் சிறையில் தனது கையாலேயே எழுதியதாகப் பதிவுசெய்திருக்கிறார்.

Uneven Justice: The Plot to Sink Galleon எனும் தலைப்பில் அமேசான் இணைய தளத்தில் வெளியிடப்பட்டிருக்கும் இந்நூல் அனைவராலும் வாசிக்கப்பட வேண்டிய ஒரு நூலாகும் என்பதில் ஐயமில்லை. இந்நூல் விற்பனையின் மூலம் பெறப்படும் நிதியானது நீதிக்காகப் போராடிக்கொண்டிருக்கும் உறவுகளுக்குப் உதவுதற்குப் பயன்படும் என அவர் தெரிவித்துள்ளார்.


நீதித் துறையினால் வஞ்சிக்கப்பட்டு, செய்யாத குற்றத்துக்காகச் சிறையில் வாடிய வலிகள் அவரது வார்த்தைகளில் பிரதிபலிக்கிறது. இந்த நூல் அவரது வலி நிறைந்த குரல் மட்டுமல்ல. நீதி மறுக்கப்பட்டு செய்யாத குற்றத்திற்காகச் சிறையில் வாடும் அனைவரின் குரலாகும். சிறையில் இருப்போர் அனைவரும் குற்றவாளிகளுமல்ல. வெளியில் உலவுவோர் அனைவரும் நீதிமான்களுமல்ல!



# நீர் பயன்பாட்டின் சிக்கலை சொல்லுகிற 'டே ஸீரோ'

ரமணி - அவுஸ்திரேலியா

அண்ட சராசரங்களில் நீர் இருப்பதாக அறியப் பட்ட ஒரே ஒரு கோள் நாம் வசிக்கும் இந்த உலகம் தான். இவ்வுலகில் நீர் தான் அனைத்து உயிரினங் களையும், பெரும் நாகரிகங் களையும் உருவாக்கியுள்ளது. காலாகாலமாக இருந்து வந்த நீரியல் வட்டங்கள் மாறு கின்றன. ஏற்கனவே உலகில் பத்தில் நான்கு பேர் சரியான வசதிகள் இன்றி அவதிப்படு கிறார்கள். எதிர்வரும் காலங்களில் இன்னும் பலர் நீர் பிரச்னையில் பரிதவிக்கப் போகிறார்கள் என்ற பயங்கர ஆருடத்துடன் தொடங்குகிறது அமேசன் ப்ரைமில் வெளிவந்த விவரணத் திரைப்படம் "டே ஸீரோ".




அதிகரித்து வரும் சனத் தொகையின் தேவை காரணமாக நீர் பயன்பாடு அதிகரித்துக் கொண்டே செல்லுகிறது. அதனால்

"நீரின்றி அமையாது
உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு"
- திருக்குறள்

என்ற வள்ளுவன் வாக்கிற்கு இணங்க எதிர் வரும் காலங் களில் நீர் தேவை கருதியே எதிர்காலத்தில் சட்ட ஒழுங்கு கள் நிலைகுலையலாம் யுத்தங் கள் கூட வெடிக்கலாம். இதற்கு மெக்சிக்கோ சிட்டியில் நிகழ்ந்த நீர் காரணமான கலவரம், அமெரிக்காவின் விவசாய தொழில்துறையின் அசுரத்தன மான நீர் பயன்பாடு, பிரேசில் நாட்டில் அமேசன் மழைக்காடுகளை காக்கப் போராடும் படையினர் மேற்கோள் காட்டுகின்றனர்.

என்று ஒரு நாள் நீரின் பயன்பாட்டிற்கு நீரின்றி தவிக்கிறோமோ அந்த நாள் "டே ஸீரோ"(நாள் பூச்சியம்) என்று அறியப்படுகிறது. அந்த நாளை தடுக்க, மக்களுக்கு எச்சரிக்கை செய்ய போராடும் அர்வலர்களை பற்றிய கதைகளையும் இன்றைய பொருளாதாரத்தில் நீர் பயன்பாட்டின் சிக்கலையும் சொல்லுகிறது இந்த "டே ஸீரோ".

ஜில் ஹைனத் அமெரிக்க புளொரிடா மாநிலத்தில் உள்ள நிலத்துக்கு அடியில் இருக்கும் நீர் நிறைந்த குகைகளில் பல ஆண்டுகளாக நீந்தி தரவுகளை சேர்க்கும் சுழியோடி. அவர் தன் குரல் மூலமாக உணர்வு பூரமாக விபரிக்கும் நீர் நிறைந்த குகைகளில் நிகழும் மாற்றங்கள் உங்களை சிந்திக்க வைக்கும்.


ஜேய் பமிலியேட்டி

ஜேய் பமிலியேட்டி, லொஸ் அஞ்ஜிலஸ் நகரில் வாழும் நீரியல் விஞ்ஞானி. இவர் அமெரிக்காவின் நாசா மூலமாக உலகில் இருக்கும் நீல நீர் நிலைகள் பற்றிய தரவுகளை சேர்க்க விண்வெளிக்கு செய்மதி அனுப்ப உதவியவர். பல நூறாண்டுகளாக பெய்த மழையால் நன்னீர் கொண்ட நில நீர் ஏரிகளின் நீர் இருப்பு அதிகரிக்கும் மனித தேவைகளுக்காக அசுர வேகத்தில் உறிஞ்சப்படுகின்றன என எச்சரிக்கிறார்.

**மனித செயற்பாடு காரணமான, பருவ நிலை மாற்றத்தால் கால நிலை எதிர்வு கூறல் கடினமாகிறது. அதனால் ஏற்படும் நீர் பிரச்சினை இன்றளவும் பாரியப் பிரச்சினை பார்க்கபடுவதில்லை. மனித குலம் இயற்கையை கட்டுப்படுத்தி வாழாமல் இயற்கையோடு ஒன்றி வாழ வேண்டும் என்ற செய்தியோடு வரும் இந்த விவரணத்தை புதிதாக பூத்துள்ள இந்த வருடம் பார்த்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?**

சில வருடங்களுக்கு முன்னர் தென் ஆபிரிக்காவின் கேப் டவுண் நகரின் மக்கள் "டே ஸீரோ"வை அனுபவித்தார்கள். கேப் டவுணில் வானம் பொய்த்ததால் கேப் டவுண் அருகில் இருந்த ஏரி வற்றியது. நீர் என்பது மனிதனின் அடிப்படை உரிமை என்ற நிலை மாறி, இன்றைய கால பொருளாதார ஏற்றத்தாழ்வை காட்டும் சின்னமாக கேப் டவுணில் மாறிய அவலத்தை விவரணம் தெளிவாக காட்சிப்படுத்தி உள்ளது.

அமெரிக்காவில் கன்சாசஸ் மாநிலத்தில் பாரிய அளவில் நடைபெறும் விவசாயம் மற்றும் மாட்டுப் பண்ணை தொழில் காரணமாக அசுர வேகத்தில் நில நீர் உறிஞ்சப்படுகிறது. மண்ணின் நிலவளம், நீர்வளத்தை காப்பாற்றத் துடிக்கும் விவசாயிகளுக்கும் பாரிய உணவு சார் நிறுவனங்களுக்கிடையே போராட்டங்கள் நிகழுகிறது. இன்றைய பொருளாதாரத்தின் நீர் பயன்பாட்டு "தங்க முட்டையிடும் வாத்தை அறுப்பது போன்ற நிலைமை உள்ளது" என்பதை உணர்த்துகிறது.


அந்தோனியோ நோப்ரே

பிரேசில் நாட்டு விஞ்ஞானி அந்தோனியோ நோப்ரே அமேசன் மழைக்காடுகளுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவர் "அமேசன் மழைக்காடுகள் உலகின் இதயம் போன்றது, மற்றும் உலக நீர் ஓட்டம் மனித குருதி போன்றது" என தான் அமேசன் காட்டு ஆதிவாசிகள் மூலம் கற்றறிந்த ஒப்பீடு மூலம் காடுகளுக்கும் நீருக்கும் இடையேயான தொடர்பை அழகாக உணர்வு பூர்வமாக விபரிக்கிறார். இறுதியில் "எனக்கு தெரிந்த உண்மை உங்களுக்கு தெரிந்தால் என்ன செய்வீர்கள்?" என பார்வையாளர்களை நோக்கி கேள்வி கேட்கிறார்.

இந்த விவரணத்தின் குரலாக இருந்த ஹொலிவுட் நடிகர் ஜிவட்டல் எஜாபர், பிண்ணனி இசை, படத்தொகுப்பு மற்றும் எளிய வசன நடை பலமாக இருந்தது. ஆயினும் ஆழமாக சொல்ல வேண்டிய பல்வேறு விடயங்களை குறுகிய நேரத்தில் சொல்ல முனைந்தார்களோ எனத் தோன்றுகிறது.


ஜிவட்டல் எஜாபர்,

மனித செயல்பாடு காரணமான, பருவ நிலை மாற்றத்தால் கால நிலை எதிர்வு கூறல் கடினமாகிறது. அதனால் ஏற்படும் நீர் பிரச்னை இன்றளவும் பாரியப் பிரச்சினை பார்க்கபடுவதில்லை. மனித குலம் இயற்கையை கட்டுப்படுத்தி வாழாமல் இயற்கையோடு ஒன்றி வாழ வேண்டும் என்ற செய்தியோடு வரும் இந்த விவரணத்தை புதிதாக பூத்துள்ள இந்த வருடம் பார்த்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

Email: ramaniwrites@gmail.com
Twitter: @ramaniwrites

# பயத்தை தூக்கி எறியுங்கள்.. பயணத்தை தொடங்குங்கள்..!

“நாம் செய்ய பயப்படும் விஷயங் களைச் செய்து, புதிய அனுபவங்களைப் பெற்று அந்தக் காரியங்களில் தவறு களைச் செய்து அதிலிருந்து மீள்வது எப்படி என்பதைக் கற்றுக்கொண்டால் மட்டுமே தலைசிறந்த எல்லைகளைத் தொட முடியும். ஆனால், நாமோ நம்மை துறைமுகத்திலேயே கட்டி வைத்துக்கொண்டு இருக்கிறோம். ‘ஒருவேளை இப்படி ஆகிவிட் டால், ஒருவேளை அப்படி ஆகிவிட்டால், நம் சுற்றமும் நட்பும் நம்மைப் பார்த்து என்ன சொல்லும்’ என்ற எண்ணத்தில் கட்டுப்பட்டு வாழும் நிலைப் பாட்டையே தொடர்ந்து எடுக்கிறோம். இந்தப் புத்தகத்தின் நோக்கம் நீங்கள் கட்டப்பட்டிருக்கும் துறைமுகத்தில் இருந்து உங்களை அவிழ்த்து விடுவதே ஆகும்.

இன்றைய சூழலில் பாதுகாப்பான இடம் என்ற ஒன்று கிடையவே கிடையாது. நாளை நமக்குக் கொண்டுவந்து சேர்க்கப்போகும் சர்ப்ரைஸ் என்ன என்பதை நம்மால் ஒரு போதும் கணிக்க முடியாத சூழ்நிலையில் வாழும் நாம் இருக்கும் இடம் பாதுகாப்பானது என்று நினைப்பது நகைமுரண் இல்லையா?” என்று கேட்கிறார். இதற்கு உதாரணமாக அவர், 2019 வருட இறுதியில் கொண்டாடிய கொண்டாட்டங்களும் 2020இல் சாதிக்க வேண்டியவை என்று போட்ட பட்டியலையும் சொல்கிறார். இதனாலேயே வாழ்க்கைக் கடலினுள் பயம் நீக்கி பயணத்தைத் தொடங்க நீங்கள் உடனடியாகத் தயாராகுங்கள் என்று உற்சாகமூட்டவும் செய்கிறார் இந்தப் புத்தகத்தின் ஆசிரியர்.

### இயக்கும் சக்தி...


“இந்த உலகில் நம்மைவிட பெரிய சக்தி ஒன்று இருக்கிறது. அவரவர்களுடைய நம்பிக்கை மற்றும் கொள்கைகளுக்கு இணங்க இறைவன், இயற்கை, உள்ளுணர்வு எனப் பல விதமான பெயர்களை அதற்கு வைத்துக்கொள்கிறோம். அதுவே, உங்களுக்கான பாதையைத் தீர்மானித்து நடத்திச் செல்கிறது. உங்களுக்குள் இருக்கும் துணிவே உங்களை வழிநடத்திச் செல்லும் அந்த சக்தி. அது உங்களை எந்தத் திசையில் அழைத்துச் செல்லத் திட்டமிட்டு உள்ளது என்பதை அறிவதற்கான முயற்சியைச் செய்கிறது. இதை உணர்ந்துகொண்டால் நீங்கள் உங்கள் உள்ளுணர் வையும் தைரியத் தையும் கொண்டு, செல்லும் திசையை ஓரளவுக்கு தீர்மானித்துக்கொள்ளும் பண்பைக் கொண்டிருப்பீர்கள். நம்மை மீறிய சக்தியானது நமக்குக் காட்டும் சமிக்ஞைகளை உணர்ந்து கொண்டு அதனுடன் பயணிப்பதே சரியான அணுகுமுறை.

அதென்ன அப்படிப்பட்ட நம்மை மீறிய சக்தியின் வழிகாட்டுப் பயணம் என்று நீங்கள் கேட்கலாம். நீங்கள் ஒரு தகப்பனாகவோ, தாயாகவோ உங்களுடைய குழந்தையை ஆரம்பத்தில் எழுந்து நடப்பதற்கான ஊக்கத்தை எப்படி அளித்தீர்கள் என்பதைக் கொஞ்சம் ஞாபகப்படுத்திப் பாருங்கள். ஒரு பெற்றோராக வெளியே இருந்து நீங்கள் கொடுத்த தூண்டுதலே குழந்தையை சுலபமாக நம்பிக்கையுடன் நடக்க வைத்தது இல்லையா? அதே போன்றதுதான் இதுவும். குழந்தையின் உடல்வாகு, வெளியில் இருந்து நீங்கள் கொடுத்த ஊக்கம் என்ற இரண்டும் இணைந்துதான் அந்தக் குழந்தை தானாக உதவியின்றி நடந்திருக்கும் இல்லையா?

### மூன்றுவித நம்பிக்கை...

ஒரு சராசரி மனிதனாக நீங்கள் இப்போதைக்கு இருக்கும் இடத்தில் உள்ள சிரமங்கள் உங்களுக்குப் பழகிப்போயிருக்கும். பழகிப்போன கஷ்டங்கள் சௌகரியத்தின் எல்லைக்குள் இருந்துவிடுகின்றன. இதனால் சௌகரியத்தையும் அனுபவித்துக்கொண்டு முன்னேற்றம் இல்லை என்று புலம்பிக் கொண்டு, சாமர்த்தியமாக நாம் திரிந்து கொண்டிருப்போம். முன்னேற்றம் இல்லை எனில், இதைவிட்டு வெளியேறி வேறு இடத்துக்குச் சென்று விட வேண்டியதுதானே என்று கேட்டால், அங்கே புதிது புதிதாக பிரச்னைகள் இருக்கும் அதற்கு பயந்துகொண்டுதான் நான் இந்தத் துறைமுகத்திலேயே நங்கூரம் பாய்ச்சி இருக்கிறேன் என்று கூறுவோம்.

ஆனால், அந்தப் புதிய இடங்களில்தான் நாம் தேடும் வளர்ச்சி என்பது இருக்கும். இந்த இடம் பெயர்தலைச் செய்ய மூன்று நம்பிக்கைகள் நமக்கு வேண்டியிருக்கிறது. முதலாவது, நம் மீது நாம் கொண்டிருக்கும் நம்பிக்கை. இரண்டாவது, நம்மைத் தாண்டிய நம்மை இயக்கக்கூடிய விஷயத்தின் மீது இருக்கும் நம்பிக்கை. மூன்றாவது, நம்முடைய சௌகரிய எல்லையைத் தாண்டி இருக்கும் இடத்தில்




**“கப்பல் எப்போதுமே துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டால் மிகுந்த பாதுகாப்பாக இருக்கும் ஆனால், கப்பல் கட்டப்பட்ட நோக்கம் அதுவல்ல என்ற பொன் மொழியை வலது முன்கையில் பச்சை குத்தியிருக்கிறேன். ஏனென்றால், என் வாழ்வில் எப்போதுமே சௌகரிய எல்லையை (comfort zone) விட்டு விலகி இருக்கவே விரும்புகிறேன்” என்று சொல்லி இந்தப் புத்தகத்தை (Built Through Courage) ஆரம்பிக்கிறார் ஆசிரியர்.**

நமக்குத் தேவையான / நாம் ஆசைப்படுகிற அளவிலான வாய்ப்புகள் இருக்கும் என்கிற நம்பிக்கை. இந்த மூன்று நம்பிக்கைகளுமே நம்மை இருக்கும் இடத்தில் இருந்து அசைக்க உதவுகின்றன.

### இரவல் வேண்டாம்...

இந்தவித முதல் முயற்சியை எடுப்பதில் இருக்கும் தயக்கத்தை முறியடித்தால் மட்டுமே நாம் முன்னேற்றத்துக் கான பாதையில் பயணிக்க முடியும். அதற்கு நமக்கு மிக மிக அவசியமான ஒன்று, தைரியம். இப்படி நாம் எடுத்து வைக்கும் முதல் அடியே நாம் கொண்டிருக்கும் திறமைக்கு ஏற்ற நிலையை அடைவதற்கான பாதையில் பயணிக்க உதவும். இதில் இன்னும் ஒரு சிக்கல், நம்மில் பெரும்பாலானோர் நமக்கு எது தேவை என்பதை உணராமல் மற்றவர்கள் சொல்வதைக் கேட்டு பயணத்தைத் தொடங்குவதுதான்.

இது எப்படி எனில், அடுத்தவரிடம் இருக்கும்... அவர் போக நினைக்கும் ஊருக்கு செல்வதற்கான வழியைக் காட்டும் வரைபடத்தை இரவல் வாங்கி நாம் போக வேண்டிய இடத்துக்கு செல்வதற்கான பயணத்தைத் தொடங்குவது போன்றதாகும். ஏன் இதில் பெரும்பான்மையானவர்கள் என ஏன் சொல்கிறோம் எனில், நாம் முதலில் பணிக்குச் சேரும் நிறுவனத்தில் இருக்கும் அனுபவஸ்தர்களின் வழிவரைடத்தை சுலபத்தில் இரவலாக வாங்கி நாம் போக வேண்டிய ஊர் அதுதான் என்று நினைத்துப் பயணித்துவிடுவோம்.

பத்து, பதினைந்து வருடம் தாண்டி பயணிக்கும் போதுதான் இது நமக்கு சரிவராது என்று நமக்கு திட்டவட்டமாகப் புரியும். பெரும்பாலானோர் இந்த நிலைக்கு வந்துவிட்டு அவர்கள் காணும் தேக்க நிலையை ‘மிட் லைஃப் க்ரைசிஸ்’ என்று சொல்வதை நாம் பார்க்கிறோம். இது இல்லாத நபர்கள் மிகவும் குறைவாக இருப்பதானாலேயே பெரும்பாலானோர் என்று நான் அடித்துச் சொல்கிறேன்” என்கிறார் ஆசிரியர்.

### மாற்றத்துக்கான பதில்...

இன்றைக்கு நீங்கள் ‘மிட் லைஃப் க்ரைசிஸில்’ இருந்தால் பின்வரும் கேள்விகளை உங்களிடம் கேட்டுக்கொள்ளுங்கள். இன்றைக்கு நீங்கள் இருக்கும் நிலைக்கு வருவதற்குமுன் நீங்கள் என்னவாக வேண்டும் என்று நினைத்தீர்கள்? நீங்கள் 19 வயதில் இருக்கும் போது உங்களுடைய கனவு என்னவாக இருந்தது, இன்றைக்கு உங்களுக்கு இருக்கும் கடமைகள் மற்றும் பொறுப்புகள் உங்களுக்கு வந்து சேர்வதற்கு முன் உங்களை சந்தோஷப் படுத்தும் விஷயங்களாக இருந்தவை என்னென்ன? இந்தக் கேள்விகளுக்கான பதிலை நீங்கள் கண்டுபிடித்தீர்கள் எனில், இந்த நிலையில் இருந்து மாற நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பது உங்களுக்குப் புலப்பட ஆரம்பிக்கும்” என்கிறார் ஆசிரியர்.

“நீங்கள் இப்போது இருக்கும் துறைமுகமானது உங்கள் குடும்பம், நண்பர்கள், சமூகம் நிர்ணயம் செய்த ஒரு துறைமுகம். அங்கே நங்கூரம் பாய்ச்சி இருப் பது அவர்கள் விருப்பத்துக்கு இணங்கவும் உங்களின் சௌகரியத்துக்காகவும் என்று கொள்ளலாம். இங்கேயிருந்து கப்பலைக் கிளப்பலாம் என்று நினைத்தாலே பயம் நம்மை பற்றிக் கொள்ளும். இருக்கும் துறைமுகம் சௌகரிய மாக இல்லாவிட்டாலும் கூட பழகிப்போயிருக்குமே! அதுதான் மிகப்பெரிய சிக்கலே. இங்கிருந்து கப்பலைக் கிளப்பினால் நமக்கு என்ன அசௌகரியங்கள் வரும், பிறருக்கு என்னென்ன அசௌகரியங்கள் வரும் என்பதையெல்லாம் சிந்தித்து தெளிவான முடிவெடுத்து பயணத்தைத் தொடங்க வேண்டும்.

இது கொஞ்சம் கடினம் என்றாலும், நீங்கள் யாராக இருக்க வேண்டும் என்று நினைக்கிறீர்களோ அந்த நிலைக்குச் செல்ல இந்தக் காரியத்தை நீங்கள் செய்தேயாக வேண்டும். உங்கள் வாழ்க்கைக் கதையை மாற்றி எழுதும் தருணம் இது. என்ன செய்வது? கட்டாயம் இந்தவித பயங்களை நீங்கள் கடந்தேயாக வேண்டும். இந்த நடவடிக்கையை நீங்கள் எடுக்க முயலும்போது நீங்கள் இதுவரை உங்கள் வாழ்வில் கடந்து வந்த கடிமான விஷயங்களையும் நினைவுபடுத்திப் பார்த்தால், இப்போது எடுக்கப்போகும் முடிவுக்கு அது மிகவும் உதவியாக இருக்கும்.

கொஞ்சம் வேடிக்கையாக இருந்தாலும் நீங்கள் வாழ்க்கையை ஆரம்பித்த காலத்தில் இருந்த உங்களுக்கே நீங்கள் இன்றைக்கு இருக்கும் நிலை குறித்து ஒரு கடிதம் எழுதுங்கள். அந்தக் கடிதத்துக்குப் பதிலாக கனவுகளும் எதிர்பார்ப்புகளும் கொண்ட அந்த இளைஞன் (நீங்கள்தான்) என்ன எழுதுவான் என்று சிந்தித்துப் பாருங்கள். அந்த இளைஞன் உங்களுக்கு எழுதும் பதிலில் நிச்சயமாக உங்களின் மீது நம்பிக்கை கொள்ளச் சொல்வான். இன்னும் உங்களால் சாதிக்க முடியும் என்று நம்பச் சொல்வான் இல்லையா...” என்று கேட்கிறார் ஆசிரியர்.

“இதைச் செய்த பின்னாலும் ஊக்கம் வரவில்லையா கவலையை விடுங்கள். நாம் கிளப்புவோம் கப்பலை. நாம் செல்ல வேண்டிய துறைமுகம் வேறு என்பது தெரிந்த பின்னால் ஊக்கம் என்பதெல்லாம் தேவையில்லாத ஆணிதானே...” என்று கிண்டலாகச் சொல்கிறார் ஆசிரியர்.

நீங்கள் மதிக்கும் விஷயங்கள், உங்களுடைய அடையாளம், உங்களுக்கு இருக்கும் கடமைகள் என வரிசையாகப் பல தடைக்கற்கள் உங்களுடைய பயணத்தை ஆரம்பிக்க தடையாக வந்து கொண்டேயிருக்கும். இவற்றில் புறந்தள்ள வேண்டியவற்றைப் புறந்தள்ளி, கவனித்து மாற்று ஏற்பாடு செய்ய வேண்டியவற்றுக்கு மாற்று ஏற்பாடு செய்து பயணத்தைத் தொடங்குவது எப்படி என்பதை இந்தப் புத்தகம் தெளிவாக நிஜவாழ்க்கை உதாரணங்களுடன் விளக்குகிறது.

மாற்றத்தை விரும்பும் நமக்கு மாறுவது குறித்து இருக்கும் அதீத பயத்தைப் போக்கும் கையேடாக உதவும் இந்தப் புத்தகத்தை ஆழ்ந்து படித்து நடைமுறைப்படுத்தினால், நம்மை சரியான இடத்துக்குக் கொண்டு சேர்க்க உதவும்.




## பீஸ்ட் வெளியீடு எப்போது?

விஜயின் 'பீஸ்ட்' படத்தின் படப்பிடிப்பு அண்மை யில் முடிவடைந்து தற்போது இறுதிக்கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிலையில் படத்தைத் தயாரிப்பு நிறுவனமான சன் பிக்சர்ஸ் படத்தின் அட்டகாசமான ஒளிப்படம் ஒன்றை வெளியிட்டு திரைப்படம் ஏப்ரல் மாதம் வெளி யாகும் என்று அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது.





## வசூல் சாதனை

'ஸ்பைடர்மான் - நோ வே ஹோம்' படம் உலக அளவில் 100 கோடி டொலர் வசூலைக் கடந்ததாக செய்திகள் வெளியாகி உள்ளன. கடந்த வாரம் முடிந்த கிறிஸ்துமஸ் விடுமுறையில் அந்த சாதனையை இந்தப் படம் பெற்றுவிட்டதாம்.

சொனி மற்றும் டிஸ்னி இருவரும் இணைந்து தயா ரித்த இந்தப் படம் 2021ஆம் ஆண்டில் அதிக வசூலைப் பெற்ற ஹொலிவூட் படம் என்ற பெருமையைப் பெற்றுள்ளது. 2019ஆம் ஆண்டு வெளிவந்த "ஸ்டார் வோர்ஸ், தி ரைஸ் ஒவ் ஸ்கைவாக்கர்" படம் தான் கடைசியாக ஒரு பில்லியன் டாலர் வசூலைக் கடந்த படமாக இருந்தது.

சுமார் 4 ஆயிரம் கோடி இலங்கை ரூபாய் செலவில் உருவான இந்தப் படம் 20 ஆயிரம் கோடி இலங்கை ரூபாய் வசூலை குறுகிய காலத்திலேயே வசூலித்துள்ளது டன், தொடர்ந்தும் படம் ஓடி வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# திரை விமர்சனம்




திரைப்படம் : கலாட்டா கல்யாணம்
இயக்கம் : ஆனந்த் எல் ராய்
இசை : ஏ.ஆர். ரகுமான்
நடிப்பு : தனுஷ், அக்ஷய்குமார், சாரா அலிகான்
வெளியான திகதி : 24 டிசம்பர் 2021

ஹிந்தியில் 'அத்ரங்கி ரே' என்ற பெயரில் ஓடிடி தளத்தில் வெளியான படத்தின் மொழிபெயர்ப்பு வடிவம்தான் இந்த 'கலாட்டா கல்யாணம்'.

பீகாரைச் சேர்ந்த பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவர் சாரா அலிகான். அவர் 21 முறை அவரது காதலன் அக்ஷய் குமாருடன் ஓடிச் செல்ல முயன்று, தோல்வி யடைந்து குடும்பத்தினரிடம் சிக்கியவர். அவருக்கு யாரோ ஒருவருடன் திருமணம் செய்து வைக்க வேண்டுமென முடிவெடுக்கிறார்கள். அந்த ஊருக்கு எதற்காகவோ வந்த மருத்துவக் கல்லூரி மாணவர், தனுஷைக் கடத்தி வந்து கட்டாயக் கல்யாணம் செய்து வைத்து விடுகிறார்கள். அடுத்த இரண்டு நாட்களில் தனுஸுக்கு வேறொரு பெண்ணுடன் திருமண நிச்சயம் நடக்க வேண்டிய நிலையில் சாராவுடன் திருமணம் நடந்து விடுகிறது. சாராவின் காதலன் தென்னாபிரிக்காவிலிருந்து திரும்பி வரும் வரையில் இருவரும் ஒன்றாகத் தங்கியிருக்க முடிவெடுக்கிறார்கள். இருப்பினும் தனது திருமண நிச்சயத்திற்குச் செல்கிறார் தனுஷ். அங்கு உண்மை தெரியவர நிச்சயம் நின்று விடுகிறது. பின்னர் சாராவுடன் தனது விடுதிக்கு திரும்புகிறார். அக்ஷய்குமாரும் திரும்பி வர, அவருடன் சாராவை அனுப்ப முடிவு செய்யும் போது எதிர்பாராத திருப்பம் ஏற்படுகிறது. அது என்ன என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

இடைவேளைவரை கலாட்டாவாக நகரும் படம், அதன் பின் எந்த திருப்பமும் இல்லாத காரணத்தால் தடுமாறுகிறது. அதைச் சரி செய்திருந்தால் மிகவும் சுவாரசியமான ஒரு படமாக அமைந்திருக்கும்.

முழுப் படத்தையும் தனுஷ்தான் தாங்கிப் பிடிக்கி றார். உணர்வுபூர்வமான பல காட்சிகள் அவருக்குப் படத்தில் உண்டு. தனது நடிப்பை முழுமையாக படம் முழுவதும் நிரூபித்திருக்கிறார். தமிழ் இளைஞன் கதாபாத்திரம் என்பதால் அவருக்குப் பொருத்த மாகவும் உள்ளது. தமிழில் தனுஷே குரல் கொடுத்தி ருப்பதால் மொழிபெயர்ப்பு படம் என்பது குறையாகத் தெரியவில்லை.

குறும்புநிறைந்த கதாபாத்திரத்தில் சாரா அலிகான். அவருடைய கதாபாத்திரத்தில் எந்த அளவிற்கு இளமைத் துள்ளலுடன் செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்திருக்கிறார். இல்லாத அக்ஷய்குமார் கதாபாத்திரத்தை இருப்பதுபோல் உணரும் மனதளவில் பாதிக்கப்பட்ட கதாபாத்திரம். அது மாயை என்பது தெரியாமல் அப்படியே இயல்பாய் நடித்திருக்கிறார்.

சிறப்புத் தோற்றம் என்றாலும் படம் முழுவதும் வரும் கதாபாத்திரமாக அக்ஷய்குமார் கதாபாத்திரம் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவருடைய நடிப்பை வெளிப்படுத்தக்கூடிய வாய்ப்பில்லை என்றாலும் படத்திற்கு பலம் சேர்க்கிறார்.

தனுஷின் நண்பராக நடித்திருப்பவர்தான் நகைச்சுவைக்குப் பொறுப்பு. பல இடங்களில் சிரிக்க வைக்கிறார்.

ஏ.ஆர்.ரஹ்மான் இசையில் 'சக்க சக்க சக்களத்தி பாடல் ரசிக்க வைத்துள்ளது. காரைக்குடி அரண் மனை போன்ற வீடுகளில் தமிழ் இயக்குநர்கள் கூட இவ்வளவு சிறப்பாக பாடல்களைப் படமாக்கியது



## சாதனை படைத்த வலிமை

வினோத் இயக்கத்தில் அஜித் நடித்துள்ள படம் வலிமை. காலா புகழ் நடிகை ஹுமா குரேஷி நாயகியாகவும், தெலுங்கு நடிகர் கார்த்திகேயா வில்லனாகவும் நடித்துள்ளனர். அதிரடி சண்டைகள் நிறைந்த படமாக இது உருவாகி உள்ளது.

இந்தப் படத்தின் டிரைலர் வெளியான ஒருநாளிலேயே ஒரு கோடிக்கும் அதிகமான பார்வைகளை கடந்து சாதனை படைத்துள்ளது.

தைப்பொங்கல் நாளில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்ட இந்தப் படம் எதிர்வரும் 13ஆம் திகதி வெளியாகும் என்பதுடன், கிட்டத்தட்ட 3 மணிநேர படமாக இது உருவாகியுள்ளது.



## சூர்யா பட பாடல் வெளியீடு

சூர்யா, பிரியங்கா மோகன், சத்யராஜ், சூரி உள்பட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் எதற்கும் துணிந்தவன். டி இமான் இந்த படத்திற்கு இசையமைத்திருக்கிறார். எதிர்வரும் பெப்ரவரி 4ஆம் திகதி இப்படம் 5 மொழிகளில் திரைக்கு வரவுள்ளது.

தற்போது எதற்கும் துணிந்தவன் படத்தின் இறுதிகட்ட பணிகள் விறுவிறுப்பாக நடந்து வருகின்றன. இப்படத்தின் முதல் பாடலான "வாடா தம்பி" ஏற்கனவே வெளியாகி ரசிகர்களின் வரவேற்பை பெற்றது. 'உள்ளம் உருகுதே' என்ற இரண்டாவது பாடல் கடந்த வாரம் வெளியானது யுகபாரதி எழுதி இந்த பாடலை பிரதீப் குமார், வந்தனா சீனிவாசன் மற்றும் பிருந்தா மாணிக்கவாசகன் ஆகியோர் இணைந்து பாடியுள்ளனர்.



## மீண்டும் ஆரம்பம்

நிசப்தம் படத்திற்கு பிறகு எந்த படத்திலும் நடிக்கவில்லை அனுஷ்கா. ஆனால், தெலுங்கு நடிகர் நவீன் பொலி ஷெட்டிக்கு ஜோடியாக அனுஷ்கா ஒரு படத்தில் நடிப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகின. எனினும், பொது முடக்கம் காரணமாக அந்தப் படத்தின் படப்பிடிப்பு நிறுத்தப்பட்டிருந்தது.

இந்தப் படத்தின் படப்பிடிப்பு விரைவில் ஆரம்பமாகவுள்ளது. ஆனால், அனுஷ்காவுக்கு தற்போது வயது 40, நவீனுக்கு 32 . இதனால் இந்த படத்தில் இவர்கள் இருவரும் ஜோடி சேர்ந்து நடிக்கவில்லை. மாறுபட்ட வேடங்களில் நடிக்கின்றனர் என்று கூறப்படுகிறது.



# அவமானத் தோல்வி!

இங்கிலாந்து அணி அவுஸ்திரேலிய அணியுடன் மோதிக் கொண்டிருக்கிறது. ஆனால், அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்துடன் மோதவே இல்லை. ஜோ ரூட்டுடன் மட்டுமே மோதிக் கொண்டிருக்கிறது.

அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் இடையேயான ஆஷஷ் தொடரின் மூன்றாவது போட்டி நடந்து முடிந்திருக்கிறது. இரண்டரை நாள் கூட நீடிக்காத இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி மிக மோசமாக தோற்றுள்ளது.

முதல் இனிங்ஸில் 267 ஓட்டங்களை மட்டுமே எடுத்த நிலையிலும் அவுஸ்திரேலிய அணி அபாரமான இனிங்ஸ் வெற்றியை பெற்றுள்ளது. இந்த வெற்றி மூலம் இந்த ஆஷஷ் தொடரையும் அவுஸ்திரேலியா கைப்பற்றியுள்ளது.

இது உண்மையிலேயே, இங்கிலாந்து அணிக்கு இது அவமானகரமான தோல்விதான். இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடி, 185 ஓட்டங்களை எடுத்திருந்தது. பதிலுக்கு அவுஸ்திரேலியா 267 ஓட்டங்களை முதல் இனிங்ஸில் எடுத்திருந்தது. இங்கிலாந்தை விட 82 ஓட்டங்கள் முன்னிலை. இந்த 82 ஓட்டங்களைக்கூட கடக்க முடியாமல் 68 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்து தோல்வி அடைந்திருக்கிறது. இரண்டரை நாள் அளவுக்கே போட்டி நடந்துள்ளது. அதற்குள் இங்கிலாந்து அணியின் கதை முடிந்து விட்டது. ஓர் இனிங்ஸில் மட்டுமே துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா 267 ஓட்டங்களையே பெற்றது. கடந்த நூறு ஆண்டுகளில் மிகக்குறுகிய - இத்தகைய ஓட்ட இலக்குடன் வேறு எந்த ஓர் அணியும் இனிங்ஸ் வெற்றியை பெறவில்லை. இதை அவுஸ்திரேலியாவின் நூற்றாண்டு சாதனை எனச் சொல்வதை விட இங்கிலாந்தின் நூற்றாண்டு கண்டிராத அவமானகரமான தோல்வி என அழைப்பதே சரியாக இருக்கும்.

இரண்டாம் நாள் ஆட்டம் முடியும்போது, இங்கிலாந்து அணி 31-4 என்ற நிலையில் இருந்தது. ஆடுகளத்தில், ஜோ ரூட்டும் பென் ஸ்ரோக்ஸ/ம் இருந்தனர். இனிங்ஸ் தோல்வியைத் தவிர்க்க வெறும் 51 ஓட்டங்கள் மட்டுமே தேவைப்பட்டிருந்தது. அதனால் இனிங்ஸ் தோல்வியை பற்றியெல்லாம் யாரும் பெரிதாக யோசிக்கவே இல்லை. ஜோ ரூட் நின்று எப்படியாவது உருட்டி முதல் போட்டியைப் போன்று ஆஸ்திரேலியாவிற்கு ஒரு சொற்ப இலக்கையேனும் நிர்ணயித்துவிடுவார் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மூன்றாம் நாள் ஆட்டம் தொடங்கிய ஒரு மணி நேரத்திலேயே எல்லாம் தலைகீழாக மாறியது. வெறும் 15.4 ஓவர்களில் 37 ஓட்டங்களுக்குள் எஞ்சியிருந்த 6 விக்கெட்களையும் இழந்து இங்கிலாந்து இனிங்ஸ் தோல்வியை அடைந்தது.

அறிமுக வீரரான பொலன்ட் இந்த 6 விக்கெட்களில் 4 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார். ஒட்டுமொத்தமாக இந்த இனிங்ஸில் 4 ஓவர்களை மட்டுமே வீசி 7 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 6 விக்கெட்களை வீழ்த்தியிருந்தார்.

32 வயதாகும் பொலன்ட் முதல்தர போட்டிகளில் அனுபவமிக்கவராக இருந்தாலும் சர்வதேச அரங்கில் இதுதான் அவரின் முதல் டெஸ்ட். ஓர் அறிமுக வீரரால் வெறும் நான்கே ஓவர்களை வீசி இங்கிலாந்தை சுருட்டிவிட முடிகிறது. அந்த அளவுக்குத்தான் இங்கிலாந்து அணியின் துடுப்பாட்ட தரம் இருக்கிறது. இங்கிலாந்து அணி அவுஸ்திரேலிய அணியுடன் மோதிக் கொண்டிருக்கிறது. ஆனால், அவுஸ்திரேலிய அணி இங்கிலாந்துடன் மோதவே இல்லை. ஜோ ரூட்டுடன் மட்டுமே மோதிக் கொண்டிருக்கிறது.

இங்கிலாந்து அணி போட்டியை வெல்ல 20 விக்கெட்களை வீழ்த்தியாக வேண்டிய சூழலில், அவுஸ்திரேலிய அணி வெறும் 2 விக்கெட்களை வீழ்த்தினாலே போதும். ஜோ ரூட், அவர் மட்டும்தான் அவுஸ்திரேலியாவிற்கு கொஞ்சம் சவாலளித்திருக்கிறார். மற்ற துடுப்பாட்டவீரர்கள் எல்லாம் அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர்களுக்கு ஒரு பொருட்டே இல்லை என்று ஆஷஷின் கடந்த மூன்று போட்டிகளும் நிருபித்திருக்கின்றன.

# புதிய சம்பியன்

12.12.2021 - இந்த ஐகானிக் நாளில் அபுதாபியில் அரங்கேறிய ஐகானிக் பந்தயத்தை நிச்சயம் யாராலும் மறந்திட முடியாது. சர்ச்சைகளுக்கும் நாடகங்களுக்கும் நடுவே நடந்து முடிந்த அந்தப் பந்தயம் ஒரு புதிய சம்பியனைப் பரிசளித்திருக்கிறது. போர்முலா 1 தடவரிசையில் புதிய அரசனாக மகுடம் சூடியிருக்கிறார் மக்ஸ் வெர்ஸ்ரப்பன். 2021 தொடரில் கடைசி பந்தயத்தில், கடைசி திருப்பத்தில் லூயிஸ் ஹமில்டனை முந்தி வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைப் பதிவு செய்திருக்கிறார் இந்த இளம் பந்தய வீரர்.

2015ஆம் ஆண்டு 17 வயது சிறுவனாக போர்முலா வன் உலகத்துக்குள் நுழைந்தார் மக்ஸ். அப்போது முதல் சாதனைப் புத்தகத்தைப் புரட்டிப் போடுவதே இவரின் பிரதான வேலையாக இருக்கிறது. மிகஇளம் வயதில் பந்தயத்தில் பங்கேற்றவர் என்ற சாதனையில் தொடங்கியவர், இப்போது ஒரே தொடிரில் அதிக முறை போடியம் ஏறியவர் (18) என்ற சாதனையோடு பட்டம் வென்றிருக்கிறார்.

ஒரு 24 வயது வீரர் சம்பியனாகியிருக்கிறார் என்று சொல்லும்போது, இவரின் அருமை தெரிந்துவிட வாய்ப்பில்லை. ஆனால், அந்த 24 வயது வீரருக்கு 7 வருட போர்முலா வன் அனுபவம் இருக்கிறது என்றால், எல்லோரும் உறைந்து விடுவார்கள். 18 வயது நிரம்பி அரசாங்கத்திடம் ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு முன்பே, போர்முலா வன் அனுமதிப் பத்திரம் வாங்கியவர் இவர். இவர் தவழ்ந்து பழகியதும் நடந்து பழகியதும் பந்தய திடலில் எனும்போது, இதுவே சிலருக்கு ஆச்சர்யமாக இருக்காது.

மக்ஸின் தந்தை ஜோஸ் போர்முலா வன் ரேஸர். அம்மா சோஃபியும் பந்தய வீராங்கனைதான். இரத்தத்திலேயே கார்ப்பந்தயத்தில் ஊறிப்போனவர், திடலில் கால் பதிக்காமல் போனால்தான் ஆச்சரியம். ஆனால், கால் பதித்ததோடு நிற்காமல், தன் பெயர் சொல்லும் அளவுக்குத் தடம் பதித்திருக்கிறார் மக்ஸ்.

ஹமில்டன் போன்ற ஒரு மகத்தான ஜாம்பவானை வெற்றிக்காக கடைசி திருப்பம் வரை ஓட வைத்ததே வெர்ஸ்ரப்பனுக்கு மாபெரும் வெற்றிதான். பஹ்ரைனில் ஆரம்பித்த முதல் பந்தயத்தில் இருந்தே ஹமில்டனுக்குக் கடும் போட்டியளித்துக் கொண்டிருந்தார் மக்ஸ். எந்த இடத்திலும் பின்வாங்காமல், தவறுகள் அதிகம் செய்திடாமல், ஒரு சம்பியனுக்கான மனோபாவத்துடனேயே செயல்பட்டார்.




பந்தய திடலில் வெளிப்படும் அவரின் செயல்பாடு, அவர் மனதின் பிரதிபலிப்பே! 'எந்த இடத்திலும் பின்வாங்க மாட்டேன். கொஞ்சம் கூட யாருக்கும் விட்டுக்கொடுக்க மாட்டேன். வெற்றியைப் பறிக்கக் கிடைக்கும் மிகச் சிறிய வாய்ப்பையும்கூட விடாமல் பயன்படுத்திக் கொள்வேன்'. இதுதான் களத்திற்கு உள்ளேவும் வெளியேவும் வெர்ஸ்ரப்பனின் கொள்கை. இதுதான் அவர் மீதான ஈரப்புக்குக் காரணம். இது விமர்சனத்துக்கு உட்பட்டாலும் நாளுக்கு நாள் முதிர்ச்சியடைந்து கொண்டுதான் இருக்கிறார் வெர்ஸ்ரப்பன். கற்றுக்கொள்ளவும், மாற்றிக்கொள்ளவும் இன்னும் போதிய காலம் இருக்கிறது.

# 2021 உதைபந்து உலகம்!






2021ஆம் ஆண்டு நடந்த மிகப்பெரிய உதை பந்தாட்ட தொடர் யூரோ 2020. கொரோனாவால் ஒரு வருடம் தள்ளிப்போன இத்தொடர், 11 நகரங்களில் நடத்தப்பட்டது. இதில், இளம் இங்கிலாந்து அணியை பெனால்டியில் வீழ்த்தி கிண்ணம் வென்றது இத்தாலி. மற்ற அணிகளைப் போல் சுப்பர் ஸ்ரார் வீரர்கள் இல்லாவிட்டாலும், ராபர்டோ மன்சினியின் வழிநடத்த லில் அட்டகாசமாக செயல்பட்டது இத்தாலி. அந்த அணியின் கோல் காப்பாளர் கியான்லூயி டொன்ன ருமா, இந்தத் தொடரின் சிறந்த வீரருக்கான விருதை வென்றார்.

இந்தத் தொடரில் ரசிகர்களின் இதயத்தை உறைய வைத்த ஒரு சம்பவம் அரங்கேறியது. டென்மார்க் - ஐஸ்லாந்து போட்டியின்பொது, டென்மார்க் நட்சத்திர வீரர் கிறிஸ்டியன் எரிக்சன் திடீரென மைதானத்தில் விழுந்தார். அசைவற்று அவர் விழுந்து கிடந்ததைப் பார்த்து ஒட்டுமொத்த மைதானம் அதிர்ச்சியடைந்தது. மருத்துவர்கள் வந்து வெகுநேரம் அவரைப் பரிசோதித்த னர்.

அப்போது டென்மார்க் வீரர்கள் வட்டமாக நின்று எரிக்சனைப் பாதுகாத்து நின்றது. அவரை மறைக்க ஐஸ்லாந்து கொடி பயன்படுத்தப்பட்டதெல்லாம் நெகிழ்வாக இருந்தது. ஒருவழியாக எரிக்சனைக் காப்பாற்றி அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றனர். துரிதமாகச் செயல்பட்டு அவரைக் காப்பற்றிய மருத்துவக் குழுவுக்கும், முதலில் அவரைக் காப்பாற்றிய டென்மார்க் அணித் தலைவர் கியாருக்கும் விருது வழங்கி மரியாதை செய்தது பிபா.

**கோபா அமெரிக்கா**

மெஸ்ஸியின் முதல் சர்வதேசக் கோப்பையாக அமைந்தது 2021 கோபா அமெரிக்கா தொடர். ஒவ்வொரு முறையும் இந்தத் தொடரை வெல்ல முடியாமல் அவர் தவிப்பதும், அதன்பிறகு ஓய்வு பெறுவதாகச் சொல்வதும் எனப் பெரிய ரணகளமே நடக்கும். ஆனால், இந்த முறை தன் கனவை நனவாக்கிக்கொண்டார் மெஸ்ஸி. இறுதிப் போட்டியில் 1-0 என பிரேஸிலை வீழ்த்தி சம்பியனானது ஆர்ஜென் ரீனா. இந்தத் தொடரில் அதிக கோல்கள் அடித்தது, அதிக அசிஸ்ட் செய்தது என எல்லா பட்டியலிலும் முதலிடத்தில் இருந்தது அவர்தான். தொடரின் சிறந்த வீரர் - சந்தேகம் என்ன? மெஸ்ஸியேதான்!

**வீரர்கள் அணிமாற்றம்**

கடந்த ஆண்டு முதல் நடந்துகொண்டிருந்த மெஸ்ஸி - பார்சிலோனா பிரேக் அப் போர் இந்த ஆண்டு முடிவுக்கு வந்தது. கொரோனாவால் நிதி பிரச்னைக்குத் தள்ளப்பட்ட பார்சிலோனா, தங்கள் செலவுகளைக் குறைக்க, மெஸ்ஸியை விடுவித்தே ஆகவேண்டிய கட்டாயத்துக்குத் தள்ளப்பட்டது. மெஸ்ஸியும் கண்ணீர் மல்க தன் அணிக்கு விடைகொடுத்தார். அனைவரும் எதிர்பார்த்ததுபோல் பாரிஸ் சென் ஜெர்மைன் அணி அவரை ஒப்பந்தம் செய்தது. அவரை மட்டுமல்ல... செர்ஜியோ ரமோஸ், ஜோர்ஜினியோ வைனால்டம், கியான்லுயி டொன்னருமா போன்ற நட்சத்திர வீரர்களை கட்டணம் எதுவும் இல்லாமலே வாங்கியது அந்த அணி.

மெஸ்ஸி பிரான்ஸ் பக்கம் போனால், ரொனால்டோ மீண்டும் இங்கிலாந்துக்குத் திரும்பினார். ஜூவன்டஸ் அணியிலிருந்து அவர் விலகுவதாகவும், மன்செஸ்டர் சிற்றி அவரை வாங்கப்போவதாகவும் செய்திகள் வந்தன. ஆனால், கடைசியில் தன் பழைய அணியான மன்செஸ்டர் யுனைற்றெட்டுக்குத் திரும்பினார் அவர். அவருக்குப் பிறகு ஹேரி கேன் மன்செஸ்டர் சிற்றிக்குச் செல்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், அதுவும் நடக்கவில்லை. இருந்தாலும், இங்கிலாந்து வீரர் ஜேக் கிரீலீஷை 100 மில்லியன் பவுண்ஸ்களுக்கு வாங்கியது சிட்டி. அதேபோல், 97.5 மில்லியன் பவுண்ஸ்கள் செலவு செய்து, ரொமேலு லுகாகுவை மீண்டும் தங்கள் அணிக்குக் கொண்டுவந்தது செல்சீ.



## சுன்னாகம் இராமநாதன் கல்லூரி திறனாய்வு வகுப்பு திறப்பு நிகழ்வு

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் தலைமையில் திறனாய்வு வகுப்பு திறப்பு நிகழ்வு நடைபெற்றது. இலண்டனில் வசிக்கும், அளவெட்டி சிவசிதரம்பரநாதன் சிவகணேசன் திறனாய்வு வகுப்பு அமைவதற்கு வேண்டிய நிதி உதவியை இலண்டன் இரத்தினம் நிதியத்திற்கு வழங்கியிருந்தார். கணேசனின் தாயார் திருமதி. மங்கையற்கரசி சிதம்பரநாதன் இராமநாதன் கல்லூரி பழைய மாணவியாவார். இரத்தினம் நிதியம் இதுவரையில் 100ற்கு மேற்பட்ட திறனாய்வு வகுப்புகளை நாட்டின் பல பாகங்களிலும் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்க விடயமாகும். இந்நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி. யமுனா இராஜசீலன் நாடா வெட்டி வகுப்பறையைத் திறந்து வைத்தார். அவர் பேசும் பொழுது வருங்கால சூழலில் கணினி உபயோகத்தின் முக்கியத்துவம் பற்றியும் திறனாய்வு வகுப்புகளின் உதவியால் வசதியில்லாத பிள்ளைகளும் பயன் அடைந்து வாழ்கையில் முன்னேறுவார்கள் எனக் குறிப்பிட்டார். செல்லையா மோகநாதன், கோட்டக் கல்வி அலுவலகம், கிருஷ்ணகுமார். டாக்டர் ஆதித்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். அதிபர், இரத்தினம் பவுண்டேஷனுக்கும் விருந்தினருக்கும் பாடசாலை சமூகத்தின் சார்பில் நன்றி தெரிவித்தார்.









## 5 விருதுகளைப்பெற்று ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை சாதனை

மட்டக்களப்பு மாவட்ட சுகாதார பணிப்பாளர் பிரிவு மாகாண வைத்தியசாலைகளிடையே நடாத்திய போட்டியில் 5பெரும் விருதுகளைப்பெற்று ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை முதலிடம் பெற்று சாதனைபடைத்துள்ளது.

ஆரையம்பதி மாவட்டவைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியஅதிகாரி மருத்துவர் திருநாவுக்கரசு கௌரிசங்கரன் இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டார்.

மாவட்டத்திலுள்ள கிழக்குமாகாணசபைக்குட்பட்ட சுகாதார நிறுவனங்களிடையே நடத்தப்பட்ட சிறந்த செயற்றிறனுக்கான போட்டியில், மாவட்டத்திலேயே முதல் இடம்பெற்றுச்சாதனை படைத்த ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலை சிறந்த ஆரோக்கிய வாழ்வு நிலையப்போட்டியிலும் முதலிடம் பெற்றது.

ஆரம்ப சுகாதார பராமரிப்பு திட்டம் 2019 2010 ஆம் ஆண்டுக்கான போட்டியில் இரண்டாமிடத்தையும் ஆய்வுகூட சேவைகள் போட்டியிலும் சிறந்த மருந்துக்களஞ்சியசாலை மற்றும் மருத்து வழங்கல் சேவையிலும் சிறப்பு பாராட்டு விருதுகளையும் சுவீகரித்துக்கொண்டது.

அதற்கான விருதுகள் இவ்வாண்டுக்கான செயற்றிறன் விருது வழங்கும் விழாவில்வைத்து வழங்கப்பட்டது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை கருணாகரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு இவ்விருதுகளை வழங்கி வைத்தார்.

ஆரையம்பதி மாவட்டவைத்தியசாலையின் பொறுப்பு வைத்தியஅதிகாரி வைத்தியகலாநிதி டாக்டர் திருநாவுக்கரசு கௌரிசங்கரன் இவ்விருதுகளைப் பெற்றுக்கொண்டார். தாதிய பரிபாலகி திருமதி ரஜனி யோகேஸ்வரன் தலைமையிலான குழுவினரும் கலந்துகொண்டனர்.

இதேவேளை தேசிய உற்பத்தித்திறன் போட்டியில் தொடர்ச்சியாக 3ஆம் இடத்தை பெற்றுவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.








## புங்குடுதீவில் நடைபெற்ற எழுத்தாளர் வில்வரெத்தினத்தின் நினைவேந்தல்

ஈழத்தின் மூத்த எழுத்தாளர் அமரர் சு.வில்வரெத்தினம் அவர்களின் பதினைந்தாவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு அண்மையில் எழுத்தாளர் நிலாந்தன் தலைமையில் புங்குடுதீவு அம்பலவாணர் அரங்கில் நடைபெற்றது. சூழகம் அமைப்பினரும் படைப்பாளிகள் உலகம் அமைப்பினரும் இணைந்து நடத்திய இந்நிகழ்வில் வில்வரெத்தினம் எழுதிய வாசிகம் நூல் வெளியிடப்பட்டதோடு அவரது பாடல்கள் உள்ளடங்கிய ஊருக்கு திரும்புதல் இறுவட்டும் வெளியீடு செய்துவைக்கப்பட்டது .





இந்நிகழ்வில் யாழ். குடாநாட்டில் பல்வேறு துறைகளிலும் சேவையாற்றி வருகின்ற பொ.ஐங்கரநேசன் (சூழலியல்), மாணிக்க வாசகர் இளம் பிறையன் (விளையாட்டுத்துறை), யோ.யதுநந்தனன் (மருத்துவம்), கணபதி சர்வா னந்தா (ஊடகம்), அ.நிரோசன் (சட்டத்துறை), சிவா (மூத்த கிராம சேவையாளர்) ஆகியோர் கௌரவிக்கப்பட்டிருந்தனர்.

## பல்கலைக்கழகம் செல்லும் கல்விச் சாதனையாளர்கள் கௌரவிப்பு

கிழக்கின் பழம்பெரும் கழகமாம் காரைதீவு விளையாட்டுக்கழகத்தின் உறுப்பினர்களாகவிருந்து இவ்வாண்டு பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்கள் ஐவர் வருடாந்த பொதுக்கூட்டத்தில் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

வருடாந்த பொதுக்கூட்டம் கழக தலைமையகத்தில் கழகத்தலைவர் கி. சசிகரபவான் தலைமையில் நடைபெற்ற போதே இக்கௌரவிப்பு இடம்பெற்றது.

பொறியியல்துறைக்குத்தெரிவான ரி.யதுர்சன் ஜே.மதுஷாகன் எஸ்.தனோஜன் சித்தமருத்துவத்துறைக்குத் தெரிவான என்.பிருந்தாபன் விளையாட்டுவிஞ்ஞானததுறைக்குத் தெரிவான எஸ்.புவீந்திரா ஆகிய கழகவீரர்கள் பரிசுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

அதிதிகளான கழகப்போசகர்களான உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வே.இராஜேந்திரன் உதவிக்கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா மற்றும் முன்னாள் தலைவர்களான சி.நந்தகுமார் வெ.அருட்குமரன் எல்.சுரேஸ் ஆகியோர் கலந்துகொண்டு மேற்படி ஐவரையும் பாராட்டி பரிசுகள் வழங்கினர்.

கழகச்செயலாளர் வெ.உதயகுமரன் ஆண்டறிக்கையை சமர்ப்பிக்க நிதிச்செயலாளர் என்.சுபதீபன் கடந்தகால நிதி அறிக்கையை சமர்ப்பித்தார். இதன் போது 2022ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. புதிய தலைவராக வெ.அருட்குமரன் செயலாளராக எஸ்.கிருஷாந்த் பொருளாளராக எ.பிரேமானந்த் உள்ளிட்ட புதிய நிருவாகம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டது. மாலையில் ஒன்றுகூடலும் கௌரவிப்பும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.










# போதி மரம்

குரு அரவிந்தன்



அதிகாலையின் மங்கிய இருட்டில் பனிக் குளிரைக் கிழித்துக் கொண்டு அருகே உள்ள பௌத்த விஹாரையிலிருந்து ஒலிபெருக்கியில் “பிரித்“ ஓதும் சத்தம் அந்த இராணுவ மருத்துவமனைக்குள் எதிரொலித்தது.

புத்தம் சரணம் கச்சாமி
தம்மம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி...!

அந்த மருத்துவ மனையில் தூக்கம் வராமல் படுக்கையில் புரண்டு கொண்டிருந்த பண்டா ”நான் ஒரு நல்ல பௌத்தனா?” என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டான். ”இல்லை” என்ற அவனது மனச்சாட்சியின் பதில் அவன் மனதைக் குடைந்து கொண்டே இருந்தது.

“நான் ஏன் இப்படிச் சாக்கடைப் புழுவாய் மாறினேன்? நாட்டுப்பற்றா? மதவெறியா? இல்லை மொழிவெறியா?”

எதுவுமே இல்லை!

குடும்பத்தின் வறுமை தான் அவனை இராணுவத்தில் தொழில் புரிய இழுத்து வந்தது என்பது அவனுக்குத் தெரியும். அவனுக்குப் பள்ளிப் படிப்பு அதிகம் வரவில்லை. அவனது கட்டுமஸ்தான உடம்பிற்கு இந்தத் தொழில் ஒன்றுதான் அந்த நேரம் ஏற்றதாக இருந்தது. எனவே தான் வேறுவழியில்லாமல் இராணுவத்தில் சேர்ந்தான். அவன் இராணுவத்தில் சேர்ந்த காலத்தில் தினமும் பயிற்சி செய்வது, சாப்பிடுவது, தூங்குவது, போன்றவை தான் இராணுவத்தின் தொழிலாக இருந்தது.

எப்போதாவது எங்கேயாவது மழை வெள்ளமென்றால் அங்கே போய் மக்களுக்கு உதவி செய்வார்கள். அவ்வளவுதான். எந்த ஒரு லட்சியமும் இல்லாமல் இப்படித்தான் அவனது இராணுவ வாழ்க்கை ஆரம்பமானது.

ஆனால், சில ஆண்டுகளுக்கு முன் நாட்டில் நடைபெற்ற இனக்கலவரம் அவனால் மறக்க முடியாத ஒரு சம்பவமாகிவிட்டது. தமிழர்களின் சொத்துக்கள் சூறையாடப்பட்டு தமிழ்ப் பெண்கள் கற்பழிக்கப்பட்டுக் கொல்லப் பட்டபோது வீதிக் காவல் கடமையில் அவன் நின்றிருக்கிறான். கொள்ளை அடித்தவர்கள் தனது இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால் இவற்றைக் கண்டும் காணாதது போல அவன் இருந்திருக்கிறான். அன்றுதான் முதன்முதலாக அவனும் இப்படியான அநியாயத்திற்குத் துணைபோனான். அப்புறம் எத்தனையோ தடவைகள் இப்படியான அநியாயங்கள் நடக்கும் போதெல்லாம் தவறு என்று தெரிந்தும் வாய்மூடி மௌனமாய் இருந்திருக்கிறான்.

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை இவையெல்லாம் மனிதனின் அழிவிற்காக ஏற்பட்ட ஆசைகள்தான் என்பது அவனுக்குத் தெரியும். மாற்றான் வீட்டு மண்ணை ஆக்கிரமிக்க அரசு ஆசைப்பட்ட போது சேவை காரணமாக மறுக்க முடியாமல் அவனும் அங்கே கடமைக்குப் போனான். ஆக்கிரமித்த நிலத்தில் கால் பதித்த கட்டுப்பாடற்ற இராணுவம் தான்தோன்றித் தனமாய் அங்கே நடக்க முற்பட்டது. வறுமையில் வாடிய அப்பாவி மக்கள் துப்பாக்கி முனையில் பலவந்தமாய் அடக்கப்பட்டனர். காய்ந்து கிடந்த இளமைகள் அடங்காத ஆசைகளோடு பொன்னுக்கும், பெண்ணுக்கும் ஆசைப்பட்டு அலைந்தன. ஆகமொத்தமாக தீராத வெறியோடுதான் அந்த இராணுவம் அங்கே களம் புகுந்தது.

அன்று வீதிச் சோதனைக்காக உயர் அதிகாரியோடு அவனும் வேறு சிலரும் சென்ற போது தான் அந்தச் சம்பவம் நடந்தது. வீதிக்குக்குறுக்கே யாரோ கற்பாறை ஒன்றை நகர்த்தி இருந்தார்கள். பாதைத் தடை காரணமாக சந்தேகத்தின் பேரில் அருகே உள்ள வீடுகளைச் சோதனை போட்டார்கள். அப்போது தான் மங்கிய வெளிச்சத்தில் ஜன்னல் வழியாக அவள் முகம் அங்கே தெரிந்தது. கட்டில் விளிம்பில் தலை குனிந்தபடி அவள் உட்கார்ந்திருந்தாள். பார்த்த மாத்திரத்திலேயே அவளிடம் ஒரு கவர்ச்சி தெரிந்தது. அந்த அழகை அவளுக்குத் தெரியாமல் வெளியே நின்றபடி அவன் ரசித்துக் கொண்டிருந்தான்.

திடீரென வாசற் கதவை உதைத்துக் கொண்டு உயரதிகாரி உள்ளே நுழைவதையும் அவள் பயத்தோடு திடுக்கிட்டு எழுந்து நிற்பதையும் அவனால் பார்க்க முடிந்தது. அவள் மடியில் இருந்த குழந்தையைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொண்டாள். அவன் நல்ல நோக்கத்தோடு உள்ளே வரவில்லை என்பதை அவனது பார்வையில் இருந்தே அவள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவசரமாக முந்தானையை இழுத்து திறந்த மார்பை மறைக்க முயற்சி செய்தாள். அவள் இருந்த கோலமும் தனிமையும் உயரதிகாரியை வெறி கொள்ளச் செய்திருக்க வேண்டும். அவளைப் பிடித்திழுத்து மூர்க்கத் தனமாய் கட்டிலில் உயரதிகாரி தள்ளிய போதுதான் ”மது குடித்தால் தான் வெறிக்கும் மாது பார்த்தாலே வெறிக்கும்” என்று அந்த உயரதிகாரி அடிக்கடி சொல்வது அவனுக்கு நினைவிற்கு வந்தது.

“அம்மா” என்று அவள் அப்போது எழுப்பிய அந்த அவலக் குரல் கூட குழந்தையின் அழுகைக்குள் புதைந்து போயிற்று.

உயரதிகாரி காரியம் முடிந்து வெளியேறியதும் அவன் ஜன்னல் வழியாக உள்ளே எட்டிப் பார்த்தான். அவள் கசக்கப்பட்ட மலராய் அலங்கோலமாய் கட்டிலில் மயங்கிக் கிடந்தாள். மார்பகம் நனைந்திருந்தது. பால்வடிந்த வாயோடு பச்சைக்குழந்தை தரையில் வீரிட்டுக் கொண்டிருந்தது.

இதையெல்லாம் சகிக்க முடியாமல் திரும்பிக் கண்களை மூடிக் கொண்டவன் ”லெட்ஸ் கோ” என்ற உயரதிகாரியின் கட்டளைக்குப் பணிய வேண்டிவந்தது. ஆனாலும் கடமையின் நிமிர்த்தம் அவன் மீண்டும் மௌனம் காத்தான்.

அந்தத் தாய் அன்று போட்ட சாபமோ என்னவோ ஆனையிறவுச் சமரின் போது அவர்கள் ஆக்கிரமித்து வைத்திருந்த முகாம் விடுதலைப் போராளிகளால் முற்றுகை இடப்பட்டது. அவர்கள் தண்ணீரில்லாமல் நாவறண்டு உயிருக்குப் போராடியதும் முகாமை விட்டுத் தப்பிப் பின்பக்கமாய் ஓடும்போது தாங்களே முகாமின் பாது காப்பிற்காக புதைத்து வைத்த கண்ணி வெடியில் சிக்கி அந்த உயரதிகாரி பலியானதும், அவனது கால் ஊனமானதும் அவனால் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சியாகும்.

முகாமை விட்டுத் தப்பி ஓடும் போது தான் மரணம் அவனைப் பின்னால் துரத்துவது அவனுக்குப் புரிந்தது. இந்த உலகில் வாழப்போவது சிறிது காலம் தான் என்று அவனுக்கு தெரிந்த அடுத்த நிமிடமே மரணபயமும் அவனைப் பிடித்துக் கொண்டது. அது கூட அவனது ஒரு கால் கண்ணிவெடியில் சிக்கி ஊனமுற்ற போது தான் அப்படி அவனுக்குச் சிந்திக்கத் தோன்றியது. காலின் வலியை விட மனசுதான் அதிகம் வலித்தது.

இந்தக் குறுகிய காலத்திற்குள் மொழிவேற்றுமை, மதவேற்றுமை, ஜாதிவேற்றுமை போன்ற பல விதமான வேற்றுமைகளை அவன் சந்தித்து இருக்கிறான். இந்த வேற்றுமை உணர்வுகள் தானே மனிதனை மிருகமாக்கி ரத்த வெறி பிடித்து அவர்களை அலைய வைக்கிறது. வேண்டாம், வேற்றுமை ஒன்றுமே வேண்டாம்! இப்போதைக்கு அன்பு என்கிற இயற்கையின் மொழியைப் புரிந்து கொண்டாலே அவனுக்குப் போதும் போல இருந்தது!

”அன்பு” என்றதும் அவனது உடம்பு சிலிர்த்துக் கொண்டது. அன்பாலே முடியாதது ஒன்றுமில்லை. அது ஒரு இன்ப ஊற்று. என்றுமே வற்றாத ஒரு ஜீவநதி. போதிமரம் இல்லாமலே அவனுக்கு சிறிது சிறிதாக ஞானம் பிறந்தது.

இராணுவத்திடம் இருந்து வந்த “விரும்பினால் மறுபடியும் சேவைக்கு வரலாம்” என்ற அழைப்புக் கடிதம் அவனை மீண்டும் சிந்திக்க வைத்தது. யுத்தம் என்ற போர்வையில் ஒன்றுமே அறியாத அப்பாவித் தமிழர்களின் உயிரைப் பலி எடுக்கவா இந்த அழைப்பு?

சின்ன வயதில் படித்த யுத்த வெறி பிடித்த அசோகச் சக்கரவர்த்தியின் சரித்திரம் கண் முன்னால் விரிந்து நின்றது. புத்தபிரானும் பிறப்பால் ஓர் இந்து தானே! அவர் புனித பூமியில் அவதரிக் காவிட்டால் நானும் ஒரு இந்துவாக இருந்திருப்பேனோ? அன்று அந்தப் பெண் ”அம்மா” என்று கத்தாமல் ”அம்மே” என்று எனது மொழியில் அவலக்குரல் எழுப்பி இருந்தால் உதவிக்கு ஓடியிருப்பேனோ? ஒருவேளை ஊமையாகப் பிறந்திருந்தால் நான் என்ன மொழி பேசியிருப்பேன்? மொழி எல்லாம் ஊமையானால்... தான் இந்தமண்ணில் அமைதி நிலவுமோ? அவனது சிந்தனைகள் விரிந்து கொண்டே போக கலங்கிக் கிடந்த மனம் தெளிவானது.

அவன் தனது இராணுவ உடையைக் களைந்து விட்டு காவி உடை அணிந்து கொண்டான். ஆயுதத்தைக் கிழே போட்டுவிட்டு அகிம்சையைக் கைகளில் எடுத்துக் கொண்டான். கறை படிந்த உடம்பு தூய்மையானது போன்ற உணர்வு அவனுக்கு ஏற்பட்டது. இனி மனிதநேயம் ஒன்றே தனது லட்சியம் என்று எண்ணியவனாய் அருகே உள்ள பௌத்தசாலையை நோக்கி நொண்டிக் கொண்டே நடந்தான்.

வானத்தைப் பார்த்துப் பழகிப்போன அவன் அனிச்சையாக நிமிர்ந்து பார்த்தான். யுத்த மேகங்கள் கலைந்து போக வானத்து இரைச்சல் அடங்கிப் போயிருந்தது. அவனது மனதைப் போல நீண்ட நாட்களின் பின் கீழ்வானம் வெளித்திருந்தது. தொலைவானத்தில் காலைச் சூரியனின் கதிரொளியில் வெள்ளைப் புறாக்கள் சுதந்திரமாய் சிறகடித்துப் பறப்பதைப் பார்க்க காயப்பட்ட மனதிற்கு இதமாக இருந்தது.

பௌத்த மடத்தை அடைந்த போது அதன் வாசற் கதவு இழுத்து மூடப்பட்டிருந்தது. போதி மரத்தின் கீழ் காவி உடை ஒன்று மடித்து வைக்கப்பட்டிருந்தது. பௌத்த பிக்குவினால் எழுதப்பட்ட குறிப்பு ஒன்றும் அங்கே பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

“தமிழர்களை வென்றெடுக்கும் யுத்தத்தில் பங்கு கொள்வதற்காக நான் இராணுவத்தில் சேர்ந்து ஆயுதம் ஏந்திப் போராடப் போகிறேன்.”

நிழல் நிஜமாக, நிஜம் நிழலானது! ●

# கொழும்பு துறைமுக நகரம் கடலில் எழும் எதிர்கால நகரம்

ராங் லூ



கொழும்பு துறைமுக நகரில் செயற்கையான தங்கக் கடற்கரை மீது இலங்கையரான சஞ்சீவ அல்விஸ் துறைமுக நகரில் கட்டியெழுப்பப்பட விருக்கும் நிதியியல் மையத்தைப் போன்ற மாதிரி மணற்கோட்டையொன்றை வெகு பிரயாசத்துடன் நிர்மாணித்துக்கொண்டிருந்தார். கடற்கரையில் விளையாடிக்கொண்டிருந்த மூன்று இலங்கைச் சிறுவர்கள் அல்விஸின் இந்த கைவண்ணத்தை அவதானித்துவிட்டு அவருடன் சேர்ந்து மணற்கோட்டையை கட்டியெழுப்ப ஓடோடி வந்து சேர்ந்துகொண்டார்கள்.

கடலில் இருந்து எழும் மணற் கோட்டையைப் பற்றி அல்விஸ் கூறியவற்றை அவதானித்த வண்ணமே ஒரு சிறுமி " கடலில் இருந்து ஒரு நகரத்தை கட்டியெழுப்ப முடியுமா ?" என்று ஆச்சரியத்துடன் கேட்டாள். கடலில் இருந்து எழும் இந்த நகரம் எதிர்காலத்தில் என்ன மாதிரி தோற்றமளிக்கும் ? இது அவளின் அடுத்த கேள்வி.

சைனா ஹார்பர் எஞ்சினியறிங் கம்பனியின் கொழும்பு துறைமுக நகரத் திட்டத்தில் அல்விஸ் ஐந்து வருடங்களாக ஒரு திட்டப் பொறியியலாளராக பணியாற்றிவருகிறார்.

கொழும்பின் மத்திய வர்த்தக மாவட்டத்துக்கு அண்மையாக அமைந்திருக்கும் கொழும்பு துறைமுக நகரம் மேற்கூறப்பட்ட சீனக்கம்பனியினாலும் இலங்கை அரசாங்கத்தினாலும் கூட்டாக நிர்மாணிக்கப்பட்டுவரும் பெரும் எடுப்பிலான ஒரு முதலீட்டுத் திட்டமாகும். மண்டலமும் பாதையும் (Belt and Road Initiative) செயற்திட்டத்தை கூட்டாக கட்டியெழுப்புவதில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்புக்கு இந்த துறைமுக நகரத்திட்டம் ஒரு வகைமாதிரியானதாகும்.

துறைமுக நகரத்திட்டம் தொடங்கப்பட்ட நாளில் இருந்தே அதன் நிர்மாணத்தை அல்விஸ் அவதானித்துவருகிறார். 1980 களில் மின்சார பொறியியல் மற்றும் இயந்திரமயமாக்கலை கற்றுக்கொள்வதற்காக அல்விஸ் சீனாவுக்கு சென்றிருந்தார். சிங்/ஹுவா பல்கலைக்கழகத்தில் அவர் 6வருடங்கள் பயின்றார்.

"எனது சொந்த நாடு துறைமுக நகரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கு சீனாவிடமிருந்து நான் பெற்ற அறிவைப் பயன்படுத்தி பங்கேற்பதில் மிகவும் பெருமையடைகிறேன்" என்று அல்விஸ் கூறினார்.

நிர்மாணத்தின் ஆரம்பக்கட்டத்தில் கொழும்பு அரசாங்கத்தின் பொருத்தமான திணைக்களங்களுடன் ஒருங்கிணைந்து செயற்படுவதே அவரின் பணியாக இருந்தது

இடர்பாடுகள் இல்லாத முறையில் திட்டம் ஒழுங்கமைவாக முன்னெடுக்கப்படுவதை உறுதிசெய்வதற்கு நிர்மாணப் பகுதியில் குறைந்தது இரு நீர் வளங்கள் தேவைப்பட்டது. அல்விஸ் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக இறுதியில் அந்த வளங்கள் கிடைத்தன." இப்போது நாம் செய்பவை எல்லாம் இலங்கையின் எதிர்காலத்துக்கான ஒரு மாதிரியாகும்" என்று அவர் சொன்னார்.





கடலில் இருந்து நிலத்தை மீட்டெடுக்கும் பணி 2019 ஜனவரியில் பூர்த்தி செய்யப்பட்டது.

"நில மீட்புத் திட்டத்தின் பூர்த்தி துறைமுக நகரத்திட்டத்தின் ஒட்டுமொத்த நிர்மாணத்தில் செய்யப்பட்ட முன்னேற்றத்தை மாத்திரமல்ல,உலக அரங்கில் சீனாவின் தீர்வுகளினதும் தொழில்நுட்பங்களினதும் பறைசாற்றுதலையும் குறித்து குறித்து நிற்கிறது " என்று சைனா ஹார்பர் எஞ்சினியறிங் கம்பனியின் கொழும்பு துறைமுக நகரத்திட்டத்தின் பிரதி திட்ட முகாமையாளர் ஷெங் ஹாவோ கூறினார்.

நில மீட்பு பூர்த்தியை அடுத்து தொடர்ச்சியாக பல புதிய வசதிகள் நிர்மாணிக்கப்பட்டன.அவற்றில் ஒரு மத்திய பூங்கா,செயற்கை கடற்கரை, விளையாட்டு பயிற்சி நிலயம், உல்லாசப் படகுத் துறை மற்றும் நடைப்பாலம் ஆகியவையும் அடங்கும்.

கொழும்பு துறைமுக நகரம் எமது நாட்டுக்கு எதிர்கால முன்னேற்றம் குறித்து மிகவும் நம்பிக்கையூட்டுகின்ற ஒரு திட்டமாகும் என்று இலங்கை தேசிய நூலக தலைவர் சொனால குணவர்தன கூறினார்.

இளம் புகைப்படக் கலைஞரான தாரக சமரசிங்க," கடலில் இருந்து நிலம் மீட்கப்பட்ட பிறகு எமது பிராந்தியம் விஸ்தரிக்கப்பட்டது குறித்து நான் பெருமையடைகிறேன். இந்த நிலமீட்பு எமது சிறுவர்களின் எதிர்காலத்தின் மிகவும் முக்கியமான பகுதிகளில் ஒன்றாகும் " என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

# பிரம்மாண்டமான மாற்று மோதிர மணப்பெண் கண்காட்சி கொழும்பில்



அரிது அரிது மானிடராய் பிறப்ப தரிது என்பது ஔவை சொல். ஆனால் அதிலும் அரிது என்ன தெரியுமா? இந்த காலத்தில் ஒரு நல்ல வாழ்க்கைத்துணையை தேர்ந்தெடுப்பதுதான். இந்த வாழ்க்கை அனைவருக்கும் ஒரு முறைதான் என்றால் அவ் வாழ்க்கையில் நம்மோடு இணையப் போகும் வாழ்க்கைத்துணை எவ்வாறிருக்கவேண்டும் என்ற கற்பனைகள் கொஞ்சம் அதிகம் தான். வாழ்வோடு இணைந்து பயணிக்கும் வாழ்க்கைத் துணையாக வரும் எதிர்பாலினம் சிறப்பாக அமைந்துவிட்டால் நம்முடைய வாழ்வின் ஒவ்வொரு தருணமும் சிறப்பானதே.

அப்படிப்பட்ட வாழ்க்கைத் துணையை அமைத்து கொடுத்து பலரின் வாழ்க்கையை அழகான தருணங்களாக மாற்றி பல வருடங்கள் கடந்தும் மக்களின் அசைக்கமுடியாத நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்று தம் சேவையை பரந்துபட்டளவில் வியாபித்து வருகிறது அருந்ததி இணைய திருமண சேவை. 2014 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து தற்போது வரை அதன் சேவை பல



வாடிக்கையாளர்களின் நல் வாழ்க்கைக்கு வழியமைத்துள்ளது.

திருமணமென்பது அனைவரினதும் வாழ்க்கைநெறியாகும். குறிப்பாக தமிழர்களுக்கு அது இன்றியமையாததொன்றே. ஆகையால் இலங்கை வாழ் தமிழர்களை மையப்படுத்தி அவர்களின் திருமணத்தேடலை எல்லாவிதத்திலும் பூர்த்தி செய்து வருகிறது அருந்ததி என்றால் அதற்கு மிகையாகாது.

ஏனைய திருமண சேவைகளிலிருந்து சற்று மாறுபட்ட வண்ணமாக திருமணத்திற்காக வாழ்க்கைத் துணை தேடலை இலகுபடுத்துவதோடு நின்றுவிடாமல் திருமணமொன்று இனிதே நிறைவுபெற தேவையான அனைத்து திருமண சேவைகளையும் வாடிக்கையாள ருக்கு வழங்கிவரு கின்றது.

இணையவழியிலான வரன் தேடல் சேவையுடன், திருமணக்கண்காட்சி, மணப்பெண் அலங்கார கண்காட்சி என பன்முகப்பட்ட நிகழ்வுகளை நடைமுறைப்படுத்திவருகிறது.அப்படி மேற்கொள்ளப்பட்டு வரும் அருந்ததியின் பிரபலமான நிகழ்வுகளில் ஒன்றுதான் "மாற்று மோதிரம் திருமணக் கண்காட்சி". ஒவ்வொருவருடமும் வெகுவிமர்சையாக நடைபெறும் இந்நிகழ்வு இவ்வருடமும் பிரம்மாண்டமாக நடைபெறவுள்ளது.

அனைவரும் ஆவலோடு காத்திருந்த அருந்ததியின் "மாற்று மோதிரம்" மணப்பெண் அலங்கார காட்சி மற்றும் ஏனைய பல சிறப்பு நிகழ்வுகளோடு நடைபெறவுள்ளது. இன,மத,மொழி பேதமின்றி நாடுபூராகவுமுள்ள 50 இற்கும் மேற்பட்ட நிபுணத்துவம் வாய்ந்த அழகுக்கலை நிபுணர்கள் இந் நிகழ்வில் கலந்துசிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வு தொடர்ந்தும் வெற்றிகரமாக நடைபெறும் என்பதற்கு சான்று அருந்ததியின் மேல் நம்பிக்கை வைத்து பங்களிப்பு செய்த திருமண சேவை வழங்குனர்கள், அழகுக்கலை நிபுணர்கள் ,வாடிக்கையாளர்கள் மற்றும் ஊழியர்கள் தான். அதிலும் குறிப்பாக இந் நிகழ்வின் பிரதான அனுசரனையாளர்களாக Sri Vijayas ஆடையகம் மற்றும் Joy Glorious நகையகமும் சாரிப்ளவுஸ் மற்றும் ஆரி வேலைப்பாடுகளுக்காக The Beads அலங்கார வேலைப்பாடுகளுக்காக Shahana Flowers மற்றும் புகைப்பட ஒழுங்கமைப்புகளுக்கு 3ADS Photographyயும் இந் நிகழ்விற்கு உத்தியோகப்பூர்வ அனுசரனையாளர் களாக கரம் கோர்த்துள்ளனர்.

இரு மனம் இணையும் திருமணத் தேடலை இலகுவாக்கும் அருந்ததி...! •

# புலமைச் சிகரம்

## தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
வி னாத்தாள்

நேரம் : 1 மணித்தியாலம்

கல்வி tv CHANNEL

46. இலங்கையில் உலக மரபுரிமைகளாகக் கணிப்புப் பெற்றுள்ள இடங்களின் எண்ணிக்கை.
    (1) 4　(2) 6　(3) 8

47. நீரினாலும், காற்றினாலும் முறையே பரம்பும் வித்துக்கள் அடங்கியுள்ள விடை எது?
    (1) மகோகனி, எண்ணை　(2) மரமுந்திரிகை, பாகல்　(3) கடல்மாங்காய், மகோகனி

48. கிளைகளைக் கொண்ட தாவரம் எது?
    (1) கமுகு　(2) கொய்யா　(3) கித்துள்

49. நுகத்தடி பயன்படுத்தப்படும் கைத்தொழில் எது?
    (1) மட்பாண்டம்　(2) விவசாயம்　(3) ஆடை

50. விளக்குமாறு ஒன்றைப் பயன்படுத்திய பின்னர் அதனை வைக்க வேண்டிய சரியான முறை எது?
    (1) நிலத்தில் கிடையாக வைத்தல் வேண்டும்
    (2) ஈர்க்குகள் மேல் நோக்கி இருக்குமாறு வைத்தல் வேண்டும்
    (3) ஈர்க்குகள் தரையைத் தொடுமாறு வைத்தல் வேண்டும்

51. உடலை வளர்க்கும் ஓர் உணவையும், உடலுக்குச் சக்தியைத் தரும் ஓர் உணவையும் முறையே காட்டும் விடை எது?
    (1) பயறு, சோறு　(2) பலாக்காய், அன்னாசி　(3) பாண், சீனி

52. விற்றமின் B குறைபாட்டினால் ஏற்படக் கூடியது,
    (1) எலும்பு நோய்　(2) பசியின்மை　(3) கண்பார்வைக் குறைபாடு

53. மென்பானப் போத்தல்களில், அவற்றில் அடங்கியுள்ள சீனி மட்டத்தைக் காட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் நிறக் குறியீட்டுத் தொகுதியில் அடங்கும் மூன்று நிறங்களும் எவை?
    (1) சிவப்பு, செம்மஞ்சள், நீலம்
    (2) சிவப்பு, மஞ்சள், பச்சை
    (3) சிவப்பு, நீலம், பச்சை


54. 'ஒடுக்கமான பாலம் முன்னால்' என்பதைக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் உருவக் குறியீடு,



(1)

(2)


(3)

55. 
உருவில் உள்ளவர்,
    (1) ஆனந்த சமரகோன்
    (2) கலாநிதி ஆனந்த குமார சுவாமி
    (3) F.R. சேனநாயக்க

56. 
வேலையை இலகுபடுத்தப் பயன்படும் இப்பொறியின் பெயர் யாது?
    (1) கஸ்பர் வில்
    (2) கப்பி
    (3) தபரய

57. 
இங்கு காட்டப்பட்டுள்ள கலைப்படைப்பு,
    (1) கொடி அலங்காரம்
    (2) பலாப்பெத்தி அலங்காரம்
    (3) சுவர் அலங்காரம்

58. நாகமரப் பூங்கா, இளஞ்சிவப்புப் படிகக்கல் மலை என்பன காணப்படும் மாவட்டம் எது?
    (1) பொலன்னறுவை　(2) மாத்தறை　(3) அநுராதபுரம்

59. 

மின்குமிழ் ஒளிரும் வகையில் சரியாக ஒழுங்குபடுத்தப்பட்ட சுற்றுக்கள் எவை?
    (1) A உம் B உம்　(2) C உம் D உம்　(3) C உம் B உம்

60. 'பறவைகள் விலங்குகள் மீது நாம் அன்பு காட்ட வேண்டும்' என்பதைத் தலைப்பாகக் கொண்டு மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியத்திலும் **ஐந்து சொற்களுக்கு மேல்** இடம்பெற வேண்டும். எழுவாய், பயனிலைத் தொடர்புகளும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருக்க வேண்டும்.)

### விடைகள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 40. (2) | 41.(2) | 42. (2) | 43. (1) | 44. (1) | 45. (1) | 46. (3) | 47. (3) |
| 50. (2) | 51.(1) | 52. (2) | 53. (2) | 54. (1) | 55. (2) | 56. (2) | 57. (1) |

60. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக.



# டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு

## மருத்துவர் சுதத் சமரவீர எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 02

இலங்கையில் கடந்த வருடத்தில் டெங்கு மரணங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும், கடந்த நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் பணிப்பாளர் விசேட மருத்துர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“நாட்டில் தற்போது 15 மாவட்டங்களில் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ளது. எதிர்காலத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு பதிவாகக்கூடும்.

புத்தாண்டு பிறக்கின்ற நிலையில், வழமை போன்று அலுவலகங்கள், பாடசாலைகள் மற்றும் ஏனைய நிறுவனங்களின் செயல்பாடுகள் ஆரம்பமாகவுள்ளன.

இந்நிலையில், குறித்த நிறுவனங்களில் டெங்கு ஒழிப்புக்கான திட்டம் ஒன்று உருவாக்கப்பட வேண்டும்.

நகர் மற்றும் கிராமப் பகுதிகளிலும் டெங்கு நோய் தாக்கம் அதிகரித்துள்ளது” - என்றார்.

(இ)

# ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -06 ஈச்சமோட்டை வீதி ஆதன இல 19/1 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் ஆதனவரிப் பதிவேட்டில் C.S.B. சவரிமுத்து A.G.சவரிமுத்து K.E.சவரிமுத்து என்ற பெயரில் காணப்படுகிறது.

இதன் பின்னகத்தான ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனம் தொடர்பில் பிரசித்த நொத்தாரிசு நடராஜா விஸ்வலிங்கம் முகதாவில் 2942ஆம் இலக்க 27.04 2005 திகதியிட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் முத்தையா செல்லையா கைம்பெண் பொன்னம்மா இவ்வாதனம் தனக்கு உரித்தானது என வெளிப்படுத்தியுள்ளார்.

பின்னர் ஈச்சமோட்டை வீதி, இல 25ஜச் சேர்ந்த செல்லையா சுந்தரலிங்கமும், செல்லையா தனபாலசிங்கமும் சேர்ந்து பிரசித்த நொத்தாரிசு கதிரேசு சிவசுப்பிரமணியம் முகதாவில் 5278ம் இலக்க 19.04.2008ஆம் திகதியிடப்பட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆதனத்தை குணசீலன் அருணா என்பவருக்கு நன்கொடை வழங்கியுள்ளார்கள்.

ஆதன அட்டவணை– வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சுண்டிக்குளி இறை ‘முதலைக்குளம் வயல்’ நிலப்பரப்பு ஒன்று குளி பதின்மூன்று தசம் ஐந்து ஆறு (நில.பர 1 குளி 13.56) வீடும் கிணறும் பயிர் வகைகளும். இது 2005ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 07ஆம் திகதி நில அளவையாளர் பி.தனராஜா அளந்து தயாரித்த 2624ஆம் இலக்கப்படத்தில் துண்டு 1 என அடையாளம் இடப்பட்டுள்ளது. இந்த நிலப்பரப்பு 1 குளி 13.56க்கும் எல்லை.

கிழக்கு :– ஸ்ரெலா துரையப்பாவின் ஆதனம்.

வடக்கு :– சிறிகரன் பெண் இரஞ்சினிதேவியின் ஆதனம்.

மேற்கு :– திரேசம்மா சந்தியாப்பிள்ளையின் ஆதனம்.

தெற்கு:– மயில்வாகனம் பெண் சாந்தினியின் ஆதனமும் ஒழுங்கை முகப்பும் சண்முகராசா பெண் லதாவின் ஆதனமும்

இதடங்கலும் இன்னும் இக்காணியிலிருந்து 12 அடி அகலம் கொண்ட ஒழுங்கையால் தெற்கே இருக்கும் ஈச்சமோட்டை வீதிக்கு போக்குவரத்து செய்யும் பாவிப்புரித்தும்.

தற்போது குணசீலன் அருணா இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது குணசீலன் அருணா என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாதனம்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடியஎப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
கௌரவ முதல்வர்,
மாநகரசபை.

# கைமாறுகின்றன ஆறு அமைச்சுகள்



## நாடு திரும்பிய பஸில் அதிரடி நடவடிக்கை ஜனாதிபதி, பிரதமருடன் கலந்துரையாடல்

கொழும்பு, ஜன. 02

முக்கிய ஆறு அமைச்சுகளின் விடயதானங்கள் கைமாற்றப்படவுள்ளதென அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசின் அமைச்சரவை விரைவில் மறுசீரமைக்கப்படவுள்ளது.

அமெரிக்கா சென்றிருந்த நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று நாடு திரும்பினார். எனவே, இன்னும் ஒரிரு நாட்களில் இந்த மாற்றம் இடம்பெறும் என எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

இதன்போதே முக்கிய ஆறு அமைச்சர்களின் விடயதானங்கள் கைமாற்றப்படவுள்ளன.

இதேவேளை, சில இராஜாங்க அமைச்சுகளும் மாறவுள்ளன என்று தெரியவருகின்றது.

இது தொடர்பில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ, ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோருடன் கலந்துரையாடி வருகின்றார் எனவும் அறியமுடிந்தது.

(இ)

# கூட்டு ஒப்பந்தம் வேண்டும்!

## ஜீவன் தொண்டமான் கருத்து



நுவரெலியா, ஜன. 02

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கூட்டு ஒப்பந்த முறைமை அவசியமாகும் என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நோர்வூட் பகுதியில் நடைபெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

“கூட்டு ஒப்பந்தத்தைச் சிலர் அடிமைச் சாசனம் என்று விமர்சித்தனர். நாம் அதிலிருந்து வெளியேறினோம். மாற்று தொழிற்சங்கங்கள் என்ன செய்யும் என்று அவதானித்தோம். அவர் கள் அரசியல் நடத்தினார்களே தவிர, தொழிற் சங்க நடவடிக்கைகளில் தொழிலாளர்களின் நலனுக்காக அக்கறை காட்டவில்லை.

எனவே, தொழிற்சங்க நடவடிக்கையில் இ.தொ.கா. தற்போது முழுவீச்சுடன் களமிறங்கியுள்ளது” - என்றார்.

(இ)

# ஒரே அறிகுறிகளைக் கொண்ட கொரோனாவும் டெங்கு நோயும்

## அவதானத்துடன் செயல்படுமாறு மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 02

வாசனை மற்றும் சுவை அறியாமை ஆகியவற்றைத் தவிர கொரோனா மற்றும் டெங்கு நோய்க்கான அறிகுறிகள் அனைத்தும் சமனானவை என கொழும்பு தேசிய வைத்திய சாலையின் விசேட மருத்துவ நிபுணர் உபுல் திஸாநாயக்க தெரிவித்தார்.

கொரோனா மற்றும் டெங்கு ஆகிய இரண்டும் தொற்றிய நோயாளிகளும் அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

தனக்குக் கீழ் அப்படியான நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

”கொரோனா நோயாளிகளை விட தற்போது டெங்கு நோயாளிகளை அதிகம் காண முடிகின்றது.

கொரோனா பூஸ்டர் தடுப்பூசியின் பக்கவிளைவுகளாக உடல் தசைகளில் வலி, காய்ச்சல், தலைவலி ஆகியன ஏற்படலாம். எனினும், கடுமையான காய்ச்சல் மற்றும் தசை வலி ஏற்பட்டால் அது டெங்குவாக இருக்கலாம்.

பூஸ்டர் தடுப்பூசியின் பக்கவிளைவு எனக் கருதி, சிகிச்சை பெறாமல் இருந்த டெங்கு நோயாளிகள் சிலருக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்ட சில சம்பவங்கள் நடந்துள்ளன.

இதனால், மருத்துவர் ஒருவரிடம் சென்று தமக்கு ஏற்பட்டிருப்பது கொரோனாவா, டெங்குவா அல்லது பூஸ்டர் தடுப்பூசியின் பக்கவிளைவா என்பதை அறிந்து கொள்வது நல்லது” - என்றார்.

(இ)

# பஸ்ஸில் பயணம் செய்த ஒமைக்ரோன் நோயாளிகள்

## ஒரே குடும்பத்தில் இருவருக்குத் தொற்று உறுதி

கொழும்பு, ஜன. 02

வெலிவேரிய பகுதியில் ஒமைக்ரோன் தொற்றாளர்கள் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை மஹர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது எனச் சிங்கள இணையத்தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐந்து பேரைக் கொண்ட குடும்பத்தில் இருவருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

50 வயதான தந்தை மற்றும் 25 வயதான மகள் ஆகியோரே ஒமைக்ரோன் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா நோய் அறிகுறிகள் தென்பட்ட நிலையில், இருவருக்கும் நடத்தப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் ஊடாக தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என மஹர சுகாதார வைத்திய அதிகாரி நிஹால் கமகே தெரிவித்துள்ளார்.

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய மூவருக்கும் நோய் அறிகுறிகள் தென்படுகின்ற நிலையில், அனைவரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் எனவும், இவர்களுக்கு ஒமிக்ரோன் தொற்று எவ்வாறு பரவியது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஒமைக்ரோன் தொற்றுடன் அடையாளம் இருவரும் சீதுவ பகுதியிலுள்ள தனியார் நிறுவனமொன்றில் கடமையாற்றி வருகின்றனர் எனவும், இரு வரும் பஸ்ஸிலேயே பயணித்துள்ளனர் எனவும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. (இ)

## உயிர்த்த ஞாயிறு...

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் முன் னாள் இராஜாங்க அமைச்சருமான இரா தாகிருஷ்ணன் எம்.பி. தெரிவித்தார்.

ஹற்றன் நோர்ட்டன் - பிரிட்ஜ்ஜில் அமைந்துள்ள 'துதியின் தோட்டம்' தேவாலய நிர்வாகத்தால் நேற்றுமுன்தினம் ஏற்பாடு செய்யப்பட்ட வருடத்தின் இறுதி நாள் ஒன்றுகூடலுக்கு சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்ட நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலுசாமி இராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

அதன் பின்னர் அவர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது மேலும் கூறியதாவது: -

"2021 ஆம் ஆண்டு முடிவடைந்துள்ளது. அதிகளவு துன்பங்களை வழங்கிய ஆண்டாக அது அமைந்துவிட்டது. கொரோனா ஆக்கிரமிப்பால் பொருளாதாரமும் கடுமையாக பாதிக்கப்பட்டது. எல்லாவற்றுக்கும் மக்கள் வரிசையில் காத்திக்க வேண்டிய பேரவலமும் ஏற்பட்டது.

எனவே, மலரும் புத்தாண்டு சுபீட்சமாக அமையவேண்டும் என்று பிரார்த்திப்போம். இதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவமானது இந்த நாட்டையே உலுக்கியது. அந்தத் தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்ட மற்றும் உறவுகளை இழந்தவர்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லை. சூத்திரதாரி யார் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை. அதற்கான விசாரணைகளைத் துரிதப்படுத்தப்பட்டு, நீதி நிலைநாட்டப்பட வேண்டும். இந்த விடயத்தில் பக்கச்சார்பற்ற விசாரணையை எதிர்ப்பார்க்கின்றோம்.

யுகதனவி விவகாரத்தில் இந்த அரசு முறையற்ற விதத்திலும், வெளிப்படைத் தன்மை இன்றியுமே செயற்படுகின்றது. உரிய முகாமைத்துவம் இல்லை. அதனால்தான் பணவீக்கம்கூட அதிகரித்து வருகின்றது" - என்றார். (இ)

## பாடசாலைகள்...

டுக்கான மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகளுக்காகவே அனைத்துப் பாடசாலைகளும் நாளை ஆரம்பமாகின்றன என்று கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தர பரீட்சைகளை நடத்துவதற்காக நாடளாவிய ரீதியிலுள்ள சகல பாடசாலைகளிலும் ஆரம்ப பிரிவு தவிர்ந்த ஏனைய வகுப்புக்களுக்கு பெப்ரவரி 3 ஆம் திகதி மீண்டும் விடுமுறை வழங்கப்பட்டு, மார்ச் 7 ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது.

நாடளாவிய ரீதியிலுள்ள தமிழ் மற்றும் சிங்கள பாடசாலைகளுக்கு மாத்திரம் ஏப்ரல் 8 ஆம் திகதி விடுமுறை வழங்கப்பட்டு 18 ஆம் திகதி பாடசாலைகள் மீளஆரம்பிக்கப்படும். இதேபோன்று நாடளாவிய ரீதியிலுள்ள இஸ்லாம் பாடசாலைகளுக்கு ஏப்ரல் முதலாம் திகதி விடுமுறை வழங்கப்பட்டு மே மாதம் 4 ஆம் திகதி பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்படும்.

அதற்கமைய 2021 ஆம் ஆண்டு சாதாரண தர மாணவர்களுக்கான கல்வி ஆண்டு ஏப்ரல் 18 ஆம் திகதி நிறைவடைவதாக கல்வி அமைச்சு கடந்த வாரம் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## 'சாதனை தமிழர்'...

ராணிக்கு வழங்கப்பட்டது.

டான் தொலைக்காட்சியின் 21ஆவது ஆண்டு நிறைவு விழாவான நேற்று முன்தினம் இரவு முற்றவெளியில் இடம்பெற்ற நிகழ்வில் அவருக்கு சாதனை தமிழர் விருது வழங்கப்பட்டது.

இந்த விருதை, சாதனை தமிழன் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ். மாவட்ட குருமுதல்வர் ஜெபரட்ணம் அடிகளார், யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி அ. பிறேம்சங்கர், யாழ். பல்கலைக்ககழக துணைவேந்தர் சி. சிறீசற்குணராஜா, யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. மகேசன், டான் தொலைக்காட்சி குழும தலைவர் எஸ். எஸ். குகநாதன் இணைந்து வழங்கினர். இதன்போது, விருது தெரிவு குழு தலைவர் எஸ். லலீசனும் உடனிருந்தார்.

இதன்போது, கருத்துத் தெரிவித்த சாதனை தமிழர் கி. சாய்ராணி, "ஜனாதிபதியிடம் விருது பெற்றிருந்தாலும், சொந்த மண்ணில் சாதனை தமிழச்சியாக விருது பெற்றமை பெருமையளிக்கிறது.", என்று கூறினார். (ஐ)

## நாட்டில் 12...

யும். இது ஒமைக்ரோன் வேகமாக பரவத் தொடங்கியுள்ளது என்பதற்கான சிறந்த சாட்சியாகும் என்று சுகாதார மேம்பாட்டு பணியகத்தின் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ரஞ்சித் பட்டுவந்துட்டாவ தெரிவித்தார்.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தில் அவர் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது, அவர் மேலும் கூறுகையில், ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தால் சுமார் 170 மாதிரிகளில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 41 ஒமைக்ரோன் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். இதன் அடிப்படையில் நூற்றுக்கு 12 சதவீதமானோருக்கு ஒமைக்ரோன் தொற்று ஏற்பட்டுள்ளது என்று எதிர்வு கூற முடியும். நாட்டில் ஒமைக்ரோன் வேகமாக பரவ ஆரம்பித்துள்ளது என்பதற்கு இது சிறந்த சான்றாகும்.

இதேவேளை மூன்றாம் கட்ட தடுப்பூசியின் முக்கியத்துவமும் இதன் மூலம் வெளிப்படுகிறது. எவ்வாறிருப்பினும் டெல்டாவுடன் ஒப்பிடும்போது ஒமைக்ரோன் வைரஸால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் குறைவாகும் என்று சர்வதேச ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஆனால், 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஒமைக்ரோன் தொற்றுக்கு உள்ளானால் பாதிப்படையக் கூடிய சந்தர்ப்பம் அதிகமாகும்.

எனவே, எந்த வைரஸாக இருந்தாலும் ஆபத்தை உணர்ந்து , சுகாதார தரப்பினரால் வெளியிடப்படுகின்ற பாதுகாப்பு வழிமுறைகளை முறையாக பின்பற்றுமாறு மக்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் - என்றார். (ஐ)

## கசூரினா கடலில்...

தரத்தில் கற்றுவரும் யோகராசா யோகீசன் வயது - 17 என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

புத்தாண்டு தினமான நேற்று கோண்டாவிலை சேர்ந்த 20 பேர் கொண்ட இளைஞர் குழு ஒன்று சுற்றுலாவாக காரைநகர் கசூரினா கடற்கரைக்கு சென்றிருந்தது.

இவர்கள் கடலில் குளித்துக் கொண்டிருந்தபோது இரு இளைஞர்களை கடல் அலை அடித்துச் சென்றது. இளைஞர்களின் உதவிக்குரல் கேட்டு அப்பகுதியில் நின்றிருந்த கடற்படையினர் ஓர் இளைஞரை காப்பாற்றினர். மற்றைய இளைஞரை அப்பகுதி மீனவர்களும் சேர்ந்து நெடு நேரம் தேடினர்.

நீண்ட நேரத் தேடுதலின் பின்னர் மாணவன் சடலமாக மீட்கப்பட்டார் என்று அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## நல்லூர்...

குட்டைப்பாவடை அணிந்துவரும் பெண்கள் ஆகியோருக்கு ஆலய முகப்பில் சால்வை வழங்கப்படும். அந்த சால்வையை கட்டியவாறே அவர் கள் ஆலயத்துக்குள் நுழைய அனுமதிக்கப்படுவர்.

ஆலய வழிபாட்டில் ஈடுபட்ட பின்னர், அந்த சால்வையை அணிந்தவர்கள் அங்கிருக்கும் பை ஒன்றில் போட்டு அதனை மீளவும் வழங்கப்பட்ட இடத்திலுள்ள பெட்டியில் மீளவும் வைத்து செல்ல வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆலயத்தில் சைவசமயப் பாரம்பரியங்களை பாதுகாக்கும் வகையில் இந்த நடைமுறை தொடர்ந்து நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# நாணய நிதியத்தை நாடுவதா? அமைச்சரவையில் நாளை முடிவு

## அமைச்சர் மஹிந்த அமரவீர

கொழும்பு, ஜன. 02

நாடு தற்போது பெரும் நிதிநெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கும் நிலையில், அதிலிருந்து மீள்வதற்கு வரையறுக்கப்பட்ட தெரிவுகளே காணப்படுகின்றன. எனவே நாளை திங்கட்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவைக்கூட்டத்தில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதா, இல்லையா என்பது குறித்து விசேடமாக ஆராயப்படவுள்ளது.

இதில் அமைச்சர்களுடன் இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் திறைசேரியின் செயலாளர் எஸ். ஆர். ஆட்டிகல ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர் என்று அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தில் அங்கம்வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினால் ஏற்கனவே சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதற்கான யோசனை முன்வைக்கப்பட்டபோதிலும் ஆளுந்தரப்பின் ஏனைய உறுப்பினர்கள் சிலரால் அந்த யோசனை நிராகரிக்கப்பட்டது.

சர்வதேச நிதியத்தை நாடுவதில் எவ்வித தவறுமில்லை. நிதியுதவிக்காக இத்தகைய கட்டமைப்புக்களை நாடும்போது வரையறுக்கப்பட்டளவிலான நிதி மற்றும் நாணயக் கொள்கைசார் நிபந்தனைகளுடனேயே அவை நிதியுதவிகளை வழங்கும்.

ஆனால், அவை நாட்டின் சுயாதீனத் தன்மையிலும் இறையாண்மையிலும் மேற்கொள்ளப்படும் தலையீடுகளாக சிலரால் நோக்கப்படுகின்றன.

இருப்பினும் சர்வதேச நாணய நிதியத்தின் அனைத்து நிபந்தனைகளையும் நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்- என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஐ)

# சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஜனவரி 27இல் மீளத் திறப்பு

கொழும்பு, ஜன. 02

தற்காலிகமாக மூடப்பட்டுள்ள சப்புகஸ்கந்தை எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் ஜனவரி 27ஆம் திகதி மீளத் திறக்கப்படும் என்று வலுசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களிடம் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இந்தத் தகவலை வெளியிட்டார். மசகு எண்ணெய் அடங்கிய கப்பலொன்று ஜனவரி 23ஆம் திகதி இலங்கை வரவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். (இ)

## ஒருமித்த...

நேற்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம். ஏ. சுமந்திரனின் இல்லத்திலுள்ள அவரின் அலுவலகத்தில் முற்பகல் 11.30 மணி முதல் பிற்பகல் 1.30 மணி வரை புதிய நகல் ஆவணம் தயாரிக்கும் முயற்சியில் தலைவர்கள் ஈடுபட்டனர்.

இந்த முயற்சியில் எம். ஏ. சுமந்திரன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் எம். பி., ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் நிஸாம் காரியப்பர், புளொட் தலைவர் த.சித்தார்த்தன் எம். பி., ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி., ரெலோவின் பேச்சாளரும் இந்த முயற்சியின் இணைப்பாளருமான சுரேந்திரன் குருசாமி ஆகியோர் பங்குபற்றினர்.

புதிய ஆவண நகல் தயாரிப்புக்காக தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம். பி. அனுப்பி வைத்த குறிப்பும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

- இந்த ஆவணத்தில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதற்கு அப்பாலும் செல்வோம் என 1987 முதல் இலங்கை - இந்தியத் தலைவர்கள் வழங்கிய உறுதி மொழிகள் நினைவூட்டப்பட்டுள்ளன.
- 13ஆவது திருத்தத்தில் வழங்கப்பட்டு, பின் கைவாங்கப்பட்ட, நடைமுறைப்படுத்தப்படாத அதிகாரப் பகிர்வு விடயங்களை நடைமுறைப்படுத்துவது இந்திய - இலங்கை அரசுகளின் கடப்பாடு என்பது சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.
- சமஷ்டி அடிப்படையிலான தீர்வே இறுதி இலக்காக அமைய வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

சுமார் மூன்று பக்கங்களைக் கொண்ட இந்த நகல் ஆவணத்தின் பிரதிகள் அனைத்துத் தமிழர் தரப்புக் கட்சிகளின் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன. அவர்களின் பிரதிபலிப்பை கவனத்தில் எடுத்து ஆவணம் இறுதி செய்யப்படும் எனத் தெரிகின்றது.

நேற்றைய கூட்டத்துக்கு மனோ கணேசன் வராத நிலையில் இந்த ஆவணம் தொடர்பில் அவரின் அவதானிப்பு முக்கியமாக எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆவணத்தின் பிரதியைத் தம்முடன் எடுத்துச் சென்ற ரவூப் ஹக்கீம் எம். பி., தமது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுடன் விரிவாக உரையாடிய பின்னர் தமது பக்கக் கருத்துக்களைத் தெரிவிப்பார் எனவும் கூறப்பட்டது. (ஐ)

## கிளிநொச்சியில்...

தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த குற்ற செயலில் நான்கு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. (ஐ)

## டிப்பர் - மோட்டார்...

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

ஒரு மோட்டார் சைக்களில் மூன்று இளைஞர்கள் பயணித்தபோதே இந்த விபத்து சம்பவித்துள்ளது.

படுகாயமடைந்த இளைஞர் முல்லைத்தீவு மாவட்ட பொதுவைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்த விபத்தையடுத்து அந்தப் பகுதி மக்கள் நேற்றுக்கூடிய பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். முள்ளியவளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 41 ஒமைக்ரோன்...

தெரிவித்த தாவது: -

177 மாதிரிகளில், 41 பேருக்கு ஒமைக்ரோன் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. அவர்களில் சிலர் சிகிச்சையளிக்கப்பட்டு, வீடுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

மேலும் சிலருக்கு சிகிச்சை மையங்களில் சிகிச்சையளிக்கப்படுவதுடன், சிலர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு, சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

புதிய ஆண்டில் மக்கள் தமது கடமைகளைச் செவ்வனே முன்னெடுத்துச் செல்ல நாடு முழுமையாக திறக்கப்பட்டுள்ளது.

எனினும், ஒமைக்ரோன் போன்ற புதிய வைரஸ் திரிபுகள் நாட்டுக்குள் பரவி வருகின்றதை மக்கள் கவனத்தில்கொள்ள வேண்டும்.

சுகாதார அமைச்சால் வெளியிடப்பட்டுள்ள புதிய சுகாதார வழிகாட்டல்களைப் பொதுமக்கள் கட்டாயம் பின்பற்ற வேண்டும். இல்லையெனில் மீண்டும் கொரோனா பரவல் அதிகரிக்கக் கூடும்" - என்றார். (இ)

ஈழநாடு
Eelanadu





யாழ்ப்பாணம் – மருதனார்மடம் அருள்வளர் ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேயர் ஆலய இரதோற்சவப் பெருவிழா இன்று(01) காலை மிகவும் பக்தி பூர்வமாக இடம்பெற்றது.
படங்கள்: ஐ.சிவசாந்தன்

# பிறந்துள்ள புதிய ஆண்டில் ஆட்டம் காணும் இந்த அரசு

## சஜித் அணி கூறுகின்றது



கொழும்பு, ஜன. 02

“நாட்டின் பொருளாதாரம் படுவீழ்ச் சிக்குச் சென்றுள்ளது. பிறந்துள்ள புதிய ஆண்டில் இந்த அரசு ஆட்டம் காண்பது உறுதி.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான விஜித் விஜயமுனி சொய்சா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது: -

“ஜனாதிபதி கோட்டாபய ராஜ பக்ஷவால், வழங்கப்பட்ட உறுதி மொழிகள் நிறைவேற்றப்படவில்லை. அவரால் சுயமாகச் சிந்தித்துச் செயற்பட முடியவில்லை. இந் நிலையில் ஜனாதிபதி செயலாளர் பதவியை மாற்றினால் சரியா? பிரச்னைகள் தீருமா? பல்வேறு வழக்குகளுடன் தொடர்புடைய ஒருவரை புதிய செயலாளராக நியமிப்பதன் மூலம் நெருக்கடி தீர்ந்துவிடுவா?

நாட்டில் இன்று பொருட்களின் விலைகள் அதிகரித்துள்ளன. மக் களுக்கு கடும் நெருக்கடி. உண வின்றி தவிக்கும் நிலை உருவாகி யுள்ளது. ஊழல், மோசடிகளும், முறையற்ற அபிவிருத்திகளும் நெருக்கடி நிலைமைக்கு காரணம்.

தற்போது பிரபாகரன் உயிரு டன் இருந்திருந்தால் டொலரை வழங்குமாறு அவரிடமும் இந்த அரசு கோரியிருக்கும். அதற்குப் பதிலீடாக வடக்கு, கிழக்கு கைய ளித்திருக்கும். ஏனெனில் இன்று நாட்டிலுள்ள பெறுமதியான வளங் கள் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டு வருகின்றன” - என்றார். (இ)

# 10 ஆயிரம் தனியார் பஸ் ஊழியர்கள் சேவையிலிருந்து திடீரென விலகல்!

## கெமுனு விஜேரத்ன கவலை

கொழும்பு, ஜன. 02

நாட்டில் சுமார் 10 ஆயிரம் பஸ் சேவையாளர்கள், தற்போது சேவையிலிருந்து விலகியுள்ளனர் என்று அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தற்போது 50 சதவீதமளவில், நாடளாவிய ரீதியில் பஸ்கள் சேவையில் ஈடுபடுகின்றன என்று அந்தச் சங்கத் தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

இதனால் பஸ் சேவையாளர்களுக்குப் பாரிய பற்றாக் குறை நிலவுகின்றது.

தற்போது வரையில் சுமார் 10 ஆயிரம் சேவையாளர் கள் சேவையிலிருந்து விலகி, வேறு தொழில்களை நாடியுள்ளனர்.



இதன் காரண மாக, தனியார் பஸ் தொழில்துறை பாரிய பிரச்னையை எதிர் நோக்கியுள்ளது என்றும் அகில இலங்கை தனியார் பஸ் உரிமையாளர் கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன மேலும் கூறியுள்ளார். (இ)

# பஸ்ஸில் பயணம் செய்த ஒமைக்ரோன் நோயாளிகள்

## ஒரே குடும்பத்தில் இருவருக்குத் தொற்று உறுதி

கொழும்பு, ஜன. 02

வெலிவேரிய பகுதியில் ஒமைக்ரோன் தொற்றாளர்கள் இருவர் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தத் தகவலை மஹர சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது எனச் சிங்கள இணையத் தளமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐந்து பேரைக் கொண்ட குடும்பத்தில் இருவருக்கே இவ்வாறு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

50 வயதான தந்தை மற்றும் 25 வயதான மகள் ஆகி யோரே ஒமைக்ரோன் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

கொரோனா நோய் அறிகுறிகள் தென்பட்ட நிலை யில், இருவருக்கும் நடத்தப்பட்ட பி. சி. ஆர். பரிசோ தனையின் ஊடாக தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள் ளது என மஹர சுகாதார மருத்துவ அதிகாரி நிஹால் கமகே தெரிவித்துள்ளார்.

இந்தக் குடும்பத்தைச் சேர்ந்த ஏனைய மூவருக்கும் நோய் அறிகுறிகள் தென் படுகின்ற நிலையில், அனை வரும் தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர் எனவும், இவர்களுக்கு ஒமைக்ரோன் தொற்று எவ்வாறு பரவி யது என்பது இதுவரை கண்டறியப்படவில்லை எனவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

ஒமைக்ரோன் தொற்று டன் அடையாளம் இருவ ரும் சீதுவை பகுதி யிலுள்ள தனியார் நிறுவனமொன் றில் கடமை யாற்றி வருகின்றனர் எனவும், இருவரும் பஸ்ஸிலேயே பயணித்துள்ளனர் எனவும் விசாரணை களின்போது தெரியவந்துள்ளது. (இ)







# ரயில் - கார் மோதி விபத்து தீப்பற்றியதில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், ஜன. 02

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு சென்ற ரயிலு டன் கார் ஒன்று மோதியதில் அது தீப்பிடித்து எரிந்ததில் ஒருவர் உயிரிழந்தார். இந்த விபத்து வனவாசலை பகுதி யில் நேற்று மதியம் 12. 30 மணியளவில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த உத்தரதேவி கடுகதி ரயிலுடன் இவ்வாறு கார் மோதி யது. ரயிலுடன் சுமார் 200 மீற்றர் தூரத்துக்கு கார் இழுத்துச் செல்லப்பட்ட நிலையில் அது தீப்பிடித்தது.

இதனால், ரயிலின் முன்பகுதியும் தீப் பிடித்து எரிந் ததையடுத்து, அப்பகுதி மக்கள் இணைந்து அதை அணைக்கும் பணியில் ஈடுபட்டனர். (ஐ)

# மைத்திரியை நேரில் சந்தித்த சீனத் தூதர்

கொழும்பு, ஜன. 02

இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென்ஹொங் முன் னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்து, புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இதன்போது முன்னாள் ஜனாதிபதிக்கு புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்த சீனத் தூதுவர், சீன கம் யூனிஸ்ட் கட்சியின் வாழ்த்துக்களையும் தெரிவித்தார்.

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.01.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-தாஸ்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : COFFE WITH பிரமுகர்
6.00 மணி : கலக்கல் ஸ்ரார்-திறமையாளர்களுக்கான களம்

**இரவு**

7.00 மணி : SPOTLIGHT
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : டான் பட்டிமன்றம்



10.00 மணி: நேர்கொண்ட பார்வை



## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு